கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 14 இதழ் - 12 - மார்ச் 2023*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

## உள்ளே...

**1** பொருளாதார நெருக்கடியின் கவிழ்ந்து வரும் கருமேகம்
ஆசிரியர் குழு.......................................................04

**2** படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்...............................................06

**3** தமிழ் பயிற்று மொழியாகத் தடை என்றும் ஆங்கிலமே?
டாக்டர். சு. நரேந்திரன்..............................................11

**4** திறந்த மார்க்சியம்: மேற்கிலிருந்து ஒரு புதிய குரல்: இயக்கவியலும் வரலாறும்
ந. முத்துமோகன்......................................................17

**5** கோவில் ஆய்வுச் சேகரிப்பின் சிக்கல்கள்
அ.கா.பெருமாள்........................................................21

**6** கடந்து வந்த காலம்
பாவண்ணன்.............................................................25

**7** தாய்ப்பாலும் நஞ்சாகுமா?
மருத்துவர் ப.வைத்திலிங்கம்.......................................29

**8** ‘பாமர இலக்கியம்’ புதினத்தில் கிராமியப்பதிவுகள்
முனைவர் பெ.முருகன்................................................33

**9** தேடுவோம் மாற்றத்திற்கான இளைஞர்களை
க. பழனித்துரை.........................................................38

**10** பண்பாட்டு எழுத்து
இரா.காமராசு...........................................................43

**11** மனிதனின் பயணம்
எஸ்.விஜயன்............................................................51

**12** கவி கா.மு.ஷெரீபின் ‘மச்சகந்தி’
பேராசிரியர் உ. அலிபாவா..........................................61

**13** வ.உ.சி கப்பல் தந்த விடுதலை எழுச்சி!
பாரதிபாலன்............................................................65

**14** சங்க இலக்கிய திணை மயக்கம்: சமகாலப் புரிதல்
முனைவர் சி. முத்துகந்தன்..........................................71

# பொருளாதார நெருக்கடியின் கவிழ்ந்து வரும் கருமேகம்

தகவல் தொழில்நுட்பம் மற்றும் நவீனத் தொழில்நுட்ப அரங்கத்தின் பன்னாட்டு பகாசுர நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் ஆட்குறைப்பைச் செய்து வருகின்றன. முகநூலை நடத்தும் ‘மெட்டா’ - 11 ஆயிரம் பேர், அமேசான் - 18 ஆயிரம் பேர், கூகுள் - 12 ஆயிரம் பேர், மைக்ரோ சாஃப்ட் - 10 ஆயிரம், டெல் 6650, ஐபிஎம் 3900, டுவிட்டர் 3700... என கடந்த சில மாதங்களில் பணியாளர்களை வீட்டிற்கு அனுப்பியுள்ளன. இந்தியாவிலும் பெரிய எண்ணிக்கையில் வேலை இழப்பு நடந்து கொண்டிருக்கிறது. சேவைத்துறை எனும் மூன்றாம் அரங்கில் ஏற்படும் இந்த விபரீதங்கள் வேளாண்துறை மற்றும் தொழில்துறை நெருக்கடிக்கான முன்னறிவிப்புகள் எனலாம்.

1932-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வெடித்த ‘பெருவீழ்ச்சி’ *(Great Depression)* எனும் பொருளாதார நெருக்கடி, அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் வெளியே பெரிய தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. 2008-ம் ஆண்டு நேர்ந்த ‘பெருமந்தம்’ *(Great Recession)* என்பது கூட இந்தியா, சீனா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளை அதிகம் பாதிக்கவில்லை என்றுதான் கூற வேண்டும்.

ஆனால் தொடர்ந்து நடந்த உலகமயமும் அதனோடு நடந்த தாராளமயம், தனியார்மயம் ஆகியவையும் இணைந்து, இந்தியா, சீனா, ஆப்பிரிக்க நாடுகளும் எதிர்வரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க இயலாத நிலைமையை உருவாக்கியுள்ளன.

மீண்டும் மீண்டும் தவிர்க்கவியலாது திரும்பிவரும் இந்த நெருக்கடிகளில் சாமானிய உழைக்கும் மக்கள்தாம் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாவார்கள் என்பதே வரலாறு. குறிப்பிட்ட கால இடைவெளியில் மீண்டும் மீண்டும் வருவதாக, ஆனால் முன்பைக் காட்டிலும் அடிக்கடி வருவதாக, முன்பைக் காட்டிலும் உலகின் அதிகப் பரப்பை, அதிக நாடுகளை, அதிக மக்களை பாதித்து துயரத்திற்கு உள்ளாக்குவதாக, மேலும் மேலும் ஆழமான பொருளாதார வீழ்ச்சியை உருவாக்குவதாக, மேலும் மேலும் அதிக காலம் நீடித்திருப்பதாக இந்த நெருக்கடிகள் உருவாகி வருகின்றன.

பரந்துபட்ட உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரமோ அவர்களது வாங்கும் சக்தியோ உயராது செல்வம் செல்வத்தோடு சில இடங்களில் குவிகின்றன. பணம் தூங்கும் பழக்கம் கொண்டதல்ல *(Money Cannot Sleep)* என்பதால் இப்படிக் குவியும் பணம் முதலீடு செய்யப்பட வேண்டும். உற்பத்தியில் ஈடுபடுத்தி சரக்குகளை உற்பத்தி செய்து விற்று லாபம் சம்பாதிக்கும் வழிகள் இல்லாது போவதால், வங்கிகளும், முதலீட்டு

நிறுவனங்களும், காப்பீட்டு நிறுவனங்களும் சரக்குகளை உற்பத்தி செய்து விற்று லாபம் சம்பாதிப்பதற்குப் பதிலாக உற்பத்தி நிறுவனங்களை வாங்கி விற்பது உள்ளிட்ட ஊகவணிகங்களிலும் ஏனைய பெரும் ஊழல்களில் ஈடுபடுகின்றன. உழைக்கும் மக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் இவற்றில் வைத்திருக்கும் சேமிப்புகளும் உழைக்கும் வயது தாண்டிய இறுதிகால வாழ்க்கைக்கு இருக்கும் வாழ்வாதாரங்களும் ஆவியாய்ப் போகும் கொடுமைகளும் நாள்தோறும் அரங்கேறுகின்றன.

ஆனாலும் இவை ஏன் ஏற்படுகின்றன? எவ்வாறு நீங்குகின்றன? பொருளாதாரம் மீள முடியாத சீர்குலைவிற்கு உள்ளாகுமா? ஆகுமென்றால் இவற்றுக்கான தீர்வு என்ன? என்பவை இவற்றைக் கூர்ந்து கவனிக்கும் யாருக்கும் வரக் கூடிய, வர வேண்டிய வினாக்கள்தாம். இந்த வினாக்களுக்கு மையநீரோட்ட பொருளாதார வல்லுனர்கள், நோபல் பரிசு வென்ற மேதைகள் உலகின் மிக முன்னேறிய நாடுகளின் பொருளாதார நிர்வாகிகள், பொருளாதார மாடல்களை உருவாக்கும் கணிதப் புலிகள், கல்விப்புல பேராசிரியர்கள், உச்சாணிக் கல்வி வளாக *(Ivy Leaugue)* பாடத்திட்ட வகுப்பாளர்கள் முதலிய யாரிடமும் பகுத்தறிவுக்குப் பொருந்தும் விளக்கமோ விடையோ இல்லை. இதனால்தான் போப்பாண்டவர் முதற்கொண்டு முதலீட்டு வங்கிகளின் முகவர்கள் வரை அனைவரும், இறந்து 140 ஆண்டுகள் ஆன ஒருவரையும், முதல் பதிப்பு கண்டு 156 ஆண்டுகள் ஆன ஒரு நூலையும் நோக்கி வருகின்றனர்.

அவர் 'கார்ல் மார்க்ஸ்', அந்த நூல் 'மூலதனம்' எனத் தமிழில் கூறப்படும் தாஸ் கேபிடல், மார்க்ஸ் அதை எழுதியபோது அவரது பிறந்த நாடான ஜெர்மனியிலேயே முதலாளித்துவ உற்பத்தி முறை முழுமையாகக் காலூன்றியிருக்கவில்லை. இங்கிலாந்து, ஹாலந்து, பிரான்ஸ் தவிர ஐரோப்பாவிலேயே முதலாளித்துவத்திற்கு முந்தைய உற்பத்தி முறை எனும் பெருங்கடலின் சிறு தீவுகளாகவே முதலாளித்துவ நிறுவனங்கள் இருந்தன. இன்றைக்கு இந்தியாவில் கூட கத்தரிக்காய் முதல் கல்வி, மருத்துவம் வரை எல்லாம் முதலாளித்துவச் சரக்காக மாறியுள்ளன. மார்க்சும், மூலதனம் நூலும் அவர் வாழ்ந்த காலத்தைவிட, பதிப்பகம் கண்ட காலத்தை விட இன்றைக்குத்தான் பொருத்தப்பாடு அதிகம் எனும் விதமாக உலகம் மாறியுள்ளது.

மூலதனம் நூல் என்.சி.பி.ஹெச் பதிப்பாகத் தமிழில் வெளிவந்து அடுத்த மாதம் (ஏப்ரல் 1998 - ஏப்ரல் 2023) 25 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. நூலின் 6-வது பதிப்பு தற்போது விற்பனையில் உள்ளது. தமிழகத்தின் பல பகுதிகளிலும் உலகின் பல பகுதிகளைப் போல மூலதனம் நூல் வாசிப்பு வட்டங்கள் உருவாகி பரவி வருகின்றன. நாம் வாழும் காலத்தின் இருண்ட பொழுதுகளில் பயணம் செய்ய வேண்டிய பாதை அறிய உதவும் ஒளி விளக்கை இன்னும் பரவலான வாசிப்பிற்கு எடுத்துச் செல்வது, தற்காலிக நிவாரணங்களும், உடனடி முன்னெடுப்புகளும் முழுமையான விடுதலையின் திசைவழியில் அமைவதை உறுதி செய்யும். நவீன சமகால அரசியல் பொருளாதார சமூகவியல் சிந்தனைகள் குறித்து வந்துள்ள நூல்களை வாசிக்கவும் புரிந்து கொள்ளவும் தேவையான அடித்தளத்தை உருவாக்கும். ஆம் இன்றியமையாததுதான் என்றாலும் அடித்தளம்தான்; அதன்மீது நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம், ஏனென்றால் மார்க்ஸ் கூறியது போல நமது பணி மாற்றத்தைக் கொணர்வது!

**- ஆசிரியர் குழு.**

# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்



# 1921 மலபார் எழுச்சி

**1921 Uprising in Malabar, A Collection Of Communist Writings.**
***Nidheesh Narayanan and Vijay Prashad. (Editors) (2022).***
***LeftWord Books, New Delhi 110008.***

(2023 பிப்ரவரி இதழின் தொடர்ச்சி...)

மொங்கம் போகும் சாலையில்
மஞ்சேரியில் இருந்து பலமைல் தொலைவில்
மாண்டு போன ஹிச்கோக்கின்* நினைவுச்
சின்னத்தை நீங்கள் காணலாம். இது
உண்மையான சாத்தானின் கல்லறை!
நம் நெஞ்சின் மீது இதன்
செங்கற்கள் அடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்
பன்றி நம் சோதரர்களைக் கொன்றது.
இந்த நிலமானது தீரமிகு
விடுதலைப் போராளிகளைக் கொண்டது.
ஓ வெள்ளை மனிதனே!
நீ நீண்டகாலம் வாழ விரும்பினால்
விரைவில் இங்கிலாந்துக்குத் தப்பி ஓடிவிடு.

(கம்பலாத் கோவிந்த நாயர் 1944 இல்
எழுதிய"படைப்பாடல்)"**

---

* மலபார் மாவட்டக் காவல்துறை அதிகாரியாக இருந்த ஆங்கிலேயன். இவனுக்கான நினைவுச் சின்னத்தை அகற்ற நடந்த போராட்டத்தில் பாடிச் சென்ற வழிநடைப்பாடல்)

** அணிவகுப்புப் பாடல்

அடிப்படையில் இந்து ஜன்மிகளுக்கு எதிரான இஸ்லாமியக் குடியானவர்களின் போராட்டமாக 1921 மலபார் எழுச்சி உருவானாலும் இப் போராட்டத்தில் இந்துக்களாக இருந்த குடியானவர்களும் இணைந்து கொண்டனர். குடியானவர்களின் ஆற்றலை உணர்ந்திருந்த ஆங்கில அரசு இதுவரை ஜன்மிகள் குடியானவர் முரண்பாட்டை இந்து, இஸ்லாமியர் முரண்பாடாகவே சித்தரித்து வந்தது. இதே நடைமுறையை இந்து ஜன்மிகளும் பின்பற்றி வந்தனர். இவர்களால் நிறுவப்பட்ட 'மலையாள மனோரமா' இதழும் இதே பாதையில் பயணித்தது.

இவ்வாறு மதச் சாயம் பூசுவதன் மூலம் குடியானவர்களின் எழுச்சியை ஒடுக்குவதில் இந்துக்களின் துணையை ஆங்கில அரசு பெற்றுவந்தது. ஆனால் கிலாபாத் இயக்கமும் காங்கிரஸ் இயக்கமும் தமக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட நட்புறவானது இவ்விரு சமயங்களைப் பின்பற்றி வந்தோரிடையிலான முரண்பாடுகளை மட்டுப் படுத்தியது. அத்துடன் வர்க்க உணர்வுடன் கூடிய போராட்டத்தில் ஒன்றிணைத்தது.

**ஜன்மி எதிர்ப்பா? இந்து எதிர்ப்பா?**

மொய்ராத் சங்கரன் என்ற காங்கிரஸ்காரர் (பின்னால் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்தவர்) இவ் எழுச்சி குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டார்: *"மலபார் குடியானவர் எழுச்சியானது அதன் தொடக்கம் முதல் இறுதிவரை ஆங்கிலேயரின் நிர்வாகத்திற்கு எதிரான பேரியக்கமாக இருந்தது. எந்த நேரத்திலும் அது இந்து இஸ்லாமியர் மோதலாக இருக்கவில்லை. ஆனால் இப்போராட்டத்திற்கு ஆங்கில அரசு மதச்சாயம் கொடுத்து இந்து முஸ்லிம் மோதல் என்று அடையாளப்படுத்தியதையும் செய்தித்தாள்களில் இவ்வாறு வெளியானதையும் இதைக் காந்தி கண்டுகொள்ளாதிருந்ததும் என்னைப் போன்ற காங்கிரஸ்காரர்களுக்கு அதிர்ச்சி அளித்தது.*

*மேலும் காலனிய அரசினால் வழிநடத்தப்பட்ட இஸ்லாமியர்கள் சிலர் இந்துக்களின் வீடுகளையும் குடும்பங்களையும் தாக்கி இவ் எழுச்சிக்கு மதச்சாயம் பூசினர். இச் செயலானது கிலாபாத் இயக்கம் மற்றும் குடியானவர் எழுச்சியின் நற்பெயரைச் சிதைத்தது."*

உண்மையில் இயக்கத்தின் தலைவர்கள் இத்தகைய வன்முறையை விரும்பவில்லை. மாதவன் நாயர் என்ற இந்து, மும்பை குரோனிகல் *(Bombay Chronicle: 1921September 19, 27)* என்ற ஆங்கில இதழில் எழுதிய இரு கட்டுரைகளில் இவ் எழுச்சியின் அடிப்படைக் காரணம் குடியானவர் எழுச்சிதான் என்றே குறிப்பிட்டுள்ளார். இவ் எழுச்சிக்கு முன்னரே சிறிய அளவில் குடியானவர் எழுச்சி 19 ஆவது நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆவது நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிகழ்ந்துள்ளதாகக் கூறியுள்ளார். மலபாரின் மாவட்ட ஆட்சியராக இருந்த கனோலி *(Connolly)* என்ற ஆங்கிலேயர் இக்கலகங்களின் வேராக அமைவது விவசாயப் பிரச்சினைதான் என்று குறிப்பிட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் குடியானவர்கள் மீது இழைக்கப்படும் அநீதிக்கு முடிவு கட்டவேண்டும் என்று அரசுக்கு அவர் பரிந்துரைத்ததையும் அதன் அடிப்படையில் ஓர் ஆணையம் அமைக்கப் பட்டதையும் அறியச்செய்துள்ளார். ஆனால் அந்த ஆணையம் வேறு வகையான கருத்தை வெளிப்படுத்தியது.

அவர்களின் சமயத்தலைவரான "தங்கல்" இஸ்லாமிய சமயத்தினர் மீது மிகுந்த செல்வாக்கு உடையவராக இருப்பதாகவும் அது பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்றும் குறிப்பிட்டது. இதை ஏற்றுக்கொண்டு ஆங்கில அரசு குடும்பத்துடன் அவரை அரேபியாவிற்கு நாடு கடத்தியது. பன்னிரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் அழுதவாறே அவரைப் பின் தொடர்ந்தனர். வன்முறைக்கு இடமளிக்கக் கூடாது என்று அறிவுறுத்தி அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டு அவர் கப்பல் பயணத்தை மேற்கொண்டார்.

மாப்பிள்ளைகள் திரும்பத் திரும்ப அரசின் முன் வைத்த ஒவ்வொரு முறையீடுகளும் அன்றைய சென்னை மாநில அரசால் புறக்கணிக்கப்பட்டு வந்தன. இதுவே ஒவ்வொரு கலகத்திற்குப் பின்னாலும் இருந்துள்ளது. குடியானவர்கள் மீது பொருளாதாரச் சுரண்டலை மட்டுமின்றி பண்பாட்டு ஒடுக்குமுறையையும் 'ஜன்மிகள்' நிகழ்த்தி வந்தனர். பண்பாட்டு ஒடுக்குமுறை சார்ந்து அவர்கள் உருவாக்கி நடைமுறைப்படுத்திய சட்டங்களை இக்கட்டுரையில் மாதவன் நாயர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி குடியானவர்கள் எத்தகைய ஆடை அணிய வேண்டும், எத்தகைய வீட்டில் வசிக்கவேண்டும், எப்படித் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பதை ஜன்மிகள் முடிவு செய்திருந்தனர்


இச்செய்திகளை எல்லாம் தம் இரு கட்டுரைகளில் பதிவிட்டுள்ளதுடன். 1921இல் நிகழ்ந்த எழுச்சிக்கும் அதற்கு முன்னர் நிகழ்ந்த எழுச்சிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளையும் சுட்டிக்காட்டி உள்ளார். முந்தைய எழுச்சிகளைவிட 1921ஆவது ஆண்டு எழுச்சி பரந்துபட்டதாகவும் தீவிரத்தன்மை கொண்டதாகவும் விளங்கியது. ஒத்துழையாமை இயக்கமும், பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தில் மிகுதியான அளவில் பணியாற்றி இராணுவப்பயிற்சியை அவர்கள் பெற்றிருந்தமையும் இதற்குக் காரணம் என்பது அவரது கருத்தாக உள்ளது.

தோழர் இ.எம்.எஸ். 1921 மலபார் குடியானவர் எழுச்சி குறித்த தமது கட்டுரை ஒன்றில் சில ஆழமான வினாக்களை எழுப்பி விடையும் தந்துள்ளார். மாப்பிள்ளை முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளுடன் மலபார் எழுச்சி ஏன் நின்று போய்விட்டது?

ஜன்மிகள், அதிகாரிகள், ஆகியோரின் ஒடுக்குமுறையும் சுரண்டலும் மலபார் மாப்பிள்ளைகளுக்கும் இந்துக்களுக்கும் ஒரே தரத்தனவாய்த்தான் இருந்துள்ளன. ஆனால் மலபார் எழுச்சியானது இந்துக்களுக்கு எதிரானது ஜன்மிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் எதிரானதல்ல என்ற பரப்புரைக்கு ஏன் பலியானார்கள்? இவ்வினாக்களுக்கு அவர் அளித்துள்ள விடை வருமாறு:

மாப்பிள்ளைக் குடியானவர்கள் இந்துக் குடியானவர்களை விட அமைப்பு அடிப்படையில் நன்றாக அணி திரண்டிருந்தார்கள். இதற்குக் காரணம் மாப்பிள்ளைகளின் கூட்டுவழிபாடுகள் *(Congregational Prayers)*,பொது விருந்துகள், தமக்குள் கொண்டுள்ள சமத்துவ உணர்வு, என்பன பிற சமூகங்களைக் காட்டிலும் ஒன்றிணைந்து செயல்படத் துணை நின்றது.

இந்துக் குடியானவர்களைப் பொறுத்த அளவில் கிலாபாத் இயக்கமானது ஜன்மிகள் அரசு




அதிகாரிகள் ஆகியோரிடம் இருந்து விடுதலை பெறத் துணைநிற்பது. ஆனால் இஸ்லாமியர்களுக்கோ தம் சமயத் தலைமையைப் பாதுகாப்பது. அவர்களது உள்ளூர் மற்றும் வட்டாரத் தலைவர்களாக விளங்கிய "முசாலியார்கள்", "தங்கல்கள்" "ஹாஜிகள்" பிற புனிதத் தலைவர்கள், ஆகியோரை உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாகக் கருதினார்கள்.

இத் தலைவர்கள் சமயநோக்கில் சிந்தித்து சமயமொழியில் பேசினார்கள். இது மாப்பிள்ளைகளை ஓரணியில் திரட்டப் பெரிதும் துணை நின்றது. இதனால் வர்க்க அரசியலைக் காட்டிலும் சமய அரசியலுக்குள் ஈர்க்கப்பட்டார்கள்.

தோழர் இ.எம்.எஸ்.சின் இவ்விளக்கம் இனவரைவியல் என்ற அறிவுத்துறை சார்ந்த ஒன்றாக உள்ளது. எந்த ஒரு போராட்டத்திலும் அதில் ஈடுபடுபவர்களின் பண்பாட்டுத் தாக்கம் செல்வாக்கு செலுத்தும் என்பது ஒரு பொதுவான வரலாற்று உண்மை. இவ் உண்மையைத்தான் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மற்றபடி சமய அரசியலை அவர் நியாயப்படுத்தவில்லை.

ஒரு கட்டுக்கோப்பான சமூகம் என்ற அடிப்படையில்... மாப்பிள்ளைகள் மலபார் குடியானவர் எழுச்சியில் முன்னணியில் நின்ற போதிலும் இந்துக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை அவர்கள் எடுக்கவில்லை. இப்போராட்டத்தின் போது சில இந்துக்களின் வீடுகள் தாக்குதலுக்காளாயின. இவ் வீடுகள் ஜன்மிகளாகவோ அவர்களின் கையாட்களாகச் செயல்பட்டோரின் வீடுகளாகவோ இருந்தன. ஆங்கில ஆதரவு நிலைப்பாட்டை மேற்கொண்ட இஸ்லாமியர் வீடுகளும் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளன.

**ஆங்கில அரசின் ஒடுக்குமுறை**

தன் ஆளுகையின் கீழ் இருந்த மக்களின் எழுச்சியை ஒரு பகை நாட்டின் மீதான தாக்குதல் போன்றே ஆங்கில அரசு நடத்தியது. காவல்துறை மட்டுமின்றி இராணுவமும் பயன்படுத்தப்பட்டது. எந்திரத் துப்பாக்கி போன்ற போர்க்கள ஆயுதங்கள் குடியானவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த தாமஸ் என்பவர் திரூர்அங்காடி என்ற நகருக்கு மலபார் காவல் படையையும் இராணுவத்தையும் வரவழைத்தார். அவர்கள் ஆயுத வலிமையினால் மக்களைக் கைது செய்ததுடன் மாம்பரம் பள்ளிவாசலைச் சூழ்ந்து கொண்டு அங்கிருந்த மக்கள் திரள் மீது சுட்டார்கள். இதற்குக் காரணமான தாமஸ் மலையாள இதழ்களால் "மலபாரின் டையர்*" என்றழைக்கப்பட்டார். மலபார் எழுச்சியை ஒடுக்க ஆங்கிலக் காலனியம் மேற்கொண்ட கொடூரச் செயல்களின் உச்சகட்டமாக அமைந்தது சரக்கு ரயில் பெட்டி கொடூரம். இக் கொடூரச் செயலை மறைக்கும் வழிமுறையாக அரசு ஆவணங்களில் சரக்கு வாகன சோகம் *(Wagon Tragedy)* என்று குறிப்பிட்டார்கள். இதை சரக்கு வண்டிக் கொடூரம் என்றே குறிப்பிடவேண்டும்.

**சரக்குவண்டிக் கொடூரம்**

சரக்கு இரயில்களில் இணைக்கப்படும் இரயில் பெட்டிகள் மூன்று வகைப்படும். முதலாவது கடினமான இரும்புத்தளத்துடன் மேற்கூரையும் பக்கவாட்டில் கதவுகளும் இல்லாத பெட்டி. நீளமும் எடையும் கூடிய மரத்தடிகள், இரும்பு கர்டர்கள் போன்றவற்றை ஏற்றிச் செல்ல இது பயன்படும்.

இரண்டாவது பக்கவாட்டில் கதவுகளுடன் மேற்கூரையில்லாத பெட்டி. இதில் பெரும்பாலும் நிலக்கரி, ஓடு, கற்கள், நான்கு சக்கர வாகனங்கள் என்பன ஏற்றிச் செல்லப்படும். சிலநேரங்களில் தானியங்கள், சிமெண்ட் என்பன ஏற்றிச் செல்லப்படுவதும் உண்டு. அப்போது மழையில் இருந்து அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறையாக, தார்ப்பாயினால் நன்றாக மூடிக் கயிறுகளால் இறுக்கிக் கட்டிவிடுவார்கள். மூன்றாவது வகைப் பெட்டி மூன்று பக்கமும் கனமான இரும்புத் தகடுகள் அடிக்கப்பட்டு இருபக்கங்களிலும் இரட்டை இரும்புக் கதவுகளுடன் இருக்கும். இதை, ஊர்தியாக மாற்றப்பட்ட பெரியளவிலான இரும்புப் பெட்டி எனலாம். இதில் தானிய மூடைகளும், சிமெண்ட் மூடைகளும், கால்நடைகளும், எந்திரங்களும், துணிகள் போன்றவையும் ஏற்றப்படும். பொருட்கள் ஏற்றப்பட்டவுடன் இருபக்கக் கதவுகளும்

* டையர்: ஜாலியன் வாலாபாக் படுகொலையை 1919இல் நிகழ்த்தியவர்.

வெளிப்புறமாகப் பூட்டப்பட்டுவிடும். கால்நடைகள் ஏற்றப்பட்டால் மட்டுமே காற்றோட்டத்திற்காகக் கதவுகள் திறந்திருக்கும். இச் செய்திகளின் பின்புலத்தில் சரக்குவண்டிக் கொடூரம் குறித்துக் காண்போம்.

1921 மலபார் எழுச்சியை அடக்கும் வழிமுறையாக ஏராளமான குடியானவர்களைக் கைது செய்தது, இதனால் சிறைகளில் இடப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதை எதிர்கொள்ளும் வழிமுறையாக வேறு பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளுக்கு இவர்களை அழைத்துச் செல்லலாயினர்.

இவ்வகையில் இக்கலவரம் தொடர்பாகக் கைதான நூறு பேரை ஆந்திரப் பகுதியில் உள்ள பெல்லாரிச் சிறையில் அடைக்க முடிவெடுத்தனர். 1921 நவம்பரில் மேலே குறிப்பிட்ட மூன்றாவது வகை சரக்குப் பெட்டகத்தில் நூறு கைதிகளையும் ஏற்றினர்.

அவர்கள் அனைவரும் அமர்ந்து பயணிக்க இடம் போதாமையால் நிற்கவேண்டியிருந்தது. கால்நடைகளை ஏற்றிச் செல்லும் போது கூட காற்றோட்டத்திற்காகப் பக்கவாட்டுக் கதவுகளைத் திறந்து வைக்கும் வழக்கத்திற்கு மாறாக இரு பக்கக் கதவுகளையும் அடைத்து வெளிப்புறம் தாளிட்டனர். இரயில் போத்தனூர் சந்திப்பை அடைந்தபோது சரக்குப் பெட்டகத்தின் கதவை அதிகாரிகள் திறந்தனர். திறந்ததும் மலம்,சிறுநீர் என்ற இரண்டின் துர்நாற்றம் வீசியது. நூறு கைதிகளில் 64 கைதிகள் மூச்சுத் திணறி இறந்து போயிருந்தனர். எஞ்சிய 36 கைதிகளை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றபோது அதில் அறுவர் இறந்து போயினர். ஆக மொத்தத்தில் 70 பேர் இறந்து போயினர். இறந்தவர்களில் குன்னப்பல்லி அச்சுதன் நாயர், மேலடத் ஆட்டசங்கரன் நாயர் கிழக்குப்பாலத்தில் தட்டான் உன்னிக் குரியன், சொக்கரம்பாயில் செட்டிச் சிக்கு என்ற நால்வரும் இந்துக்கள் என்பதை பினராய் விஜயன் குறிப்பிட்டுள்ளார்.

(அறை ஒன்றுக்குள் இந்தியர்களால் அடைக்கப்பட்ட ஆங்கிலேயர்கள் மூச்சுத் திணறி இறந்த நிகழ்வை "கல்கத்தா இருட்டறை நிகழ்வு" என்று கற்றுக் கொடுக்கும் நம் வரலாற்று நூல்கள் இக்கொடுமையைக் கண்டுகொள்வதில்லை) இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்த இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் ஆவணங்களில் இருந்து இப்போராட்டம் இன்று நீக்கப்பட்டு மதச்சாயம் பூசப்பட்டுவிட்டது. மலபாரில் இவர்களை ஏற்றிச் சென்ற இரயில் நிலையத்தில் இதன் நினைவாக வரையப்பட்ட ஓவியங்களை நீக்கும் முயற்சியும் நடக்கிறது.

**தோழர் ஏகே.கோபாலனின் மதிப்பீடு:**

1921 மலபார் குடியானவர் எழுச்சியின் வெள்ளிவிழா கொண்டாடப் பட்டபோது 25 ஆகஸ்ட் 1946 இல் அவர் ஆற்றிய உரைக்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1847 இல் இந்திய விடுதலையை ஒட்டி அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டபோது அவர் விடுதலை செய்யப்படவில்லை. இவ்வுரையில்

"நீங்கள் இந்துவாகவோ இஸ்லாமியராகவோ. இருக்கலாம். நீங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும், ஆங்கில ஆட்சி முடிவுக்கு வரவேண்டும் என்று எண்ணுபவராகவும் இருந்தால்1921 இல் நாட்டுப்பற்று மிக்க இளைஞர்கள் மேற்கொண்ட வீரமிகு போராட்டத்தைக் கற்றறிந்து கொள்ளவேண்டும். அதைச் செய்யாமல் நீங்கள் ஆங்கில ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர முடியாது."

என்று அவர் குறிப்பிட்டதே இதற்குக் காரணமாக அமைந்தது. அவர்மீது போடப்பட்ட வழக்கைத் திரும்பப் பெறாது தொடர்ந்து நடத்தவேண்டும் என்று விடுதலை பெற்ற இந்தியாவின் சென்னை மாநில அரசு முடிவு செய்தது.

இம் முடிவை எதிர்த்து அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அவ் வழக்கில் அவர் தாக்கல் செய்த எதிர் மனுவில் 1921 கிலாபாத் இயக்கத்தில் மாப்பிள்ளை முஸ்லிம்கள் வெளிப்படுத்திய வீரமும் தியாகமும் போற்றுதலுக்குரிய ஒன்று. ஒரு போராட்டத்தின் நல்ல கூறுகளை ஏற்றுக்கொள்ளும்படியும் தீய கூறுகளை எதிர்க்கும்படியும் கூறுவது குற்றம் என்றால் நான் குற்றவாளிதான் என்று தன் மனுவில் அவர் குறிப் பிட்டிருந்தார். அவர் குற்றமற்றவர் என்று நீதி மன்றம் அவரை விடுவித்தது,

இவ்வழக்கில் அவரது இப் பொதுக் கூட்ட உரையை எடுத்தெழுதி ஒரு சான்றாக நீதிமன்றத்தில் உள்துறை வழங்கியது. கோழிக்கோடு ஆவணக்காப்பகத்தில் இருந்து அவ்வுரையின் நகல் இந்நூலில் ஒரு கட்டுரையாக இடம் பெற்றுள்ளது. அதில் இடம் பெற்றுள்ள பின்வரும் தொடர்களை இப் போராட்டம் குறித்த மதிப்பீடாகக் கொள்ளலாம்.

"இந்த நாட்டின் மாப்பிள்ளை முஸ்லிம் நண்பர்கள் பி.ஏ. பட்டம் பெற்றவர்கள் அல்லர். பெரிய அளவிலான பள்ளிப் படிப்பைக் கூடப் பயின்றவர்கள் அல்லர். கான்பஹதூர்* பட்டத்தைப் பெற்றவர்களும் அல்லர், ஆனால் அவர்கள் தீரமுடைய மனிதர்கள். இந்த நாட்டின் விடுதலைக்காகச் சொற்பொழிவுகள் ஆற்றியவர்களும் அல்லர். ஆனால் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் அதிகாரிகளையும் எதிர்த்து நின்றவர்கள். துணிச்சல் மிகுந்த மக்கள் முன்னால் துப்பாக்கிகளும் ஆயுதங்களும் வைக்கோல் புரியைப் போன்றவை என்பதை மெய்ப்பித்துக் காட்டியவர்கள். அவர்களால் மூன்றுமாத காலம் ஆட்சி நடத்த முடிந்தது. இதை மறக்க இயலுமா? இது கொண்டாடப் படவேண்டிய ஒன்றுதானே!"


●

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்

* தன் அடிவருடிகளுக்கு ஆங்கில அரசு வழங்கிய மதிப்புறு பட்டம்

# என்.சி.பி.எச் சிறுநூல் வரிசையில்...

## மார்ச் 2023 வெளியீடு




**இந்திய அரசமைப்பு அவையில்**

# அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர் ஆற்றிய இறுதி உரை

(நவம்பர் 25, 1949)

தமிழாக்கம்

**எஸ்.வி.ராஜதுரை**

இந்திய அரசமைப்பு அவையில் 1949 நவம்பர் 25 அன்று அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர் ஆற்றிய இறுதி உரையின் தமிழாக்கம் இந்தக் குறுநூலில் தரப்படுகிறது. அந்த உரையில் எவை முக்கியமானவை, எவை சரியாகப் புரிந்துகொள்ளப்படகூடியவை, எவை அவரது எண்ணத்திற்கும் இலட்சியத்திற்கும் எதிராகப் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்பைத் தருபவை என்பதை தமிழ் வாசகர்களும், ஆய்வறிஞர்களும், சமூக, அரசியல் இயக்கக் களப்பணியாளர்களும், அவர்களது தலைவர்களும் தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அண்ணலின் உரையின் எந்தப் பகுதியும் இங்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை.



01.03.2023 அன்று பாளையங்கோட்டையில் ‘வரலாற்றில் திருநெல்வேலி’ நூல் வெளியீட்டுவிழா நடைபெற்றது. இதில் முனைவர் நா. இராமச்சந்திரன், லெ.மீனாட்சி சுந்தரம், மயன் தி.த.ரமேஷ் ராஜா, திருநெல்வேலி கோட்டாட்சியர் இரா.சந்திரசேகர், மாவட்ட அருங்காட்சியக காப்பாட்சியர், முனைவர் சிவ.சத்தியவள்ளி, இரா.நாறும்பூநாதன், முனைவர் வ.ஹரிஹரன், முனைவர் சௌந்தர மகாதேவன், கவிஞர் தாணப்பன் கதிர், நூல் தொகுப்பாசிரியர் பூர்ணா மற்றும் என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.



# தமிழ் பயிற்று மொழியாகத் தடை என்றும் ஆங்கிலமே?

டாக்டர். சு. நரேந்திரன்

1914இல் 9, 10, 11ஆவது வகுப்புகளிலும் தமிழைப் பயிற்று மொழியாக்கும் முயற்சி தொடங்கியது. பாரதியார் போன்றவர்கள் தமிழ் பயிற்று மொழியாக வேண்டும் என வற்புறுத்தினர். சட்டசபையில் இது தொடர்பாகத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, தோற்கடிக்கப்பட்டது. காரணம்:

1. மக்கள் மத்தியில் ஆதரவில்லை.
2. போதிய பாடநூல்கள், கலைச்சொற்கள் இல்லை.
3. பல்வேறு தாய்மொழிகளைக் கொண்ட மாணவர்கள் படிக்கிறார்கள்.
4. தாய்மொழியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இல்லை.

இன்று சொல்லப்படும் இதே காரணங்கள்தான் 100 ஆண்டுகளுக்கு முன்னும் சொல்லப்பட்டன என்பது விந்தையாக உள்ளது. 1915இல் நடத்தப்பட்ட ஒரு கணிப்பின்படி, தாய்மொழிவழிப் படிக்கும் மாணவனை விட ஆங்கிலம் வழிப்படிக்கும் மாணவன் திறமை குறைவானவன் என்பது கண்டறியப்பட்டது. எனவே, தாய்மொழிவழிக் கல்வி ஊக்குவிக்கப்பட்டது. ஆங்கிலம் இரண்டாவது மொழியாக, ஆனால் கட்டாய மொழியாக இருந்தது.

1917இல் கல்கத்தா பல்கலைக்கழகக் கமிஷன் தாய்மொழியைப் பயிற்று மொழியாக உயர்நிலைக் கல்விக்குப் பரிந்துரைத்தது. கணிதமும் ஆங்கிலமும் மட்டும் ஆங்கில வழி. விடைகள் ஆங்கிலத்திலோ, தாய்மொழியிலோ இருக்கலாம். அரசும் இதற்கு ஆதரவு தந்தது. ஆனால் மக்கள் மத்தியில் போதிய வரவேற்பு இல்லை,

சட்டசபையில் சத்தியமூர்த்தி 1924இல் எஸ்.எஸ். எல்.சி வரை தாய்மொழியே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். கல்வி இயக்குநர் இதற்கு ஆதரவு தெரி-வித்தார். ஆயினும், இரு மொழியும் பயிற்று மொழியாகலாம் என்றும், பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தரலாம் என்றும் கூறினார்.

இந்தக் காலகட்டத்தில் ஊ.சா.வேங்கடராம ஐயர் 'தாய்மொழியை வளர்த்தல்'என்ற நூலை 1922இல் வெளியிட்டு தமிழ்வழிக் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தினார். 'கல்விப் பயிற்சிக்குரிய தாய்மொழி' என்ற தலைப்பில் வே.இராதா கிருஷ்ணப்பிள்ளை ஒரு கட்டுரை எழுதி, 'பாடமொழியாகத் தமிழ் ஆகுமானால் பாடநூற்கள் தாமே வரும், பாடநூற்கள் இல்லை என்பதை தடையாகக் கூறிப் பயிற்று மொழியாகத் தமிழ் வருவதைத் தடுத்தல் கூடாது' என்றார்.

1925இல் அரசு அனுப்பிய சுற்றறிக்கை ஆங்கிலம் அல்லது தாய்மொழி பயிற்றுமொழியாக இருக்கலாம் என்றும், விடையை எந்த மொழியிலும் எழுதலாம் என்றும் கூறியது.

1930இல் தமிழகத்தில் இருந்த 300 பள்ளிகளில் 55 பள்ளிகளே 4, 5, 6 வது படிவங்களில் (9, 10, 11ஆவது வகுப்பு) தாய்மொழி வழிக் கற்பித்தன. இக்காலக் கட்டத்திற்குப் பிறகே முதன்முதலாக எஸ்.எஸ்.எல்.சி. தேர்வும் தமிழில் எழுதப்பட்டது.

பொதுமக்களிடம் தமிழுக்கு ஆதரவு தேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 6-8-1933 இல் துறையூரில் நடைபெற்ற தஞ்சை - திருச்சி மாவட்டத் தமிழ்ப் புலவர் மாநாட்டுத் திறப்புரையில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தமிழ்வழிக் கல்வி பற்றி வற்புறுத்தியதோடு, பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் அவசியம் என்றும், அதன் மூலம் பாடநூற்கள் இல்லாத குறைதீரும் என்றும் கூறினார்.

1933 டிசம்பர் 27இல் சென்னை பச்சையப்பன் கலாசாலையில் தமிழ் அன்பர் மாநாடு கூடியது. அதற்கு முன் டிசம்பர் 21 அன்று ஒரு புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. 2200 புத்தகங்கள் கண்காட்சியில் இடம் பெற்றன. 70 வெளியீட்டாளர்களும், 150 நூலாசிரியர்களும் புத்தகங்களை அனுப்பியிருந்தனர். இலக்கண இலக்கியப் பகுதியில் 550 நூல்கள் இடம் பெற, சாஸ்திரப் பகுதியில் 325 நூல்கள் இடம் பெற்றன. (சென்னைப் புத்தகாலயப் பிரச்சார சங்க வெளியீடு, 1934) கண்காட்சியைத் திறந்து வைத்த ரைட் ஆனரபின் சீனிவாச சாஸ்திரி, "எந்த விஷயத்தையும் தமிழ்ப் பாஷை மூலமாகவே தெரிந்து கொள்ளும்படியான புஸ்தகங்கள் தமிழில் வெளிவர வேண்டும். தமிழ் அன்பர் மாநாடு இம்முயற்சியைத் தொடங்கவேண்டும். இதுவே என் பிரார்த்தனை" என்று குறிப்பிட்டார்.

**சத்தியமூர்த்தி கல்வி அமைச்சரிடம் கோரிக்கை**

தமிழ் அன்பர் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் அன்றைய சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் ஆவார். அவரைத் தலைமை ஏற்குமாறு வழிமொழிந்த எஸ்.சத்தியமூர்த்தி தனது உரையில், "ஸ்ரீமான் ரெட்டியார் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் செய்துகொள்கிறேன். எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சைக்கு இங்கிலீசைத் தவிர மற்ற பாடங்களைத் தமிழ் மூலமாகத்தான் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற உத்தரவை அவர் போட வேண்டும். அவர் மனம் வைத்தால் அதைச் செய்யலாம். அந்த உபகாரம் என்றும் மறவாத உபகாரமாக இருக்கும்," என்றார்.

குமாரசாமி ரெட்டியாருடைய தலைமை உரை ஒரு முக்கியமான செய்தியைக் கோடிட்டுக் காட்டுகிறது. கல்வி இலாகா அதிகாரிகள் தாய்மொழிக் கல்விக்கு விதிகளைத் தளர்த்தி அனுமதித்தாலும், பொதுமக்கள் தயாராக இல்லை என்பதே அது. அவரது உரையின் பகுதி:

"தாய்ப் பாஷை மூலம் எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்பதை நம்முடைய மஹா ஜனங்கள் அனுபவத்தில் கொண்டுவர வேண்டும். இதை நான் சென்ற வருஷம் யூனிவர்சிட்டியில் பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறேன். நான் என்னுடைய பேனாவை நாட்டி ஒரு வரி எழுதினால் இதைச் செய்து விடலாம் என்று என்னுடைய நண்பர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் சொன்னார். நான் அப்படிச் செய்வது சாத்தியமாயிருந்தால் முன்பே செய்திருப்பேன். கல்வி இலாகா அதிகாரிகளும் அவர்கள் விதிகளும் இடங்கொடுத்தாலும் பொது ஜனங்களுடைய மனம் அதற்கிடம் கொடுக்கவில்லை. மாணவர்களுக்கு மனதிருந்தால் இதைச் சாதித்துக் கொள்ளலாம். பொது ஜனங்கள் மனம் இன்னும் மாறவில்லை. இங்கிலீஷ் மோகம் குறையவில்லை."

இங்கிலீஷ் மோகம் கடந்த 55 ஆண்டுகளில் இன்னும் வளர்ந்திருக்கிறதே தவிரக் குறையவில்லை என்பதே யதார்த்த நிலையாகும். இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம்: 'தமிழ்நாட்டில் எஸ்.எஸ்.எல்.சி வரை எல்லாப் பாடங்களையும் கட்டாயமாகத் தமிழில் சுற்றுக் கொடுக்க வேண்டும்' என வேண்டுகிறது; மற்றொரு தீர்மானம், தற்கால விஞ்ஞான சாஸ்திர கலைகள் அனைத்தையும் தமிழ் மக்கள் 'தம் தாய்மொழி வழியாகவே தெரிந்துகொள்ளுவது அவசியம். ஆதலால் சாதாரண மக்களும் மாணவர்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் அக்கலை நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும்' எனக் கூறுகிறது. மூன்றானது தீர்மானம் கலைச்சொல் பற்றியது.

“தமிழில் தக்க சொற்கள் இல்லாத இடத்து விஞ்ஞான சாஸ்திரம் முதலியனவற்றின் பரிபாஷைச் சொற்களையும் உலக வழக்கில் பொதுமக்களிடையே பெரிதும் பயின்று வரும் பிறமொழிச் சொற்களையும் இயன்ற வரையில் மொழி பெயர்க்காமலே தமிழில் இணைத்துக் கொள்வது உத்தமம்.”

இவ்வகையான முயற்சிகளின் பயனாக 1938இல் உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழியே பயிற்றுமொழி எனத் தீர்மானிக்கப்பட்டது. 394 பள்ளிகளில் தாய்மொழி வழிக்கல்வி நடைபெற்றது என 1942ஆம் ஆண்டுக் கல்வி அறிக்கை கூறுகிறது.

### வார்தா திட்டம்

காந்தியடிகள் 1937ஆம் ஆண்டில் ஹரிஜன் பத்திரிகையில் தாய்மொழிக் கல்வியை ஆதரித்து ஒரு கட்டுரை எழுதி இருந்தார். இதுவே ஒரு திட்டமாக வார்தாவில் 1937இல் கூடிய கல்வி மாநாடு ஒப்புக்கொண்டது. இதில் உள்ள மூன்று திட்டத்தில் தாய்மொழியில் கல்வி புகட்டல் என்பது ஒரு முக்கிய அம்சமாகும். டாக்டர் ஜாகீர் உசேன் தலைமையில் அமைந்த குழுவினரால் இத்திட்டம் ஆராயப்பட்டு கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இத்திட்டமே மும்மொழித் திட்டத்திற்கு வழி வகுத்தது. ஆதாரக் கல்விக் கொள்கையின்படி எல்லாக் குழந்தைகளும் 7 ஆண்டுகள் ஆரம்பக் கல்வி அளிக்க வேண்டும். கல்வி தாய்மொழியிலேயே இருக்க வேண்டுமென்று இதில் வரையறுக்கப்பட்டுச் சொல்லப்பட்டது.

இத்திட்டம் வடக்கிலும் தெற்கிலும் 1937-1939 வரை காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற மாநிலங்களில் நடைமுறைக்கு வந்தது. 1939இல் கவர்னர் ஆட்சியில் இத்திட்டம் கைவிடப்பட்டு, 1947இல் விடுதலைக்குப் பின் திரும்பவும் இது நடைமுறைக்கு வந்தது. பிறகு கைவிடப்பட்டது.

### உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்றுமொழி விவாதம்

சூரிய நாராயணராவ் பந்துலு என்ற உறுப்பினர் உயர்நிலைப் பள்ளிகளில் (IV, V, VI பாரங்கள்) மொழியல்லாத மற்ற அனைத்துப் பாடங்களும் வட்டார மொழிகளில் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை, முதல்முறையாக 20.11.1917ஆம் நாள் எழுப்பினார். இவருடைய கோரிக்கை, பள்ளிகளில் பயிற்றுமொழித் திட்டத்தை மூன்றாவது கட்டத்தை நோக்கி நகர்த்தியது. இதே காலகட்டத்தில் சென்னையில் கூடிய உ.நி.பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மாநாடு வட்டார மொழிகளில் சில பாடங்கள் உட்பட உ.நி.பள்ளிகளில் வட்டாரமொழிகளிலேயே பயிற்றுவிக்கலாம் எனப் பரிந்துரை செய்தது.

### வெங்கடரத்தினம் குழு

1921ஆம் ஆண்டில் வட்டாரமொழிகளைப் பயிற்றுமொழியாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக மூன்றாவது பாரத்துக்கு மேற்பட்ட வகுப்புகள் அனைத்திலும் (IV, V, VI) வட்டாரமொழிகள் மூலமே அனைத்துப் பாடங்களும் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அன்றைய சென்னை மாகாண அரசு ஸ்ரீ வெங்கடரத்தினம் நாயுடுவைத் தலைவராகக் கொண்டு உயர்நிலைப் பள்ளிக்கல்வி பற்றி அறிய ஒரு குழுவை நியமித்தது.

### குழுவின் பரிந்துரைகள்

பயிற்றுமொழி தொடர்பாக அரசுக்கு, வெங்கடரத்தினம் குழு அளித்த பரிந்துரைகள் பின்வருமாறு:

1. நான்காவது பாரம் (Fourth Form) முதல் ஆறாவது பாரம் (Sixth Form) வரையிலான கல்வி அமைப்பில் பயிற்று மொழியாகவும் தேர்வு மொழியாகவும் வட்டார மொழியே அமையவேண்டும்.
2. ஆங்கிலம் அல்லது வட்டாரமொழிகளைப் பயிற்றுவிக்கவும், தேர்வு எழுதவும் தேர்ந்தெடுக்கும் உரிமை பள்ளியின் மானேஜருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.
3. ஆங்கில வழி, வட்டார மொழிவழிக் கல்விக்குச் சரிசமமான நேரம் ஒதுக்கப்பட வேண்டும்.
4. பள்ளி இறுதித் தேர்வுக்கான (S.S.L.C.) கேள்வித்தாள்கள் ஆங்கிலத்திலும் வட்டாரமொழிகளிலும் தயாரிக்கப்பட வேண்டும். (G.O.No.239, Law (Education), dated 14.2.1923)

இக்குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

### பரிந்துரைகளுக்கு எதிர்ப்பும் ஆதரவும்

அரசின் இம்முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் 1921இல் டபிள்யு விஜயராகவ முதலியார் வட்டாரமொழி (First Part) தவிர மற்ற அனைத்துப் பாடங்களும் ஆங்கில வழியிலே கற்பிக்கப்படவேண்டும் எனத் தீர்மானம் கொண்டுவர முயற்சி செய்தார். பயிற்றுமொழித் திட்டத்தினை (IV, V, VI)பாரங்களுக்கு விரிவுபடுத்தவும் ஆங்கிலம் அல்லாத அனைத்துப் பாடங்களுக்கும் தேர்வு வட்டார மொழிகளிலேயே நடத்தவேண்டியும் கோரிக்கைகள் (1919 சூரிய நாராயண ராவ் பந்துலு) எழுந்த காலகட்டத்தில் அதற்கு முரணாக விஜயராகவ முதலியாரின் கோரிக்கை பயிற்றுமொழித் திட்டத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர்களிடமும் எதிர்ப்பு இருந்ததை வெளிப்படுத்தும் சான்றாகும். விஜயராகவ முதலியாரின் தீர்மானத்திற்குப் பதில் அளித்த அரசு கல்கத்தா பல்கலைக்கழக ஆணையத்தின் பின்வரும் தீர்மானத்தைச் சுட்டிக்காட்டியது.

தேர்வு மொழியாக ஆங்கிலம், கணிதம் தவிர மற்றவை அனைத்தும் வட்டார மொழிகளிலேயே

நடத்தப்பட வேண்டும். கணிதத்தேர்வை வட்டார மொழிகளிலே எழுத அனுமதிக்கலாம். இதனைத் தொடர்ந்து விஜயராகவ முதலியார் பயிற்றுமொழியாக ஆங்கிலமே தொடரவேண்டும் என்ற தன் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றார்.

**கட்டாயமாக்கம்: வேண்டுகோள்**

இந்திய விடுதலைப் போராட்ட வீரராகவும் தீவிர காந்தி இயக்க ஆதரவாளராகவும் அறியப்பட்டவர் சத்தியமூர்த்தி. இவர் ஆங்கில மொழிவழிக் கல்வி இந்தியர்களுக்கு எதிரானது என்ற கருத்துடையவர். சத்தியமூர்த்தி அன்றைய சென்னை மாகாணக் கல்வி முறையில் பயிற்றுமொழித் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என 1923ஆம் ஆண்டு தீர்மானம் கொண்டு வந்தார். அத்தீர்மானம் வருமாறு:

"ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வட்டார மொழிகள் வழியாக மாகாணத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் கட்டாயப் பயிற்றுமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் வகையில் கல்விவிதிகளில் மாற்றம் செய்யப்படவேண்டும். மாகாணத்தில் உள்ள பள்ளிகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வட்டாரமொழிகள் வழியாகப் பள்ளி இறுதித் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்." (G.O.No.1851, Law (Education), Dated 27.10.1925)

அவர் கொண்டுவந்த தீர்மானத்தை பனகல் அரசர் (ராமராயநிங்கர்) தலைமையிலான நீதிக்கட்சி அரசு பொதுக்கல்வித்துறை இயக்குநருக்கு அனுப்பி, மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்ட உயர்கல்வி வாரியங்களிடமும் கருத்துக் கேட்டு அனுப்பக் கோரியது. (Memorandum No. 4759/BI Law (Education), Dated 12.01.1924)

1924இல் திரு. சத்தியமூர்த்தி மேல் சபையில், "உயர்நிலைப்பள்ளிகளில் வட்டார மொழிகள் கட்டாயப் பயிற்று மொழியாக்கப்பட வேண்டும்," என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இத்தீர்மானம் மாவட்ட உயர்நிலைக் கல்வி கழகங்களுக்குக் (District Secondary Education Boards) கருத்துக் கேட்டு அனுப்பப்பட்டது. மாவட்டக் கல்விக் கழகங்கள் இத்தீர்மானத்தின் மீது ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கவில்லை. கல்வித்துறை இயக்குநர் இக்கருத்துகளோடு தமது குறிப்புகள் சிலவற்றையும் சேர்த்து அரசுக்கு அனுப்பினார். அவற்றில் பின்வரும் செய்திகள் இடம் பெற்றிருந்தன.

1. உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம், வட்டார மொழி ஆகிய இரண்டின் வழியேயும் கற்பிப்பது, வட்டார மொழிகளின் படிப்படியான வளர்ச்சிக்கு உதவும். அதேவேளையில் இருக்கின்ற முறையை முழுவதும் மாற்றா வண்ணம் இருக்க இந்த இணக்கமான நிலை (Compromise) பயன்படும்.
2. பயிற்று மொழியைக் கட்டாயமாக்குவதைவிடப் பள்ளி நிருவாகத்தினர், பெற்றோர்களின் விருப்பத்திற்கு விட்டுவிடுவதே பயிற்று மொழிச் சிக்கலை எளிதாகத் தீர்ப்பதற்குரிய வழியாகும்.
3. உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்திலிருந்து தாய்மொழி வழியாகக் கற்பது படிப்படியாகவே மாற்றம் பெற வேண்டும். இதற்கான தொடக்கத்தை நான்காம் படிவத்தில் (IV FORM) தொடங்கி மூன்றாண்டுகளில் சிறிது சிறிதாக மேற்கொள்ள வேண்டும்.

அரசு மேற்குறித்த இயக்குநரின் கருத்தை ஏற்று அவரைச் சென்னைப் பல்கழைக்கழகக் கல்விக் குழுவில் கலந்து கொண்டு இதற்கான செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு பணித்தது.

1925இல் கல்வி இயக்குநர், சென்னைப் பல்கலைக்கழகக் கல்விக் குழுவோடு இணைந்து தயாரித்த திட்டத்தை அரசின் ஒப்புதல் பெற்று பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை மூலம் அனுப்பினார். அந்த அறிக்கையில் பின்வரும் செய்திகள் இடம் பெற்றிருந்தன.

1. பள்ளி நிருவாகங்கள், உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழியாக ஆங்கிலத்தையோ வட்டார மொழியையோ தெரிவு செய்து கொள்ளலாம்.
2. ஆயினும் ஆங்கில மொழிக்குரிய பாடவேளை உள்பட பள்ளி நேரத்தில் பாதிநேரம் தாய்மொழி வழிக் கற்பிப்பதற்கும் பயன்படுத்த வேண்டும்.
3. பள்ளிப் பொதுத் தேர்வில், ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், ஈப்ரு, பிரஞ்சு, செருமன் ஆகிய மொழிப் பாடங்களைத் தவிர மற்றவற்றிற்கு வினாத்தாள்கள் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒரியா, மராத்தி, உருது ஆகிய மொழிகளில் இருக்கும். வடமொழி மற்றும் தாய்மொழி வினாத்தாள் அந்தந்த மொழிகளில் மட்டுமே இருக்கும். அரபு, பெர்சியன் மொழிகளுக்குரிய வினாத்தாள் உருதுவில் மட்டுமே இருக்கும். மாணவர்கள் மொழிப் பாடமல்லாத பிற பாடங்களுக்கும் ஆங்கிலத்திலோ அல்லது அந்த வினாத்தாள் அமைந்துள்ள மொழியிலோ விடையளிக்கலாம்.

சத்தியமூர்த்தியின் தீர்மானம் பற்றிய கருத்துக்கள் பல மாவட்டக் கல்வி வாரியங்களில் விவாதிக்கப்பட்டன. பெரும்பாலான கல்வி வாரியங்கள் சத்தியமூர்த்தியின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டன. எனினும், பள்ளியிறுதித் தேர்வுகளில் வட்டாரமொழிகளில் தேர்வு எழுதுவது, கட்டாயப் பயிற்றுமொழித் திட்டம் ஆகியவை குறித்த மாறுபட்ட கருத்துக்களைப் பல மாவட்டக் கல்வி வாரியங்கள் தெரிவித்திருந்தன. அக்கருத்துக்களை அன்றைய பொதுக் கல்வித்துறை இயக்குநர் லிட்டில் ஹாலீயஸ் (Little Halies) அரசுக்குக்

கடிதம் எழுதினார், அக்கடிதத்தில், "பயிற்று மொழித் தேர்ந்தெடுப்பு குறித்து சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். நான்காவது பாரம் முதல் ஆறாவது பாரம் வரை உடனடியாக வட்டார மொழிகளைப் பயிற்றுமொழி ஆக்குவதற்குப் பதிலாக முதல் ஆண்டு நான்காவது பாரத்தில் (Fourth Form) பயிற்றுமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்." (R.C.No.82-0/24) எனக் குறிப்பிட்டிருந்தார். அடுத்த ஆண்டுகளில் இத்திட்டத்தை V, VI பாரங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என அரசுக்குத் தெரி-வித்திருந்தார்.

அவரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அரசு வெங்கடரத்தினம் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சுற்றறிக்கையைத் தயாரித்து சென்னைப் பல்கலைக்கழகக் கல்விக்குழுவுக்கு அனுப்பி அதன் ஆலோசனையை வழங்கக் கேட்டுக் கொண்டது.

### உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்றுமொழி ஆணை (1925)

அரசு செயலர் வெங்கடரத்தினம் குழுவின் பரிந்துரைகளைச் சென்னைப் பல்கலைக்கழகக் கல்விக்குழுவிற்கும் (Academic Council) பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளின் குழுவிற்கும் (Council of Affiliated Colleges) அனுப்பினார். அக்குழுக்களில் நடந்த விவாதங்களில் பள்ளிகளில் பயிற்றுமொழியைக் கட்டாயப்படுத்தும் திட்டத்திற்குப் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவு வழங்கவில்லை. இருப்பினும் வட்டார மொழிகளைப் பயிற்றுமொழியாக IV, V, VI பாரங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முந்தைய கல்கத்தா பல்கலைக்கழக ஆணையத் தீர்மானத்தின்படி இக்குழுக்கள் ஏற்றுக்கொண்டன. இதனைத் தொடர்ந்து அரசு செயலர் பல்கலைக்கழகக் கல்விக்குழு இணைப்புக் கல்லூரிக் குழுக்களின் கருத்துக்களை அரசுக்குத் தெரிவித்தார். இத் தகவல்களைக் கவனமாகப் பரிசீலனை செய்த அரசு உயர்நிலைப் பள்ளிகளில் (IV, V, VI) பாரங்களில் வட்டார மொழிகளைப் பயிற்றுமொழியாக்கும் அரசு ஆணையை வெளியிட்டது. அந்த அரசாணை வருமாறு:

"உயர்நிலைப் பள்ளிகளில் நான்காவது, ஐந்தாவது, ஆறாவது பாரங்களில் பயிற்றுமொழியாக வட்டாரமொழி அல்லது ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுக்கப் பள்ளிகளின் மேனேஜர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்படுகிறது. வட்டார மொழிவழிக் கல்விக்கும், ஆங்கிலவழிக் கல்விக்கும் சரிசமமான அளவில் நேரம் ஒதுக்கப்பட வேண்டும். இந்த நேரத்தில் ஆங்கில மொழிப்பயிற்சிக்கு (English Language Study) நேரம் ஒதுக்கப்பட வேண்டும்."

"பள்ளியிறுதித் தேர்வுகளின் அனைத்துப் பாடங்களுக்குமான வினாத்தாள்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒரியா, மராத்தி, உருதுமொழிகளில் தயாரிக்கப்பட வேண்டும் இதில் மொழிப்பாடங்களான ஆங்கிலம், ஹீப்ரு, கிரேக்கம், லத்தீன், பிரெஞ்சு, ஜெர்மன் பாடங்களின் தேர்வுத்தாள்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். சமஸ்கிருதம் மற்றும் வட்டார மொழிகளின் தேர்வுத்தாள்கள் ஆங்கிலத்தில் இருக்கக்கூடாது. அரேபிய மற்றும் பெர்சிய மொழித் தேர்வுத்தாள்கள் உருதுமொழியிலேயே அமைதல் வேண்டும். வட்டார மொழிகளிலும் ஆங்கிலத்திலும் தேர்வுத் தாள்களுக்கு விடை எழுதும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும். அவர்கள் நான்காவது, ஐந்தாவது, ஆறாவது பாரங்களில் வட்டார மொழிகளிலேயே பயிற்றுவிக்கப்பட்டிருந்தால் மட்டுமே வட்டார மொழிகளில் தேர்வு எழுதும் உரிமை வழங்கப்பட வேண்டும்."

"(i) எதிர்வரும் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் தேர்வு எழுத இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை (ii) ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு தேர்வுத்தாளையும் எந்த மொழிகளில் எழுதவிருக்கிறார் என்ற விவரங்களை எல்லாக் கல்வி நிலையங்களின் தலைவர்களும் (நிர்வாகிகளும்) பள்ளியிறுதித் தேர்வு வாரியத்தின் செயலருக்கு ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதம் முதல் தேதிக்கு முன்னதாகத் தெரியப்படுத்த வேண்டும். பள்ளியிறுதித் தேர்வுச் சான்றிதழ் ஒவ்வொரு மாணவரும் எந்த மொழியில் பயிற்றுவிக்கப்பட்டார் என்ற விவரமும் எந்த மொழியில் பதில் அளித்தார் என்ற விவரமும் இடம் பெறவேண்டும். (G.O. No. 1851, Law (Education), Dated 27.10.1925)

*1925* அக்டோபர் மாதம் அரசு அனுப்பிய சுற்றறிக்கையைத் தொடர்ந்து பள்ளிகள் பயிற்றுமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

### பயிற்றுமொழி ஆணை (1925) செயல்படுத்த வேண்டுகோள்

*1926*ஆம் ஆண்டு பொதுக்கல்வித்துறை இயக்குநரின் தகவலின்படி மாகாணத்தில் இருந்த *90* பள்ளிகள் பயிற்றுமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன. ஆனால், அவர் கொடுத்த தகவலில் பயிற்றுமொழித் திட்டத்தில் எந்தப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன என்பது குறித்த தகவல்கள் இடம்பெறவில்லை.

காளீஸ்வரராவ் என்ற உறுப்பினரின் வட்டார மொழிகளில் பயிற்றுமொழித் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்திற்கு. "அரசின் சுற்றறிக்கை இந்த ஆண்டு முதல்நாள் நடைமுறைக்கு வருகிறது. நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகே அதன் செயல்பாடுகளைப் பொறுத்தே புதிய மாற்றங்களை

மேற்கொள்ள முடியும். அடுத்த ஆண்டு முதல் வட்டார மொழிகளையே கட்டாயப் பயிற்றுமொழியாக்க வேண்டுமானால் இப்போது இருக்கிற குறைந்த காலத்தில் போதுமான பாடப்புத்தகங்களை உருவாக்க முடியாது. வட்டாரமொழிகளில் அறிவியலைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் புதிய திட்டம் (வட்டாரமொழி) பயிற்றுமொழி நடைமுறைப்படுத்தும்போது தேவைப்படுவார்கள். அவர்களை ஆசிரியர் பணிக்குப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள பள்ளிகளின் மானேஜர்களிடம் போதுமான நிதியிருக்க வாய்ப்பு இல்லை.''(G.O.No. 974. Law (Education), Dated 16.05.1927) என்ற காரணம் அரசுத்தரப்பில் பதிலாகக் கூறப்பட்டது.

இக்கால கட்டத்தில் விடுதலைப் போராட்ட உணர்வு தமிழகத்தில் வலுப்பெற்றிருந்தது. அதனால் ஆங்கிலம் அந்நியர்களின் மொழி என்ற விரோத உணர்வு பரவியிருந்தது. எனவே ஆங்கிலத்துக்குப் பதிலாக வட்டார மொழிகளை முன்னிறுத்த வேண்டிய அவசியம் இருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

1927, 28, 29, 30, 32, 37 ஆண்டுகளில் சென்னை மாகாண சட்டமன்றத்தில் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தித் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன என்றாலும் 1929இல் சத்தியமூர்த்தியும், மல்லையாவும் கொண்டுவந்த தீர்மானத்தில் ஐந்து ஆண்டுகள் காலக்கெடு தரலாம் என்று கூறப்பட்டது. இத்தீர்மானங்களின் மீது நடந்த விவாதங்களில் தாய்மொழிக் கல்விக்கான இன்றியமையாமையும் அக்கல்வியை வழங்குவதில் உள்ள சிக்கல்களும் விரிவாக விளக்கப்பட்டன.

1928-29 கல்வி ஆண்டில் அரசின் பயிற்றுமொழி ஆணையை ஏற்றுக்கொண்டு சென்னை மாகாணத்தில் செயல்பட்டு வந்த ஐம்பத்து ஐந்து (பள்ளிகளில்) உயர்நிலைப் பள்ளிகளின் IV முதல் VI பாரங்களின் வகுப்புகள் வட்டார மொழிகளிலேயே மொழியல்லாத பாடங்களைக் கற்பித்து வந்தன. ஆனால், இதே நேரத்தில் ஆங்கிலவழிக் கல்விக்கு அதிக அளவு ஆதரவு இருந்தது. பயிற்றுமொழியாக ஆங்கில வழியில் கற்ற மாணவர்கள் அவ்வழியிலேயே படிப்பைத் தொடர்ந்தனர். வட்டாரமொழிகளில் IV, V, VI பாரங்களில் பயின்ற மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லும்போது ஆங்கில வழியில் கற்க வேண்டியிருந்தது. எதிர்கால நலன் கருதி பலர் ஆங்கிலவழிக் கல்வியையே தொடர்ந்தனர்.

### கட்டாயமாக்கம் - மீண்டும் வேண்டுகோள்

பயிற்றுமொழித் திட்டத்தில் (IV, V, VI) முன்னேற்றமில்லாததை காளீஸ்வரராவ் (05.03.1929), சத்தியமூர்த்தி (20.03.1929), டாக்டர் பி.எஸ்.மல்லப்பா (20.03.1929) ஆகிய உறுப்பினர்கள் அரசுக்குச் சுட்டிக்காட்டினர். அரசுத்தரப்பில் பள்ளி நிர்வாகிகளுக்குப் பயிற்றுமொழித் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை தரப்பட்டுள்ளதைப் பற்றிய தகவலும், ஆசிரியர்கள், நூல்கள் இல்லாத நிலையும் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டன. 1930ஆம் ஆண்டு பயிற்றுமொழி குறித்து மீண்டும் (22.02.1930) உறுப்பினர்கள் பி.செட்டியும், ஜி.ஹரிசர்வோட்டம்மாராவும் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதில் அளித்த அரசு 1928-29 காலகட்டத்தில் 55 பள்ளிகள் மட்டுமே விரும்பி பயிற்றுமொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளன என்றது. இதைத் தொடர்ந்து ஹரிசர்வோட்டம்மாராவ் பயிற்றுமொழித் திட்டத்தைக் கட்டாயமாக்க வேண்டும் என்றார்.

இதற்குப் ''பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பள்ளிகளிடமே உள்ளது. கட்டாயப்படுத்தி பயிற்றுமொழியாக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. அந்த எண்ணம் உருவாகக் காரணம், அதற்கான தேவை எதுவும் எழவில்லை.'' (G.O.No. 792, Education, Dated 13.04.1930) என்றவாறு அன்றைய அமைச்சர் சுப்பராயன் பதில் அளித்தார்.

மேற்கண்ட விவாதங்களைப் பார்க்கும் போது அன்றும் இன்றும் ஆங்கிலமோகமே தமிழ் பயிற்று மொழியாக இருக்கத் தடையாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

இதற்குரிய காரணங்களைப் பின்வருமாறு க.ப. அறவாணன் கூறுகிறார் .''களப்பிரர், பல்லவர் காலம் தொடங்கி (1700 ஆண்டுகள்) அண்மைக் காலம் வரை, தமிழர் சமஸ்கிருதத்தைத் தேவ பாஷை என்று கருத வைக்கப்பட்டனர் ; தம் தமிழ்மொழி 'நீச பாஷை' என்று நம்ப வைக்கப்பட்டனர். சமஸ்கிருத மொழிக்குரியோர் தேவர்கள் என்றும் தமிழ்மொழிக்குரியவர்கள் தாம் நீசர்கள் என்றும் இவரே ஒத்துக் கொள்ள வைக்கப்பட்டனர். இந்தத் தேவ நிலையை ஏற்றுக் கொண்ட தமிழர் அடுத்தடுத்து ஆட்சியில் இருந்த உருது, தெலுங்கு, மராட்டியம் முதலான மொழிகளுக்கும் தேவத்தன்மை கொடுத்தனர். இந்த இடத்தில், ஆட்சிவழி ஆங்கிலம் குடியேறிய போது அப்படியே அதனையும் எதிர்க்காமல் ஏற்றுக் கொண்டனர்; தற்பொழுது அதே இடத்தில் வேறொரு மொழியையும் ஏற்க ஆயத்தமாக இருக்கின்றனர்- சுமைகளைச் சுமந்தே பழக்கப்பட்டுப் போன ஒட்டகத்திற்குச் சிறு சுமையை அகற்றினாலும் பயணம் போகாது என்பது போலவே தமிழர், மொழிச் சுமையை இழக்க ஆயத்தமாக இல்லை. அழுக்கேறி நெடுங்காலம் குளிக்காமல் இருக்கும் ஒருவருக்கு அழுக்கே நோயாகத் தெரிதலைப் போல, தமிழர் உடம்பில், பல்லாண்டுகளாக ஏறிய வேறு வேறு இனப்பண்பாட்டு மேலாண்மைகள் வேறு பிரிக்க முடியாமல் ஒண்டி ஒட்டிக்கொண்டுவிட்டன'' என்று கூறுகிறார்.


●

கட்டுரையாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர்.
மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

கட்டுரை

# திறந்த மார்க்சியம்: மேற்கிலிருந்து ஒரு புதிய குரல்: இயக்கவியலும் வரலாறும்

ந.முத்துமோகன்




பிரெஞ்சு மார்க்சியரான லூயி அல்த்துசர், மார்க்சியம் ஒரு “நெருக்கடி”யினுள் சிக்கிக் கொண்டிருக்கிறது என்ற ஓர் எச்சரிக்கையை 1978ல் அறிவித்தார். அடுத்து வந்த ஆண்டுகளில் அந்த எச்சரிக்கை கூடுதலான விளைவுகளைச் சந்தித்தது. மேற்கு நாடுகளில் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சர், அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் வலதுசாரி சிந்தனையும் தாராளவாதச் சிந்தனையும் கூடுதலான அரசியல் ஆற்றல்களை ஈட்டின. நெருக்கடிகள் தீவிரமடைந்தன. வலதுசாரி சக்திகளின் நெருக்கடிகளை இடதுசாரிகள் சந்திக்க முன்வந்தன. “நெருக்கடி” என்ற சொல்லையும் நிகழ்வையும் மார்க்சியர்கள் எதிர்கொண்டனர்.

நெருக்கடி, விமர்சனம் *(Crisis, Critique, Critical)* போன்ற சொற்களை காண்டிய, ஹெகலிய பின்புலத்தைக் கொண்டு மார்க்சியர்கள் திறனுடன் அணுகினர். ஜெர்மானிய இயங்கியலுக்கு அணுக்கமான நிலைகளிலிருந்து விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. நெருக்கடி, விமர்சனம் போன்ற சொற்களை நேர்க்காட்சிவாத நோக்கில் அணுகுவதைத் தாண்டி, இயங்கியல் பார்வையில் அணுகும் போது, மார்க்சிய வெளிச்சத்தில் கூடுதல் பொருள் காண முடியும் என்ற தெளிவு பிறந்தது. இந்த விவாதங்களின் போது மார்க்சிய இயங்கியலும் அதன் கருத்தாக்கங்களும் விரிந்த பொருண்மைத் தளங்களை எட்டின என்பதையும் காணமுடிகிறது. இயக்கம், முரண்பாடுகள், வேறுபாடுகள், எதிர்வுகள், விமர்சனங்கள், மறுப்பு, இன்மை, போதாமை






போன்ற பல சொல்லாடல்கள் விரிந்த எல்லைகளை எட்டி நடைபோட்டன.

ஜெர்மனியில் ஃபிராங்ஃபர்ட் மார்க்சியர்கள் போன்றோர் "விமர்சனக் கோட்பாடு" *(Critical Theory)* என்பது போன்ற புதிய சிந்தனைப் போக்குகளை நிறுவினர். விமர்சனம் என்ற கருத்தாக்கம் ஒரு விரிந்த கோட்பாடாகத் துலக்கம் பெற்றது. விமர்சனம் எனில் இயங்கியல் என்ற அளவிற்கு அச்சொல் புதிய விவாதங்களை, அவற்றில் சாதக பாதகமான பல போக்குகள் உள்ளடங்கி நின்றன என்பதையும் இங்கு குறிப்பிட்டுச் செல்வோம்.

மேற்குறித்த விவாதங்களில் இடதுசாரிகளுக்கு ஆதாயமான ஒரு நிகழ்வுப்போக்காக "இயங்கியலைத் தீவிரப்படுத்தல்" *(Radicalising Dialectics)* எனும் சம்பவத்தைக் குறிப்பிட வேண்டும். இயங்கியலைத் தீவிரப்படுத்தல் என்பது விரைவில் மார்க்சியத்தை தீவிரப்படுத்தல், மார்க்சியத்தை மீட்டெடுத்தல் *(Emancipating Marxism)* என்ற புள்ளிகளை நோக்கி நகர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுச் செல்வோமாக. அதாவது இயங்கியலைத் தீவிரப் படுத்தலின் மூலமாக மார்க்சியம் தீவிரப்படுத்தப் பட்டது என்ற நிகழ்வைச் சந்திக்கிறோம்.

மார்க்சியத்தைத் தீவிரப்படுத்தல் கீழிருந்து மேலாக நிகழுகிறது என்பது முக்கியமானது. அடித்தள மக்களிலிருந்து மேற்தளங்களை நெருங்கலாம். வெகுமக்கள்தான் வரலாற்று நாயகர்கள் என்பதே மார்க்சியத்தின் கணிப்பு. வெகுமக்கள் திரட்சி என்பதே வர்க்கப் போராட்டங்களின் முகப்பு. வர்க்கப் போராட்டங்களைப் பரவலாக்குதலும் தீவிரப்படுத்தலும் வலியுறுத்தப்படுகின்றன. ரோசா லக்சம்பர்க், லெனின் போன்றோரின் புரட்சிக்கான வெகுமக்கள் திரட்சி இங்கு வலியுறுத்தப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தத்துவ நிகழ்வே இக்கட்டுரையில் *Open Marxism* என்று குறிக்கப்படுகிறது.

"திறந்த மார்க்சியம்" என்பது, சமீப காலங்களில் பேசப்பட்டு வந்த "பின்னை மார்க்சியம்" என்பதற்கு மாற்றாகவும் முன்வைக்கப்பட்டது. சில முன்னெடுப்புகளுக்குப் பிறகு, பின்னை மார்க்சியம் பின்வாங்கிக் கொண்டது. அரேபிய வசந்தம், லத்தீன் அமெரிக்க அசைவுகள், கீழை நாடுகளின் "சிறு" எழுச்சிகள், "நாங்கள் 90 சதவீதத்தினர்" போன்ற போராட்டக் குரல்கள் திறந்த மார்க்சியத்துடன் துணை சேர்ந்துகொண்டன. இடதுசாரி வெகுமக்களியம் *(Left Populism)* பரவலான மக்கள் போராட்டங்களின் அறியப்பட்ட வடிவங்களாக மாற்றம் பெற்று வருகின்றன.

திறந்த மார்க்சியம் என்ற சொல்லுக்கு இணைச் சொல்லாக "இயக்கவியலும் வரலாறும்" என்ற சொற்கள் இக்கட்டுரையில் சேர்க்கப்பட்டுள்ளன. இயக்கவியலும் வரலாறும் என்ற சொற்கள் மார்க்சியத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் விரிவானவை, வலுவானவை. மார்க்சிய சொல்லாடல்களில் எங்கு நோக்கினும் மார்க்சியத்தைத் தெளிவு படுத்துவதற்கு இச்சொற்கள் பயன்பட்டு வந்திருக்கின்றன. வரலாறு என்பதை எதார்த்த ஆதாரமாகக் கொண்டே வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்ற கருத்தாக்கம் விளக்கப்படுகிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்ற கோட்பாட்டுப் பிரத்தியட்சத்தை ஆதாரமாகக் கொண்டே மனிதகுல வரலாறு தெளிவு படுத்தப்படுகிறது. வரலாறு, வரலாற்றுப் பொருள் முதல்வாதம் ஆகியன இயக்கவியல் எனும் மற்றொரு தத்துவக் கோட்பாட்டை மையமாகக் கொண்டே மார்க்சியத்தைக் காத்து நிற்கிறது.

காண்டியமும் ஹெகலியமும் மார்க்சியத்திற்கு மெய்யியல் அடர்த்தி கொண்ட பின்புலத்தை வழங்கின. அவை ஜெர்மானிய மரபில் விளைந்தவை.

இன்னொரு புறம் அவை மார்க்சியத்திற்குப் பலமான சவாலாகவும் விளங்கின. இப்போதைய திறந்த மார்க்சியத்திற்கும் அதேபோன்ற சூழல்கள் உருவாகியுள்ளன. ஜெர்மனியைப் பொறுத்தமட்டில், காண்டியம் இளமையும் ஆற்றலும் கொண்டது. ஹெகலியம் முதிர்ச்சியும் விரிவும் கொண்டது. காண்டியம் அறிவையும் அறிவொளி இயக்கத்தையும் ஆதரித்தது. கொண்டாடியது. இருப்பினும் அறம், விழுமியங்கள், நேர்க்காட்சிவாதம், கடந்த நிலை மெய்யியல் ஆகியவற்றைத் தூய நிலையில் பாராட்டியது. காண்டின் அறம் பகுத்தறிவு, மனிதநேயம் ஆகியவற்றை அரவணைக்கிறது. இயற்கை விதிகளை ஆதரிக்கிறது.

ஹெகலின் இயங்கியலையும் தர்க்கவியலையும் மார்க்சியம் உள்வாங்கிக் கொண்டது. இயங்கியலின் இன்னொரு வடிவமாக வரலாற்றை அது ஏற்றுக் கொண்டது. இயற்கை, இயற்கையின் வரலாறு, இயற்கையின் இயல்பான செழுமையின் தொடர்ச்சியாகவும் மார்க்சியம் மனிதகுல முன்வரலாற்றைக் கொள்கிறது. இயற்கையின் இயங்கியலாக புவியியல், வானவியல், இயற்பியல், உயிரியல், அதன் பின்னர் மனிதவியல் ஆகியவற்றை வரிசைப் படுத்துகிறது. இயற்கையின் இயங்கியலின் தொடர்ச்சியாக மனிதகுல வரலாறு தோற்றமெடுக்குகிறது. இயற்கையின் வரலாறாக மனிதகுல வரலாறு தோற்றம் பெறுகிறது. பகுத்தறிவு, இயற்பியல், இயங்கியல், வரலாறு ஆகியவற்றின் சிக்கலான கட்டமைப்பாக மார்க்சிய கருத்தாக்கமான "இயங்கியலும் வரலாறும்" என்ற கருத்தாக்கம் ஒரு மாபெரும் பிரச்சினையாக உருப்பெறுகிறது.

இந்த நூலில் மார்க்சியத்தின் மீள்வருகை வரலாறு, அரசியல் பொருளாதாரம், வர்க்கப் போராட்டம், புரட்சியின் வியூகங்கள் ஆகியன தேர்வு செய்யப்பட்ட இயங்கியல் தளத்தில் சந்தித்துக் கொள்கின்றன. இந்நூலின் ஆகப்பெரிய வலிமையாக இது அமைந்திருக்கலாம். சமூக நெருக்கடிகளைத் தாண்டி, இயற்கைச் சூழல், மானுடவியல் சார்ந்த அறவியல், பேரிடர் அழிவுகள் போன்றவையும் நெருக்கடியான இயங்கியலினுள் இடம் பெருகின்றன.

திறந்த மார்க்சியம் என்ற சொல் மார்க்சியத்தைச் செழுமையடைந்த ஒரு சூழல்களுக்குள் இட்டுச் செல்கிறது. உலக அளவில் மார்க்சியம் தனது முகாம்களைப் புதுப்பித்துக் கொள்வதைச் சுட்டிக்காட்டுகிறது. "திறந்த மார்க்சியம்: இயங்கியலும் வரலாறும்" எனும் இந்நூல் சோசலிச மற்றும் சனநாயகப் புரட்சிகளின் பரப்புகளை விரிவாக்கிக் காட்டுகின்றன.

*(விரைவில் என்சிபிஎச் வெளியீடாக வெளிவர உள்ள 'திறந்த மார்க்சியம் இயங்கியலும் வரலாறும்' நூலுக்கான பதிப்புரை)*


●

கட்டுரையாளர், இந்திய மார்க்சிய சிந்தனையாளர்களில் மிக முக்கியமானவர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்.




29.12.2022 அன்று திருச்சி மாவட்டம் துறையூரில் புத்தகக் கண்காட்சியை புலவர் மா.இராமலிங்கம் அவர்கள் திறந்துவைத்தார். இதில் தி.நடராஜன், வி.வேணுகோபால், பாலசுந்தரம், தில்லை நாயகம், சாந்தி, என்சிபிஎச் திருச்சி மண்டல மேலாளர் எஸ்.குமார் மற்றும் கிளை மேலாளர் க.சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 325/-




₹ 75/-




₹ 200/-




₹ 130/-




₹ 90/-




₹ 70/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



கட்டுரை

# கோவில் ஆய்வுச் சேகரிப்பின் சிக்கல்கள்

அ.கா.பெருமாள்

தமிழகக் கோவில்கள் பற்றி வந்த நூல்களை அவற்றின் உள்ளடக்கம் 'தரம்' அமைப்பு, செய்திகளைக் கூறும் முறை போன்ற காரணங்களின் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பகுக்கலாம்.

முதல் வகை. கோவில் வழிகாட்டியாக சிறு பிரசுரமாக குறைந்த பக்கம் கொண்ட நூல் வடிவில் இருப்பவை. இவற்றில் கோவில் தல புராணங்கள் முக்கியப்படுத்தப்படும். இந்தக் கோவிலை வழிபடுவதால் கிடைக்கும் பயன்கள், வழிபாட்டு நேரம், நேர்ச்சை, பரிகாரம் எனப் பல விஷயங்கள் இந்த நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த வகை நூல்களில் சிலவற்றுக்கு ஆசிரியர் பெயர் இருக்காது. இவற்றை எழுதுபவர்கள் ஆய்வாளர்கள் அல்லர். இவை கோவிலுக்கு வரும் பக்தர்களின் பக்தியை நம்பிக்கையைக் குறிப்பதற்காக இருக்கும்.

ஒருகாலத்தில் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தங்கள் கோவிலுக்குத் தலபுராணம் எழுத வேண்டும் என்று கோவிலைச் சார்ந்தவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்காக எழுதிய தலபுராணக் கதையை ஒத்ததுதான் இந்த வகை நூற்களும். இந்த வகை நூல்கள் கோவில் வழிகாட்டிகள் கோவிலைப் பார்க்க வந்தவர்களிடம் கூறும் புனைவுகளை மிகைப்படுத்திக் கூறும். இவை கோவில் நம்பிக்கை சார்ந்து வந்தவர்களுக்கு எழுதப்பட்டவை. இந்த வகை நூல்களில் கோவிலின், பிரமிப்பையும் நம்பிக்கையையும் மிகைப்படுத்துவதைக் காணலாம், கோவிலின் வருமானத்திற்கு உதவ இப்புத்தகம் பயன்படும்.

இரண்டாம் வகை நூல்கள் சோதிடனின் பார்வையில் உருவாக்கப்பட்டவை அல்லது அவர்களின் செல்வாக்குப் பெற்றவை. இந்த வகை நூல்கள் கோவிலைப் பற்றிய வழிகாட்டியாக மட்டுமல்லாமல் ஒருவர் ஜாதகக் கோளாறால் ஏற்பட்ட சிக்கலுக்கு பரிகாரம் கூறும் முகமாகவும் உருவாக்கப்பட்டவை.

இவை பெரும்பாலும் இதழ்கள், பத்திரிகைகளில் வரும் கட்டுரைகளின் தொகுப்பாகவும் இருக்கும். இவை பின்னர் விரிவாகப் புனைவுடன் தொகுக்கப்படுவதும் உண்டு. வலைத்தளத்தில் ஒரு குறிப்பிட்ட கோவிலைத் தேடினால் பெரும்பாலும் இந்தப் புத்தகங்களின் சுருக்கத்தைப் போட்டிருக்கிறார்கள். திருநள்ளாறு, திருக்கடையூர் வரலாறு பற்றிய நூல்கள் இந்த வகையில் அடங்கும். இவை ஆய்வு நூல்கள் அல்ல.

மூன்றாவது வகை, பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு மையம் இருக்கும் கல்லூரிகளிலும் தயாராகும் எம்பில்,பிஎச் டி ஆய்வேடுகள். பெரும்பாலும் இந்த வகை ஆய்வுகள் அந்த ஆய்வு மையங்கள் இருக்கும் இடங்களைச் சுற்றி உள்ள கோயில்களைப் பற்றியதாகவே

இருக்கும். இந்த ஆய்வேடுகள் பட்டத்திற்காக மட்டுமே எழுதப்பட்டவை. பெரும்பாலும் இவை அச்சில் வருவதில்லை. சில புத்தகமாக வந்துள்ளன. அவையும் மூல வடிவத்திலிருந்து செப்பம் செய்யப்பட்டவை.

இத்தகு ஆய்வுகள் தமிழ்த்துறை, வரலாற்றுத்துறை என்னும் இரண்டு துறைகளிலும் நடக்கும், ஆய்வுகள், இத்தகைய எம்.பில், பிஎச்டி ஆய்வேடுகள் தமிழகத்தில் 400க்கு மேல் இருக்கலாம். இவற்றில் தரமான ஆய்வேடுகள் உண்டு. உதாரணமாக நெல்லையப்பர் கோவில், குற்றாலநாதர் கோவில், சங்கர நாராயணர் கோவில் ஆகியவை பற்றிய ஆய்வுகள். இவற்றில் மிக சாதாரணமான ஆய்வுகளும் உண்டு (கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் குறித்த ஆய்வு).

இந்த ஆய்வேடுகள் கோவிலைக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலை ஆவணங்கள் தல புராணங்கள் போன்றவற்றை கணக்கில் எடுத்து ஆய்வு மேற்கொண்டாலும் கோவிலுக்கும் சமூகத்திற்குமான உறவைப்பற்றி பெரும்பாலும் கவனம் செலுத்துவதில்லை. பெரும்பாலும் எல்லா கோயில் ஆய்வேடுகளுக்கும் ஒரே மாதிரியான இயல் பகுப்பும் கோவில் சிற்பங்களை விளக்கும் போக்கும் அமைந்திருக்கும்.

நான்காம் பகுப்பில் தொல்லியல் துறை ஆய்வாளர்களும் வரலாற்றுப் பேராசிரியர்களும் எழுதிய நூற்கள் அடங்கும். இந்த வகையில் எழுதியவர்கள் பெரும்பாலோர் தொல்லியல் துறை ஆய்வாளர்கள் ஆவர். இத்தகு நூற்கள் முக்கியமானவை. தொல்லியல் துறையினர் வெளியிட்ட நூல்கள் கோவிலின் கல்வெட்டுகள். செப்பேடுகள். ஆவணங்கள் போன்றவற்றை மட்டுமே சான்றாக எடுத்துக் கொள்ளும்.

இத்தகு நூற்களில் கோவிலின் சமூகப் பங்களிப்பு, சமூகங்களின் உறவு, தேவதாசிகளின் நிலை, கோவில் பணியாளர்களின் நிலை போன்றவை மிகக் குறைவாகவே சொல்லப்பட்டிருக்கும் அல்லது மேற்கோளாகவே காட்டப்பட்டிருக்கும். இவை நுட்பமாக விளக்கப்பட்டிருக்காது. இத்தகு நூல்கள் கோவிலின் கட்டுமானம் பற்றி அதிகம் கவனம் செலுத்தும் சிற்பங்களை விவரிப்பதில் பக்கங்களை நகர்த்தும். இது போன்ற நூல்களை எழுதும் போது பெரும்பாலும் சிக்கல்கள் வருவதில்லை. கோவிலின் காலத்தைக் கணிக்கின்ற போது மட்டும்தான் இவர்கள் சிக்கலுக்கு உள்ளாகிறார்கள்.

இவர்கள் அல்லாமல் முனைவர் பட்ட ஆய்வு அல்லது தன்னார்வத்தால் எழுதப்பட்ட நூல்கள் உண்டு. உதாராணமாக சுசீந்திரம் தாணுமாலயன் கோவில் (கே.கே.பிள்ளை 1943) காஞ்சி வரதராஜன் கோவில் (கே.வி.ராமன் 1975) கைலாசநாதர் கோவில் (சி.மீனாட்சி 1983) அழகர் கோவில் (தொ.பரமசிவம் 1997) ஆகியன முக்கியமானவை. தன் ஆர்வத்தால் அல்லது வேண்டுகோளால் எழுதப்பட்ட நூல்கள் உண்டு. சுசீந்திரம் தாணுமாலயன் கோவில் (அ.கா. பெருமாள் 2007) திருவட்டார் ஆதிகேசவப் பெருமாள் கோவில் (அ.கா.பெருமாள் 2009) தஞ்சை பெரிய கோவில் (குடவாயில் பாலசுப்பிரமணியம்), தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில் (குடவாயில் பாலசுப்பிரமணியம்) தமிழ்நாட்டுக் குடைவரைக் கோவில்கள் (இராசவேலு 2000) என சில நூற்களைச் சொல்லமுடியும்.

இந்த வகைக் கோவிலின் வரலாறு துல்லியமாக எழுதப்பட்டவை. இவற்றில் சில முனைவர் பட்டத்திற்காக எழுதப்பட்டாலும் அது அச்சில் வரும் போது முழுமையான வடிவத்தோடு வெளியிடப்பட்டுள்ளது. இவை முனைவர் பட்டத்திற்கு உரியது என்ற நிலையைத் தாண்டி வெளிவந்தவை. இத்தகு நூல்கள் எண்ணிக்கையில் குறைவு. இது போன்ற நூல்களை வெளியிடும் போது ஏற்படும் சிக்கல்கள் அதிகம்.

தமிழகக் கோவில்கள் பற்றி ஆரம்பகாலத்தில் எழுதியவர்களிலிருந்து (ஜெகதீச அய்யர்) இன்றுவரை உள்ளவர்களிடம் ஏற்பட்ட ஆய்வின் சிக்கல் பொதுவானதல்ல. முந்தைய ஆய்வாளர்களுக்கும் இன்றைய ஆய்வாளர்களுக்கும் ஒரு விஷயத்தை வெளிப்படுத்தும் போது ஏற்படும் சிக்கல் காலத்தின் அடிப்படையில் வேறுபடுகிறது.

மானுடவியல், சமூகவியல், நாட்டார் வழக்காற்றியல் ஆகிய துறைகளில் ஆய்வு செய்கின்றவர்களுக்கும் இது பொருந்தும். இன்றைய ஆய்வாளர்களுக்கு கோவிலின் சமூகப் பங்களிப்பு, கோவிலுக்கும் ஜாதிகளுக்கும் உள்ள உறவு, தேவதாசிகளின் நிலை, பூசகர்கள் கோவிலுடன் கொண்ட உறவால் சாதிய அடுக்கைப் பேணிய வரலாறு போன்றவற்றைப் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதிலும் எழுதுவதிலும் சிக்கல் உண்டு.

வரலாற்றுப் பேராசிரியர் கே.கே.பிள்ளை கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் ஊரிலுள்ள தாணுமாலயன் கோவிலைப் பற்றி முப்பதுகளின் இறுதியில் செய்தி சேகரிக்க ஆரம்பித்துவிட்டார். இக்காலத்தில் தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்து 10 ஆண்டுகள்தான் ஆயிருந்தன. என்றாலும் தேவதாசிகள் சிலர் குத்தகைப் பணியாளர்களாக கோவில்களில் வேலை செய்தனர். ஐம்பதுகள் வரை இந்த நிலை தென்குமரி பகுதியில் வழக்கில் இருந்தது. ஆகவே இவர்களிடம் கோவில் தேவதாசிகள் பற்றிய செய்திகளைச் சேகரிப்பது. எளிதான காரியம். கே.கே. பிள்ளை இது போன்ற செய்திகளைச் சேகரித்திருக்கிறார். ஆனால் அந்த செய்திகள் எல்லாவற்றையும் தன் புத்தகத்தில் முழுமையாக சொல்லவில்லை.

தேவதாசி ஒழிப்புக்குப் பின்பு தேவதாசியாகப் பணியாற்றியவர்கள் நாஞ்சில் நாட்டில் உள்ள ஒரு குறிப்பிட்ட ஜாதியுடன் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்த விஷயத்தை அவரால் வெளிப்படையாக சொல்ல முடியவில்லை. எழுபதுகளின் ஆரம்பத்தில் தேவதாசி ஒருத்தியை நான்

பேட்டி கண்டு செய்தி சேகரித்தபோது நிறைய தகவல்கள் கிடைத்தன. அவர் சொன்ன பல விஷயங்களை கே.கே.பிள்ளை தன் நூலில் சொல்லவில்லை.

நான் தேவதாசிகள் பற்றி சேகரித்த செய்திகளின் அடிப்படையில் 'உங்கள் நூலகம்' மாத இதழில் இரண்டு கட்டுரைகள் எழுதினேன் (சின்னக்குட்டியும் கச்சவட முக்கும், சின்னக்குட்டி பிடித்த பச்சைப் பாம்பு) நானும் கூட இந்த கட்டுரைகளில் சில விஷயங்களைச் சொல்லாமல் விட்டிருக்கிறேன். கே.கே.பிள்ளை காலத்தில் இருந்ததைவிட என்னுடைய காலத்தில் இது போன்ற விஷயங்களைக் சொல்லுவதில் சிக்கல் அதிகமாகிவிட்டது. அந்தக் கோவிலுக்கும் ஊருக்கும் உள்ள உறவு, கோவில் நிர்வாகிகள் அந்த ஊரையும் அதைச் சுற்றிய குக்கிராமங்களிலும் நிர்வகித்ததனால் வந்த விளைவு என பல விஷயங்களை இன்று சொல்ல முடியாது.

இதுபோன்ற சிக்கல்கள் மற்ற மாவட்டங்களைச் சார்ந்த ஆய்வாளர்களுக்கும் இருந்திருக்கிறது. திருநெல்வேலி மாவட்ட கோவில்களில் பணியாற்றிய தேவதாசிகள் தங்களை அங்கேயுள்ள ஒரு பெரிய சாதியினருடன், இணைத்துக்கொண்டனர். இதை நெல்லையப்பர் கோவிலைப் பற்றி எழுதியவர்கள் யாரும் சொல்லவில்லை. இது அவர்களுக்குத் தெரியாத விஷயமும் அல்ல. நெல்லையப்பர் கோவில் தேவ தாசிகளின் நன்கொடை ஈடுபாடு கூட விரிவாக விளக்கப்படவில்லை. இப்படி எத்தனையோ விஷயங்களைச் சொல்லிக்கொண்டு போகமுடியும். ஆய்வாளருக்கு ஏற்படும் சிக்கல்களில் இது முக்கியமான ஒன்று.

ஒரு கோவிலின் விழா சடங்குகள் என்பது பிராமணர்களை மட்டும் சார்ந்ததாக இருக்கவில்லை. கோவில் இருக்கும் ஊரில் உள்ள பல சாதிகளை சார்ந்து அல்லது இணைந்து நடக்கும் காரியங்களாகவும் இருந்தது. இதையெல்லாம் பதிவு செய்வதில் சிக்கல் உண்டு. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோயில்கள் சிலவற்றில் இருக்கும் ஒடுக்கப்பட்ட ஜாதிகள் பலவற்றுக்கும் அக்கோவிலுக்கும் உள்ள உறவைப் பற்றி நான் நிறையவே சேகரித்தேன். இந்தத் தகவல்களின் அடிப்படையில் 'இவர்களுக்கு மரியாதை இருந்தது' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை 'மானுடம்' மும்மாத இதழில் வெளியிட்டு இருந்தேன். இதன் விளைவை சிலரிடமிருந்து நான் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதுபோன்ற சிக்கல்கள் முக்கியமானவை.

ஒரு கோவிலின் கட்டுமான காலத்தைத் துல்லியமாக கணிப்பது சிக்கலானது. முழு கட்டுமானமும் ஒரே காலத்தில் அரசர் ஒருவரால் கட்டப்படுவதில்லை. பரிவார தெய்வங்களின் கோவில்களும் முக்கியமான மண்டபங்களும் பல்வேறு காலங்களில் கட்டப்படும். கட்டுமானப் பணி என்பது பல காலங்களில் நடப்பது. ஒரு கோவிலின் எல்லாப் பகுதிகளும் ஒரே காலத்தில் உருவாக்கப்பட்டவை அல்ல. பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அரசுகளால் உருவாக்கப்பட்டவை. ஒரு ஆய்வாளருக்கு இந்த விஷயத்தை விளக்குவதில் பெரிய சவால் உருவாகும்.

கோவில் கட்டுமானத்தை கல்வெட்டுகளாலும் செப்பேடுகளாலும் மட்டும் கணிக்க முடியாது. தமிழகத்தில் பல கோவில்களில் உள்ள மண்டபங்களில் கட்டியவரின் பெயரோ வேறு அடையாளங்களோ இல்லை. இந்த மண்டபங்களைக் கட்டியவரின் பெயர்கள் காலம் இரண்டையும் தீர்மானிப்பதில் சிக்கல் உண்டு. இதுபோன்ற சமயங்களில் அரசர்களின் கட்டுமானப் பாணியை அடிப்படையாகக் கொண்டு பல்லவர் காலம், சோழர் காலம் என பாகுபடுத்தும் உத்தியைப் பயன்படுத்துகின்றனர்.

தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலை முதல் ராஜராஜன் கட்டினாலும் நாயக்கர்கள் மராட்டியர்களின் கட்டுமான செல்வாக்கு கோவிலில் உண்டு. இக்கோவிலின் உள் மண்டபத்தில் சுவர் ஓவியங்கள் முதல் ராஜராஜன் காலத்தில் வரையப்பட்டவை. அவற்றின்மேல் சுண்ணாம்பு பூசப்பட்டு பிற்கால ஓவியங்கள் வரைந்திருப்பது இருபதாம் நூற்றாண்டு ஆரம்பகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோல வேறு உதாரணங்களையும் கூறமுடியும். சித்தன்னவாசல் குடைவரை ஓவியத்தை பல்லவர் காலத்தது என்று ஆரம்பகால ஆய்வாளர்கள் பலரும் கூறினார்கள். இது முற்காலப் பாண்டியர் காலம் என அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

கருவறை சிற்பங்களையும் பரிவார தெய்வங்களின் சிற்பங்களையும் செப்புப்படிமங்களையும் துல்லியமாக அடையாளம் காண்பதில் சிக்கல் உண்டு. இந்த உருவங்கள் இருக்கும் இடத்திற்கு பிராமணரல்லாத ஆய்வாளர் செல்ல முடியாது. அதனால் இங்கே ஆய்வாளன் பூசகரையே நம்ப வேண்டி இருக்கிறது. பூசகர் சொல்லும் தகவல்களை மட்டும்தான் சேகரிக்க முடியும். தமிழக பூசகர்களில் பலர் சிற்பங்களைப் பற்றி நுட்பமாக அறியாதவர்கள். சாதாரண விவரங்கள் கூடத் தெரியாதவர்களாக உள்ளனர். இதனால் ஆரம்ப காலத்தில் பல தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன.

கோவிலின் எல்லா பகுதிகளிலும் உள்ள எல்லா கல்வெட்டுகளையும் கல்வெட்டுத் துறையினர் படி எடுக்க முடியாத நிலையில் இருந்திருக்கின்றனர். பெரும்பாலும் இது பதிவு செய்யப்படவில்லை. பல கோவில்களாக கருவறை உட்பகுதியில் உள்ள கல்வெட்டுக்கள் இன்னும் எடுக்கப்படவில்லை என்று சொல்கின்றனர்.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் அர்த்த மண்டபத் தூண்களில் பித்தளைத் தகடு பொருத்தப்பட்டுள்ளது. இதை அகற்றி விட்டு கல்வெட்டைப் படி எடுப்பதற்கு அறநிலையத்துறை கல்வெட்டுத்.துறைக்கு அனுமதி கொடுக்கவில்லை (**1969**). இச்செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த மண்டபத்தைப் பற்றிய தகவல்களை முழுவதுமாக

அறிய முடியவில்லை என்கின்றனர். இப்படியான சிக்கல்கள் பற்றி யாரும் பேசுவதும் இல்லை.

சில கோவில்களில் குறிப்பிட்ட மண்டபங்களை, இடித்து அகற்றிவிட்டு அதே மண்டபத்தில் உள்ள கற்களைப் பயன்படுத்தி வேறு மண்டபங்களில் அல்லது கோவில்களைக் கட்டியுள்ளனர். பழைய மண்டபத்திலுள்ள கல்லில் உள்ள கல்வெட்டில் இருக்கும் செய்திகளை வைத்துக்கொண்டு புதிய மண்டபத்தில் கட்டுமான காலத்தை கணிப்பது சிக்கலை உருவாக்கிவிடும். உதாரணம் திருவலஞ்சுழி பள்ளிப்படை கோவில்.

இக்கோவில் பிற்காலச் சோழர் காலத்துக் கட்டுமானம். ஆனால் கல்வெட்டு பல்லவர் காலத்தது. இதற்கு முக்கிய காரணம் சமணர்களின் கட்டுமானக் கோவில் உடைக்கப்பட்டு அந்தக்கல் இந்தக் கோவில் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே கோவில் கட்டுமானக் கல்வெட்டை முழுமையான சான்றாகப் படுத்தும்போது உண்மையை அறிய வேண்டி இருக்கின்றது. இதுபோன்று இதற்கு வேறு சான்றுகளும் உண்டு.

தமிழகத்தில் பெரும் கோவில்களில் நவக்கிரக மண்டபங்கள் நிறுவுவது என்ற காரியம் அண்மைக்காலத்தில் பெருகிவிட்டது. இது கோவில் வருமானத்திற்காகச் செய்யப்படுகின்ற ஒரு செயல்பாடு. நவக்கிரக வழிபாடு என்பது நாயக்கர் காலத்திற்குப் பின்னால் ஏற்பட்டது. பெரும்பாலான கோவில்களில் வெளிப்பிரகாரம் முன்பக்கத்தில் நவக்கிரக சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இந்த மண்டபமும் நவகிரக மண்டபமும் வேறுபட்ட காலத்தைச் சார்ந்தவை என்பதைப் பிரித்து அறிய வேண்டிய நிலை உள்ளது.

பொதுவாகத் தமிழகக் கோவில்கள் சித்தர்களின் சமாதி என்ற கருத்தாக்கம் உண்டு. அரசர்களின் பள்ளிப்படையாகவும் கோவில்கள் இருப்பதுண்டு. பழனி கோவில் போகரின் சமாதி, கோவை மருதமலை பாம்பாட்டி சித்தரின் உறைவிடம்; சுசீந்திரம் தாணுமாலயன் கோவில் பிருங்கி முனிவரின் சமாதி. இது போன்று சொல்லும் சமாதிகளின் பெரும் பட்டியல் உண்டு. உண்மையில் இவை தலபுராணங்கள் உருவான காலத்தில் புனையப்பட்ட கதைகள் என்றும் எடுத்துக்கொள்ளலாம். இது போன்ற கதைகளை வெளிப்படையாகக் கூறுவதில் சிக்கல் உண்டு.

கோவிலைப் பற்றிய செய்திகளை கோவில் தொடர்பானவர்களோ கோவில் இருக்கும் ஊர்க்காரர்களோ துல்லியமாகச் சொல்லுவார்கள் என்பதை நம்ப முடியாது. ஆய்வாளர்களிடமிருந்தே அவர்கள் சிலவற்றை கேட்டுத்தெரிந்து கொள்கின்றார்கள். மரபுவழியான விஷயங்களைச் சொல்லும்போது அவர்களின் சொந்தப் புனைவு அவர்களின் சாதி குடும்பம் தொடர்பான புனைவு அதில் பெருமளவு கலந்து விடுகின்றது. இந்த இடத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டி இருக்கின்றது.

இன்றைய நிலையில் நாட்டார் தெய்வக் கோவில்கள் மேல்நிலையாக்கம் பெற்று பெருநெறிக் கோவிலாக வழிபாடு பெறுவது என்ற சூழ்நிலை பெருகிவிட்டது. ஒரு கோவில் ஒரு காரணத்தால் பரவலாக பிரபலமாக ஆகிவிட்ட பிறகு அது அதன்மூலம் நாட்டார் தெய்வம் என்று கூறுவதில் பெரும் சிக்கல் இருக்கிறது.

நாகர்கோவில் நாகராஜா கோவில். சமணக் கோயில் சந்தேகமில்லை. இதை பலரும் எழுதியிருக்கின்றார்கள். கல்வெட்டுகளும் சிற்பங்களும் இதற்கு சான்று. இப்போது முழுக்கவும் இது இந்துசமயச்சார்புடையதாகிவிட்டது. இதைச் சொல்வதில் கூட பெரிய சிக்கல் இல்லை. ஆனால் இந்தக் கோவிலின் மூலம் நாட்டார் தெய்வம் என்று சொல்லுவதில்தான் சிக்கலே ஆரம்பிக்கிறது. நான் இந்தக் கோவிலின் பல இடங்களில் நாட்டார் தெய்வ வழிபாடு இருந்தது என்பதை பல சான்றுகள் மூலம் தேடிக் கண்டு பிடித்தேன். இதை நான் இன்று வெளியிட முடியாது.

கட்டுமான அமைப்பு மட்டுமல்ல, சிற்பங்களை அடையாளம் காண்பதிலும் சிக்கலும் பிரச்சினைகளும் உண்டு. முருகன் என்ற கடவுளின் ஆயுதங்கள் வஜ்-ராயுதமும் சக்தி ஆயுதமும் ஆகும். வேலாயுதம் பிற்காலத்தில் இணைக்கப்பட்டது. இந்திரனுக்கு உரிய ஆயுதங்கள் வஜ்ராயுதமும் சக்தி ஆயுதமும் ஆகும். இங்கு முருகனையும் இந்திரனையும் வேறுபடுத்த சிற்பங்களில் இருக்கும் வாகனத்தை அடையாளங்காண வேண்டும். முருகனுக்கு வாகனம் மயில், இந்திரனுக்கு வாகனம் யானை. சில சமயத்தில் வாகனம் காட்டப்படவில்லை என்றால் இந்தத் தூணில் இருப்பவரை துல்லியமாக இனம் காட்ட முடியாது. இதே தூணில் இருக்கும் இன்னொரு சிற்பத்தைப் பார்த்து அடையாளங் காணலாம்.


சில சிற்பங்களுக்கு வட்டார ரீதியான பின்னணிக் கதைகள் உண்டு. தொடர்பும் உண்டு. இவை தொடர்பான கதைகளை கல்வெட்டுக்களிலோ செப்பேடுகளிலோ காண முடியாது. கோவிலைச் சார்ந்தவர்களிடமும் ஊர் மக்களிடமும்தான் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும்.

உதாரணமாக தென் மாவட்டங்களில் உள்ள கோவில்களில் குறவன் இளவரசியை தூக்கிக் கொண்டு செல்லும் காட்சி அமைந்த சிற்பங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இந்தக் குறவனை இளவரசன் ஒருவன் துரத்தவும் செய்வான். இதற்குப் பின்னால் வட்டார ரீதியான ஒரு கதையைச் சொல்லுகிறார்கள். இந்தக் கதை இன்றைய குறவர் சமூகத்திற்கு பாதகமானது. அவர்களைக் குற்றவாளியாகவும் சித்திரிக்கும் கதை. இந்தக் கதையின் எல்லா பரிமாணங்களையும் அப்படியே சொல்லவும் முடியாது. இதுபோன்ற சிக்கல்கள் பலப்பல...


●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

## நூல் அறிமுகம்







# கடந்து வந்த காலம்

**பாவண்ணன்**

'தமிழ் வளர்த்த பெரியார்கள்' என்னும் தலைப்பில் இராஜ.சிவ.சாம்பசிவ சர்மா என்னும் தமிழாசிரியர் 1950இல் ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். கோடம்பாக்கத்தை மையமாகக் கொண்ட தென்னிந்தியப் பதிப்புக்கழகம் அந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது. நூறு பக்கங்கள் மட்டுமே கொண்ட அந்தப் புத்தகத்தில் பாண்டித்துரைத்தேவர், இருதாயலய மருதப்பத் தேவர், மீனாட்சிசுந்தரம் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர், ஆறுமுக நாவலர், விபுலானந்த அடிகள், நமசிவாய முதலியார் ஆகிய ஏழு அறிஞர்களுடைய வாழ்க்கைச்சுருக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவருமே பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி முதல் இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையிலான காலத்தில் தமிழின் வளர்ச்சிக்குத் தம்மாலான பங்களிப்பை வழங்கியவர்கள்.

நூலகத்தில் சிறுகதைத் தொகுதிகளைக் கொண்ட அடுக்கில் சார்வாகனுடைய 'எதுக்குச் சொல்றேன்னா' தொகுதியைத் தேடிக்கொண்டிருந்த போது இந்தப் புத்தகம் கிடைத்தது. இதற்கு முன்பு படித்தவர் யாரோ அடுக்கு மாறி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். புத்தகத்தின் தலைப்பு ஒருவித நம்பிக்கையூட்டியதால் வீட்டுக்கு எடுத்துவந்து படித்தேன்.

ஒரு காலத்தில் தமிழைப் படிப்பது என்பது ஏட்டில் எழுதி வைக்கப்பட்டிருந்த தமிழிலக்கியங்களைத் தேடித்தேடிப் படிப்பதாகவே இருந்தது. ஆழமான மொழியறிவு வசப்பட்ட ஒரு மாணவர், அடுத்த நிலை கல்விக்காக தக்க ஆசிரியரைத் தேடிச் சேர்வது முதல் கட்டம். அந்த ஆசிரியர் தம்மிடம் உள்ள ஏடுகளின் துணையோடு அவர்களுக்கு இலக்கியப்பிரதிகளை விளக்கங்களுடன் கற்பிப்பது இரண்டாவது கட்டம். மாணவர் அந்த ஏடுகளைப் பார்த்து புதிய ஏடுகளில் பிரதியெடுத்து வைத்துக்கொண்டு படித்து மனப்பாடம் செய்யவேண்டும் என்பது மூன்றாம் கட்டம். படிக்கப்படிக்க பாடலும் பொருளும் அவர் மனத்தில் பதிந்துவிடும். ஓர் ஆசிரியரிடம் உள்ள ஏடுகள் முடிவடைந்த பிறகு, அந்த மாணவர் மேலும் கற்பதற்காக வேறொரு ஆசிரியரைத் தேடிச் செல்லவேண்டும். அது நான்காவது கட்டம். அந்தப் பயணங்களுக்கு முடிவே இல்லை. நல்ல ஆசிரியர்களும் நல்ல வாய்ப்புகளும் கிடைத்தால் வாழ்நாள் முழுதும் கற்றுக்கொண்டே இருக்கலாம். முடித்துவிட்டேன்

என்னும் சொல்லுக்கு கல்விக்களத்தில் இடமே இல்லை.

இப்படி தேடித்தேடித்தான் அந்தக் காலத்தில் கல்விச்செல்வம் அடையப்பட்டிருக்கிறது. ஒரு கட்டத்துக்குப் பிறகு அவரே ஆசிரியராக இருந்து இளைய தலைமுறையைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் தம் ஆயுட்காலத்தையே செலவழித்து தமிழை அறிந்திருக்கிறார்கள். தமிழையறிய விரும்பும் பிறருக்குக் கற்பித்து வளர்த்திருக்கிறார்கள்.

சேதுபதி அரசரால் அளிக்கப்பட்ட பாலவநத்தம், பாலயம்பட்டி என்னும் சிறு ஜமீன்களுக்குச் சொந்தக்காரராக வாழ்ந்தவர் பொன்னுசாமித்தேவர். அவருக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளில் ஒருவர் பாண்டித்துரைத் தேவர். முதலில் அவருக்கு ஆசிரியராக இருந்தவர் முத்துசாமி ஐயங்கார் என்பவர். அவர் பாண்டித்துரைத் தேவருக்கு தம்மிடம் இருந்த கம்பராமாயண ஏடுகளின் துணையோடு முழுநூலையும் கற்பித்தார். அதற்குப் பிறகு மதுரையில் வாழ்ந்த இராமசாமிப்பிள்ளை என்னும் வித்துவானிடம் சில நூல்களையும் பழனிக்குமாரத் தம்பிரானிடம் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் கற்றுக்கொண்டார் பாண்டித்துரைத்தேவர். எல்லாப் பாடல்களையும் அவர் மனப்பாடமாகக் கற்றுத் தேர்ந்தார். யாப்பை முழுமையாக அறிந்து சொந்தமாக பாடல்களை இயற்றும் ஆற்றலையும் அவர் பெற்றார். தமிழறிந்த பல புலவர்களை ஆதரித்தார்.

பிற்காலத்தில் இரட்டைப்புலவர்கள் என அழைக்கப்பட்ட ரா.இராகவையங்காரும் மு.ராகவையங்காரும் பாண்டித்துரைத்தேவரின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள். இவர்களில் ரா.இராகவையங்கார் இளமையிலேயே இறந்துவிட, மூத்தவரான மு.இராகவையங்கார் திருவிதாங்கூரில் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றச் சென்றுவிட்டார்.

1901ஆம் ஆண்டில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக மதுரைக்கு வந்திருந்தார் பாண்டித்துரைத்தேவர். அப்போது ஓய்வுப்பொழுதில் கம்பராமாயணத்தையும் திருக்குறளையும் படிக்கலாம் என்று பாண்டித்துரைத் தேவருக்குத் தோன்றியது. அவர் தங்கியிருந்த இடத்தில் அந்நூல்கள் இல்லை. அதனால் அவற்றை வாங்கி வருவதற்காக நண்பர்களை கடைக்கு அனுப்பிவைத்தார். ஆனால் மதுரை முழுதும் தேடியும் கூட அவர்களுக்கு அந்தப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. ஒரு காலத்தில் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் தமிழ்நூல் கிடைக்கவில்லையே என நினைத்த பாண்டித்துரைத்தேவருக்கு வருத்தம் மிகுந்தது.

அக்கணத்தில் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்றைத் தொடங்கி தமிழிலக்கிய நூல்கள் அனைத்தும் அந்த இடத்தில் கிடைக்கும் வகையில் செய்து தமிழைப் பரப்பவேண்டும் என்று முடிவெடுத்தார் பாண்டித்துரைத்தேவர். மறுநாள் நிகழ்ச்சியில் உரையாற்றும்போது தம் எண்ணத்தை கூட்டத்தாரோடு பகிர்ந்துகொண்டார். அனைவரும் அதைப் பாராட்டி ஆதரவுக்குரல் எழுப்பினர். அடுத்த நாளே, நான்காம் தமிழ்ச்சங்கம் தொடங்கிவிட்டது.

பாண்டித்துரைத்தேவர் வடக்கு வெளி வீதியிலிருந்த தம் மாளிகையையே தமிழ்ச்சங்கத்துக்கு அளித்தார். அச்சுக்கூடங்கள் அமைக்கப்பட்டன. செந்தமிழ்க் கலாசாலை என்னும் கல்விக்கூடம் உருவாக்கப்பட்டது. செந்தமிழ் என்னும் பெயரில் ஒரு பத்திரிகையும் தொடங்கப்பட்டது. பல பழைய நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பட்டன. அறிஞர்களால் ஒப்பு நோக்கப்பட்டு அச்சு வடிவத்துக்கு மாற்றப்பட்டன.

தமிழில் பிழைபடப் பேசுவதையும் எழுதுவதையும் கண்டாலே வெறுப்பு கொள்வார் பாண்டித்துரைத்தேவர். பிழைகள் மலிந்த நூலை கையால் தொடக்கூட அவர் கூசுவார். ஒருமுறை ஸ்காட் என்னும் வெள்ளையர் திருக்குறளில் பிழைகள் இருப்பதாகக் கூறி, அப்பிழைகளை எல்லாம் திருத்தி புதிதாக திருக்குறளை அச்சிட்டார். அதற்கு 'சுகாத்தியர் திருத்திய திருக்குறள்' என்னும் பெயரைச் சூட்டினார். ஆனால் அதற்குப் பொதுமக்களிடம் போதிய ஆதரவில்லை. அது அந்த ஆங்கிலேயருக்கு வருத்தத்தை அளித்தது. உடனே அவர் பாண்டித்துரைத் தேவரைச் சென்று சந்தித்து தம் வருத்தத்தை வெளிப்படுத்தினார். ஒரு புத்தகத்தை வாங்கி மேலோட்டமாகப் பார்த்தார். அந்தப் புத்தகத்தை மதிப்பிட அவருக்கு அந்த ஒரு பக்கமே போதுமானதாக இருந்தது. உடனே விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த எல்லாப் புத்தகங்களையும் கொண்டு வருமாறு அவரிடம் சொன்னார். அந்த ஆங்கிலேயரும் அனைத்து நூல்களையும் எடுத்துச் சென்று கொடுத்தார். முன்னூறு ரூபாய் பணத்தைக் கொடுத்து அவற்றை வாங்கிக் கொண்டார் பாண்டித்துரைத்தேவர். ஆங்கிலேயர் மகிழ்ச்சியோடு வெளியேறியதும் பிழையான புத்தகங்கள் பிறர் கைகளில் பட்டுவிடக்கூடாது என்கிற கருத்தின் விளைவாக அப்புத்தகங்களையெல்லாம் குழிதோண்டிப் போட்டு எரித்துவிட்டார்.

தமிழ்ப்பற்றுக்கு அப்பால் தேசியப்பற்று கொண்டவராகவும் வாழ்ந்தார் பாண்டித்துரைத்தேவர். அவர் வாழ்ந்த காலத்தில்தான் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியை அமைக்க வ.உசி. முயற்சி செய்துகொண்டிருந்தார். அவருக்கு பத்து லட்ச ரூபாய் தேவைப்பட்டது. அவர் தம்மைச் சந்திக்க வந்தபோது தம் பங்காக ஒரு லட்சம் ரூபாயை வ.உ.சி.க்கு கொடுத்தார். சில ஆண்டுகளில் நிறுவனம் கலைந்து பொருளிழப்பு ஏற்பட்டபோதும் அதைப்பற்றி அவர் வருத்தப்படவில்லை.

பாண்டித்துரைத்தேவரின் நான்காம் தமிழ்ச் சங்கத்தில் வித்துவானாகப் பணியாற்றியவர்களில் ஒருவர் சண்முகம் பிள்ளை. அவருடைய திறமையையும் புலமையையும் அறிந்து அவரிடம் தமிழ் கற்பதற்காக மாணவனாக வந்து சேர்ந்தவர்தான் நமச்சிவாய முதலியார். வேலூருக்கு அருகிலிருக்கும் காவேரிப்பாக்கத்தைச் சேர்ந்தவர் அவர். பதின்மூன்று ஆண்டு காலம் ஆசிரியரின் வீட்டிலேயே தங்கி, தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்று தேர்ச்சி பெற்றார். பிராட்வே செயிண்ட் சேவியர் பாடசாலையில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். திருவிளையாடற்புராணம், பெரிய புராணம், பாகவதம், கம்பராமாயணம் ஆகிய அனைத்தையும் மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் உரைநடையில் எழுத வேண்டும் என்னும் ஆவல் அவருக்குள் எழுந்தது. இதற்காகவே ஒரு பத்திரிகையைத் தொடங்கினார் அவர். முதல் கட்டமாக திருவிளையாடற்புராணத்தின் பகுதிகளை உரைநடையில் எழுதி தொடராக வெளியிட்டார். அவருடைய தமிழ்நடையை அனைவரும் பாராட்டினர். வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த முயற்சி என்று பாராட்டினர். ஆனால் இருபத்திரண்டு இதழ்களுக்குப் பிறகு பொருளிழப்பின் காரணமாக இதழ் வெளியீட்டை நிறுத்தவேண்டிய சூழல் ஏற்பட்டது.

அக்காலத்தில் சிறுவர்களின் தகுதி, மனநிலை, விருப்பம் ஆகியவற்றை அறிந்து புத்தகங்கள் எழுதப்படவில்லை. ஒவ்வொருவரும் தம் மேதாவிலாசத்தை அறிவிக்கும் வழியாகவே புத்தகங்களை எழுதி வந்தனர். அந்த எண்ணத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டு, சிறுவர்களுக்கு இலக்கிய நூல்களை அறிமுகப்படுத்தும் ஆவலோடு புத்தகங்களை எழுதத் தொடங்கினார் முதலியார். முதன்முதலாக அவர் வாக்கிய இலக்கணம் என்னும் நூலை எழுதி வெளியிட்டார். அக்காலத்தில் மிகச்சிறந்த சிறுவர் நூலாக அது கருதப்பட்டது. அதைத் தொடர்ந்து எண்ணற்ற நூல்களை அவர் கல்வி கற்கும் மாணவர்களுக்காக எழுதி வெளியிட்டார். கீழ்வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரைக்கும் ஒவ்வொரு வகுப்புக்கும் ஏற்றபடி பொருளும் நடையும் அமைய பாடப்புத்தகங்களை எழுதி வெளியிட்டார். அதே சமயத்தில் தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை, நன்னூல், தணிகைப்புராணம், குறுந்தொகை ஆகியவற்றை பதிப்பித்தார். உரைநடையை வலுப்படுத்த இளமை முதலே கற்பித்தல்தான் சிறந்த வழியென நம்பி, அரிய பாடப் புத்தகங்களை எழுதி, உரைநடை எழுதும் ஆற்றலை பிள்ளைகளிடம் உருவாக்கிய நமச்சிவாய முதலியாரின் தொண்டு போற்றுதலுக்குரியது.

பாண்டித்துரைத்தேவரைப் போலவே தமிழுக்குத் தொண்டாற்றிய மற்றொரு ஆளுமை ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருநெல்வேலியில் பிறந்தவர். அவர் வசித்த இடத்தில் ஒரு தமிழ்ப்பள்ளிக்கூடம் இருந்தது.அதில் சேர்ந்து சுப்பிரமணிய பிள்ளை என்பவரிடம் தமிழ்க்கல்வி கற்றார். அவருக்கு ஒன்பது வயது நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அவர் தந்தையார் திடீரென மறைந்தார். ஒரு நாடகநூலை எழுதிக் கொண்டிருக்கும்போதே அவர் உயிர் பிரிந்துவிட்டது. ஒன்பது வயதுச் சிறுவனான நாவலர் அப்பிரதியைத் தொடர்ந்து எழுதி முடித்தார். அந்த அளவுக்கு இளமையிலேயே திறமை மிக்கவராக இருந்தார் நாவலர். அவருடைய சகோதரர்கள் அவரை சரவணமுத்துப் புலவர், சேனாதிராய முதலியார் போன்ற ஆசிரியர்களிடம் அனுப்பி இலக்கண இலக்கிய நூல்களை கற்றுக்கொள்ள வைத்தனர். பீட்டர் பார்சிவல் என்னும் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்றார். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் மொழிபெயர்க்கும் கலையிலும் தேர்ச்சி பெற்றார்.

அவருடைய மொழிப்புலமையை அறிந்த ஆசிரியர் பார்சிவல் பைபிளை தமிழில் மொழிபெயர்க்கும்படி தூண்டினார்.ஆசிரியரின் விருப்பத்துக்கிணங்கி, பைபிளை செம்மையாக மொழிபெயர்த்தார் நாவலர். அக்காலத்தில் சென்னையிலும் பைபிளை மொழிபெயர்க்கும் முயற்சி நடைபெற்று வந்தது. நாவலரை அழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்தார் பார்சிவல். அங்கு மொழிபெயர்ப்புக்குழுவினரைச் சந்தித்து நாவலரின் மொழிபெயர்ப்பைக் காட்டினார். மழவை மகாலிங்கையர் என்னும் புலவர் இரு மொழிபெயர்ப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்து நாவலரின் மொழிபெயர்ப்பே சிறப்பாக இருப்பதாக அறிவித்தார்.

பைபிளை மொழிபெயர்த்திருந்தாலும் நாவலர் சிவபக்தியில் சிறந்தவராகவே இருந்தார். சைவ இலக்கியங்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவர் அவர். கிறித்துவ மதமாற்றத்தைக் கண்டித்து நூல்களை எழுதினார். சைவப் பிரகாச வித்யாசாலை என்னும் பெயரில் ஒரு பள்ளியைத் தொடங்கி சைவ நூல்களை அனைவருக்கும் கற்பிக்க ஏற்பாடு செய்தார். அப்பாடசாலைக்குத் தேவையான நூல்களை அவரே எழுதி அச்சிட்டு வழங்கினார். பிறகு சிதம்பரத்திலும் இதேபோல ஒரு சாலையைத் தொடங்கினார். தேவார திருவாசகங்களை பண்ணோடு ஓதுதற்கு கற்பித்தார். தமிழ்த்தொண்டும் சைவத்தொண்டும் நாவலருக்கு இரு கண்களாக விளங்கின. இராமலிங்க சுவாமிகள் இயற்றிய திருவருட்பாவை மறுத்து போலி அருட்பா மறுப்பு என்றொரு புத்தகத்தை எழுதி தியாகேச முதலியார் என்னும் பெயரில் வெளியிட்டார் நாவலர்.

நூலாசிரியர் முன்வைத்திருக்கும் ஆளுமைகளில் இலங்கையைச் சேர்ந்த இன்னொருவர் சுவாமி விபுலானந்தர். அவருடைய இயற்பெயர் மயில்வாகனன். அடிப்படையில் இயற்பியல் பாடத்தில் அவர் பட்டம் பெற்றிருந்தபோதும் தமிழில்தான் அவருக்கு அதிகமான ஆர்வம் இருந்தது. இலக்கண இலக்கிய நூல்களில் இயற்கையாகவே

நாட்டம் கொண்டிருந்தார். வேதாந்தத்தைப் பரப்பும் பொருட்டு சென்னையிலிருந்து இலங்கைக்குச் சென்ற சுவாமி சர்வானந்தருடைய உரைகளால் கவரப்பட்டு அவருடைய தொண்டராக மாறிவிட்டார் மயில்வாகனன். அதனால் அவரைத் தம்மோடு சென்னைக்கு அழைத்து வந்து ராமகிருஷ்ண மடத்தில் தங்கவைத்துக்கொண்டார் சர்வானந்தர். வேதாந்தக் கல்வியை முறையாகக் கற்கத் தொடங்கினார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் அருண்மொழிகளையெல்லாம் படிப்படியாக அழகிய செய்யுள் வடிவில் மாற்றி எழுதினார். கர்மயோகம், அனுபூதிப் பேச்சுகள், சம்பாஷணைகள் ஆகிய நூல்கள் மயில்வாகனனின் பெயரில் மடத்துப் பிரசுரங்களாக வெளிவந்தன. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், வேதாந்த கேசரி ஆகிய பத்திரிகைகளை நடத்தும் பொறுப்பு அவரைத் தேடி வந்தது. முற்றும் துறந்த துறவியாக மாறிய பிறகே விபுலானந்தர் என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டார் மயில்வாகனன்.

சிதம்பரம் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளை ஏற்று அங்கு சென்று இரண்டாண்டுகள் தமிழ்ப்பெரும்புலவராக சேவையாற்றினார். இலங்கையில் அவர் ஏற்கனவே நிறுவிய பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல வேண்டிய கடமையின் காரணமாக அவர் இந்தியாவை விட்டு இலங்கைக்குச் சென்றார். ஐந்தாண்டுகள் அங்கே சேவையாற்றிய பிறகு அங்கிருந்தே கைலாய யாத்திரைக்குச் சென்றார். இமயமலையைச் சுற்றி வந்த தருணத்தில் இமயஞ் சேர்ந்த காக்கை என்னும் தலைப்பில் அரியதொரு கட்டுரையை எழுதி வெளியிட்டார், பதினான்கு ஆண்டு கால ஆராய்ச்சிக்குப் பிறகு யாழ்நூலை அரங்கேற்றினார். மதங்க சூளாமணி, ஆங்கில வாணி ஆகிய நூல்களை இயற்றினார்.

கடந்த நூற்றாண்டுகளின் இலக்கியச் செயல்பாடுகளை நினைத்தால் மலைப்பாகவே இருக்கிறது. அவர்களுடைய அக்கறையும் உறுதியும் உரங்களென அமைந்து தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உதவியிருக்கின்றன என்பதில் ஐயமே இல்லை. சிறுசிறு தாவல்களாக அந்த வளர்ச்சி நிகழ்ந்திருக்கிறது. ஓலைச்சுவடிகளில் இருக்கும் தமிழிலக்கியச் செல்வத்தை தக்க ஆசிரியர்களின் உதவியோடு கற்றுத் தேர்ச்சி பெறுதல், அச்சுப்பொறியின் பயன்பாட்டைத் துணையாகக்கொண்டு ஓலைச்சுவடியில் உள்ள இலக்கியப்படைப்புக்கு நூல்வடிவத்தைக் கொடுத்தல், தமிழிலக்கியத்தின் அருமை பெருமைகளை மேடைதோறும் எடுத்துரைத்து நூல்கள் மீது ஆர்வத்தை ஊட்டுதல், படிக்கவைப்பதன் வழியாகவே இலக்கிய அறிமுகத்தை ஏற்படுத்துதல், பாடல்களுக்கான காலம் மங்கி மறைந்து உரைநடைக்கான காலம் தொடங்கிவிட்டதை உய்த்துணர்ந்து உரைநடையில் ஈடுபாட்டை வளர்த்தல், அதற்காகவென்றே உரைநடைநூல்களை எழுதி வெளியிடுதல் என அடுத்தடுத்த படிகள் வழியாகவே எல்லா வளர்ச்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன.

கடந்து வந்த காலத்தை திரும்பிப் பார்க்கும் முயற்சியாகவே சாம்பசிவ சர்மாவின் நூல் அமைந்திருக்கிறது. தமிழ் வளர்த்த பெரியார்கள் அனைவருமே என்றென்றும் நம் வணக்கத்துக்குரியவர்கள்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்.



15.02.2023 அன்று ஸ்ரீவில்லிப்புத்தூரில் புத்தகக் கண்காட்சியை நகர்மன்றத் தலைவர் தங்கம் ரவிகண்ணன் அவர்கள் திறந்து வைத்தார். நகர்மன்ற துணைத்தலைவர் செல்வமணி, அங்குராஜ், ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர் வளர்ச்சி இயக்க நிர்வாகிகள் சந்திரன், உதயசூரியன், ஜாகீர் உசேன், மருத்துவர் பால்சாமி, அரசு கலைக்கல்லூரி ரவி, என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, கிளை மேலாளர் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



*ஃபீடிங் பாட்டில் மூலம் பால் கொடுக்கும்போது மைக்ரோ பிளாஸ்டிக்கும் குழந்தையின் உடலுக்குள் செல்வதால் அதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.*

# தாய்ப்பாலும் நஞ்சாகுமா?

மருத்துவர் **ப.வைத்திலிங்கம்**

அனைத்து பாலூட்டிகளும் தன் குட்டிகளுக்கு ஆரம்ப காலத்தில் தாய்ப்பால் கொடுத்து பிழைக்க வைத்து, வளர உதவுவது ஒரு இயல்பான நிகழ்வே. மனித இனமும் இதற்கு விலக்கல்ல. தன் இனம் இந்த பூமியில் பல்கிப் பெருக வேண்டும் என்ற இயற்கையின் உந்துதலின் விளைவே இந்த தாய்ப்பாலூட்டி வளர்த்தல். மனிதனின் ஆதிகால நாடோடி வாழ்க்கையிலிருந்து இன்று வரையிலும் தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளின் ஆரம்பகால இறப்பு விகிதம் அதிகமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது.

மனிதனின் முதல் உணவும் மருந்தும் தாய்ப்பால்தான். சமீப காலமாக தாய்ப்பாலிலும் பல்வேறு கெமிக்கல்கள் கலந்து வருவதாக உலகம் முழுவதிலிருந்தும் வரும் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இன்றைய நிலையில் உலகம் முழுவதும் தாய்ப்பால் ஊட்டும் எல்லா தாய்மார்களும் தங்களையும் அறியாமல் மிகக் குறைந்த அளவில் நச்சுப் பொருள்களான கெமிக்கல்களையும் சேர்த்து ஊட்டுகிறார்கள் என்பது கசக்கிற உண்மை. அதிலும் ஒரு ஆறுதலான தகவல் என்னவென்றால், குழந்தைக்குப் போகும் நச்சுப் பொருள்களின் தினசரி அளவு உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ள அளவை விடவும் மிகவும் குறைவுதான்.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு. நோய்க்கிருமிகளை எதிர்க்கும் சக்தி அதிகம், ஒவ்வாமை, ஆஸ்துமா, உடல் பருமன், இருதய நோய் என பல்வேறு பிரச்சினைகளில் இருந்து விடுதலை என பல நன்மைகள். இன்றைய உலகில் காரணம் தெரியாமல் புதிது புதிதாக நோய்கள், பிறவிக் கோளாறுகள் என்று மனித இனம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. தாய்ப்பாலில் கலந்துள்ள நச்சுப்பொருள்களுக்கும் இவைகளுக்கும் தொடர்பு இருக்குமோ என்று மருத்துவ உலகம் அஞ்சுகிறது. இந்தக் கட்டுரையில் அப்படித் தாய்ப்பாலில் கலக்கும் நஞ்சுகளைப் பற்றிப் பார்ப்போம்.

**எங்கிருந்து நஞ்சு வந்தன?**

பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பகுதியில், நடந்த தொழிற்புரட்சியின் காரணமாக ஆங்காங்கே தொழிற்சாலைகள் தோன்றி மனித வாழ்வுக்கு வளம் சேர்க்க ஆரம்பித்தன. தொழிற்சாலைக் கழிவுகள் நிலத்தையும், நீரையும், காற்றையும் மாசுபடுத்த ஆரம்பித்தன. தான் கண்டுபிடித்த கெமிக்கல்களைக் கொண்டு விவசாயப்பயிர்களைத் தாக்கும் பூச்சிகளையும்,

கிருமிகளையும் ஒழித்து நிறைய உற்பத்தி செய்து வளமாக வாழும் மனிதன், அதே கெமிக்கல்கள் சுற்றுச்சூழலை மாசுபடுத்தி தன் வாழ்க்கையை நஞ்சாக்கிக் கொண்டிருப்பதைத் தடுக்க முடியாமல் தவிக்கிறான். மெல்ல மெல்ல அந்த நஞ்சுகள் இந்த பூமியில் வாழும் உயிரினங்களின் உணவு வளையத்திற்குள் புகுந்து உயிரினங்களின் உடலுக்குள்ளும் சென்று தங்க ஆரம்பித்தன. மனிதனும் விதி விலக்கில்லாமல் தான் கண்டுபிடித்த இரசாயனங்களைத் தன் உடலுக்குள்ளும் சேர்த்துக் கொண்டான்.

**தாயின் உடலுக்குள் எப்படி சென்றன?**

பெரும்பாலான நஞ்சுகள் மனிதனின் உணவிலும், சுவாசத்திலும் கலந்து உடலுக்குள்ளே செல்லுகின்றன. சில வகையான கெமிக்கல்கள் தோலில் பட்டாலே போதும்; உள்ளே சென்று விடும். உடலுக்குள் சென்று கொழுப்புச் சத்தோடும், புரதச் சத்தோடும் சேர்ந்து கரைந்து அதனோடே ஐக்கியமாகி உடலுக்குள்ளேயே தங்கி விடுகின்றன. பிறப்பதற்கு முன் தாயின் ரத்தம் மூலம் கருப்பையில் வளரும் குழந்தையின் உடலுக்குள்ளும் நுழையும் நச்சுப் பொருள்கள், பிறந்த பின் தாய்ப்பாலின் மூலம் தொடர்ந்து செல்கின்றன. தாயின் உடலில் சேர்ந்துள்ள கொழுப்பெல்லம் கரைந்து தாய்ப்பாலாக வரும்போது குழந்தைக்குத் தாய்க்குக் கிடைத்ததை விடவும் அதிகமான நச்சுப்பொருள்கள் போய்ச் சேர்ந்து விடுகின்றன.

**எத்தனை வகையான நச்சுப் பொருள்கள்?**

**1 புகை**

புகைக்கும் போதைக்கும் அடிமையான தாய் அதில் கொஞ்சம் குழந்தைக்கும் கொடுத்துக் கொண்டே இருக்கிறாள். வீட்டில் உள்ளவர்கள் புகைக்கும்போதும் காற்றில் கலந்துள்ள புகையைத் தன்னை அறியாமல் குழந்தையும் உள்வாங்கிக் கொள்கிறது. காற்றில் கலந்து வரும் தொழிற்சாலைக் கழிவுகள் குழந்தையின் சுவாசத்தில் கலந்து உடலுக்குள் செல்லும்போது தாய்ப்பாலின் மூலம் செல்லும் அளவைவிட 25 முதல் 135 மடங்கு அதிகம் இருப்பதாக அமெரிக்க ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவ ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

**2 கன உலோகங்கள் - ஹெவி மெட்டல்கள்**

ஹெவி மெட்டல்கள் என்று அழைக்கப்படும் ஆர்சனிக், பாதரசம், காரீயம், கேட்மியம், அலுமினியம் போன்றவைகளின் மூலக் கூறுகளும் மனித உடலுக்குள் எளிதில் சென்று விடுகின்றன. ஆப்பிரிக்க, கானா நாட்டில் உள்ள சுரங்கங்களில் வேலை செய்கின்ற பெண்களில் குழந்தைக்கு பாலூட்டுகின்ற தாய்மார்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் உடலிலும் அவர்களின் குழந்தைகளின் உடலிலும் ஹெவி மெட்டல்களான காரீயம், மெர்க்குரி, ஆர்சனிக், மற்றும் கேட்மியம் எந்த அளவு உள்ளது என்று ஒரு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. முடிவில் தாய்மார்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் உடலில் மிக அதிக அளவில் இந்த உலோகங்களின் மூலக் கூறுகள் இருந்ததைக் கண்டார்கள். குழந்தைகளின் உடலுக்குள் தாய்ப்பாலின் மூலம் இந்த ஹெவி மெட்டல்கள் போய் சேருவதையும் கண்டுபிடித்தார்கள். சுரங்கங்களில் மட்டும்தான் ஹெவிமெட்டல்கள் உள்ளன என்று எண்ண வேண்டாம். இம்மாதிரி ஹெவி மெட்டல்கள் கலந்துள்ள பொருள்கள் ஏராளமாக சந்தையில் உலகம் முழுதும் கிடைக்கின்றன.

காஸ்மெடிக் பொருள்கள், உணவுப் பொருள்கள், பெட்ரோலியப் பொருள்கள், வர்ணப்பூச்சுக்கள் போன்றவைகளில் இந்த கன உலோகங்கள் உள்ளன. இந்த உலோகங்கள் மூளை வளர்ச்சியிலும், இரத்த அணுக்கள் உற்பத்தியிலும் குறுக்கிட்டு குழந்தைக்கு உடல்பாதிப்பை உண்டு பண்ணுகிறது. மேலும் சிறுநீரகமும், கல்லீரலும் நாளடைவில் செயலிழக்கத் துவங்கி விடுகிறது.

**3 PFAS கெமிக்கல்கள் (POLY&PERFLUROALKYLSUBSTANCES)**

இந்த வகைக் கெமிக்கல்கள் முழுவதும் மனிதனால் கண்டுபிடிக்கப் பட்டவை. வழுவழுப்புத் தன்மையுடன் இருப்பதால் உராய்வைக் குறைப்பதற்கு பல்வேறு துறைகளில் உபயோகிக்கிறார்கள். உணவைப் பதப்படுத்துதல், பேக்கேஜிங், தீயணைப்பு, டெக்ஸ்டைல், ஆட்டோமொபைல், கட்டுமானம், அழகுசாதனப் பொருள்கள், டிடர்ஜண்ட்கள், டாய்லெட் கிளீனர்கள், நான்ஸ்டிக் சமையல் பாத்திரங்கள் என இவைகளின் பயன்பாடு எங்கும் பரவியுள்ளது. இவைகள் நீர், நிலம், காற்று என அனைத்திலும் கலந்து சூழலை விட்டு விலகாமல் இருக்கின்றன. நம் உடலுக்குள் செல்லும் இந்த வகைக் கெமிக்கல்கள் 30 வருடங்கள் கூட உடலிலேயே தங்கி விடுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அமெரிக்காவில் சியாட்டில் என்ற நகரில் ERIKA SHREDER என்ற ஆராய்ச்சியாளர் 2021ல், 50 தாய்மார்களின் தாய்ப்பாலை சேகரித்து பரிசோதித்ததில், அனைத்து மாதிரிகளிலும் இந்த கெமிக்கல்கள் இருந்ததைக் கண்டார். இந்த கெமிக்கல்கள் மனித உடலின் எதிர்ப்பு சக்தி மண்டலத்தைப் பலமிழக்கச் செய்து, புற்று நோய், சிறுநீரகச் செயல் இழப்பு, ஆஸ்துமா, தைராய்டு நோய்கள், மூளை நரம்பு நோய்கள், உயிரணுக்கள் பாதிப்பு என பல வகையான நோய்களுக்கு வழி வகுக்கின்றன.

**4. பிளாஸ்டிக்**

மனிதன் கண்டுபிடித்த அடுத்த முக்கிய உயிர்க்கொல்லி பிளாஸ்டிக் என்னும் பாலிமர் கெமிக்கல். அனைத்து வேலைகளுக்கும் உதவும் பொருள். இதன் மிக நுண்ணிய துகள்கள் - மைக்ரோபிளாஸ்டிக் - உலகெங்கும் வியாபித்து விட்டன. கடல், காற்று, நிலம், நீர் என அனைத்தும் பிளாஸ்டிக் குப்பைகளால் மூச்சுத் திணறிக் கொண்டு இருக்கின்றன. அனைத்து உயிரினங்களின் உடலுக்குள்ளும் புகுந்து விட்டன.

பாலிஎத்திலின், பாலிபுரொப்பலின், பி.வி.சி என்னும் பாலிவினைல் குளோரைடு போன்றவைகளின் துகள்கள் இல்லாத நுகர்வுப் பொருள்களே சந்தையில் இல்லை.

2022 ஜுன் மாதம் இத்தாலி ரோம் நகரில் குழந்தை பிறந்து ஒரு வாரமே ஆன 34 தாய்மார்களின் தாய்ப்பாலை எடுத்து ஆராய்ந்ததில் அவர்களில் 28 தாய்மார்களின் பாலில் மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் இருப்பதைக் கண்டனர்.

**5. பூச்சி மருந்துகள்**

பூச்சிக் கொல்லிகளால் உலகம் முழுவதும் ஆண்டுதோறும் முப்பது லட்சம் மக்கள் பாதிக்கப்படுவதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. இதில் குழந்தைகளும் விவசாயிகளும்தான் அதிக அளவில் பாதிக்கப்படுகிறார்கள். பூச்சிக் கொல்லிகள் நம் உணவு, சுவாசம் மற்றும் தோல் மூலமாகவும் உள்ளே நுழைந்து அதிக காலம் தங்கி ஆபத்தை உண்டுபண்ணுகிறது.

1980களில் இந்தியாவில் நிறைய அளவில் DDT என்னும் பூச்சிக்கொல்லி உபயோகத்தில் இருந்தது. அப்போது லக்னோவில், DDT யின் அளவு தாய்ப்பாலில், ஆட்டுப்பாலில், மாட்டுப்பாலில் எவ்வளவு இருக்கிறது என்று ஆராய்ந்தனர். முடிவில் மாட்டுப்பால் ஆட்டுப்பால் ஆகியவற்றில் உள்ளதை விடவும் தாய்ப்பாலில் 12 மடங்கு அதிகமாக இருப்பதைக் கண்டனர். இந்த DDT வகை எளிதில் மனித உடலில் உள்ள கொழுப்பில் கரைந்து, கலந்து விடுகிறது. தாய் நிறைய பாலும் பால் பொருள்களும், இறைச்சி, மீன், முட்டை என கொழுப்புச் சத்துள்ள பொருள்களும் உண்ணும்போது இயல்பாகவே தாயின் உடலில் அதிகம் சேர்ந்து விடுகிறது. பின்னர் தாய்ப்பால் மூலம் குழந்தைக்கும் சென்று அடைகிறது.

இன்னுமொரு ஆய்வு 2003ல் மத்தியப்பிரதேசம் போபாலில், கான்பூர் ஐஐடி வல்லுநர்களால் நடத்தப்பட்டது. அதன் முடிவு மற்றொரு பூச்சிக்கொல்லியான எண்டோசல்பான் தாய்ப்பாலில் அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கிறது. உலக சுகாதார நிறுவனத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட அளவை விடவும் பல மடங்கு குழந்தையின் உடலுக்குள் செல்வதாக சொல்கிறது. இந்த எண்டோசல்பான் என்னும் பூச்சிக்கொல்லி பூச்சிகளின் நரம்பு மண்டலத்தைத் தாக்கி அவைகளை அழிக்கிறது. கருத்தரித்த காலம் முதல் குழந்தையின் உடலுக்குள் சென்று குழந்தையின் மூளைச் செல்களில் பாதிப்பை உண்டு பண்ணுகிறது. மூளையில் டி.என்.ஏ உற்பத்தியைக் குறைத்து நியூரான்களின் எண்ணிக்கையைக் குறைத்து விடுகிறது. பூச்சிக் கொல்லிகள் அனைத்துமே உயிர்க்கொல்லிகள்தான். அதிக அளவில் சேரும்போது உடனடி ஆபத்தையும், சிறிய அளவில் சேரும்போது புற்றுநோயையும், நாளமில்லாச் சுரப்பிகளின் குறைபாடையும் ஏற்படுத்துகின்றன.

**என்ன விளைவுகள் வரலாம்?**

எல்லா சுற்றுச் சூழலை மாசாக்கும் அனைத்து கெமிக்கல்களும் உயிரினங்களின் உடலுக்குள்ளும் சென்று விட்டன. உடலில் சேரும் அளவைப் பொறுத்து விளைவுகள் வருகின்றன. மனிதன் தான் வாழக் கண்டுபிடித்த கெமிக்கல்கள், ஆலைக் கழிவுகள் அனைத்தும் மனித உயிருக்குக் கேடு விளைவிப்பதாக இருக்கின்றன. பிறவிக்குறைபாடுகள், மூளை வளர்ச்சி செயல்பாடு பாதிப்பு, புற்று நோய்கள் என பல்வேறு வகைகளில் மனித இனம் பாதிப்புக்கு உள்ளாகிறது. உலகம் முழுவதும் காரணம் கண்டுபிடிக்க முடியாமலேயே நிறைய புதுப் புது நோய்கள் உண்டாகின்றன. பழைய வீரியம் இழந்து வியாதி உண்டு பண்ண முடியாத கிருமிகள் மீண்டும் வீரியம் பெற்று அடுத்த ரவுண்டுக்குத் தயாராகின்றன. அனைத்துக்கும் காரணம் சுற்றுச் சூழல் கெட்டுப்போனதே காரணம் என்கிறார்கள்.

**விழிப்புணர்வு தேவை.**


இந்த நச்சுச் சூழலில் இருந்து விடுபட, மனிதன் முதலில் வாழ்வியல் மாற்றங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். நச்சுப் பொருட்கள், தாயின் உடலுக்குள் செல்லும் அளவை, விகிதத்தைக் குறைக்க முயற்சிக்கலாம். கருவுற்றிருக்கும் பெண்களையும் தாய்ப்பாலூட்டும் தாய்மார்களையும் நச்சுப் புகை, பொருள், உணவுகள் இவைகளிடமிருந்து விலக்க வேண்டும். அம்மாதிரியான இடங்களில் வேலை செய்யக் கூடாது. துரித உணவுகள், பாக்கெட் உணவுகள், எண்ணெய் மற்றும் கொழுப்பு அதிகமுள்ள உணவுகள், இறைச்சி, மீன் போன்றவற்றைத் தவிர்க்கலாம். பிளாஸ்டிக் பைகளையும் பாக்கெட்டுகளையும், மற்றும் PFAS கெமிக்கல்கள் இருக்கும் (FLURO அல்லது PERFLURO என்று ஆரம்பிக்கும் மூலப்பொருட்கள் அடங்கியது) அழகுசாதனப் பொருள்களையும் தவிர்க்க வேண்டும்.

முதலில் தாய் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ உறுதி ஏற்க வேண்டும். அவ்வப்போது அதற்கான மருத்துவப் பரிசோதனைகள் மூலம் உறுதி செய்து கொள்ளவும் வேண்டும். தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தத் தேவையில்லை. தாய்ப்பாலினால் குழந்தைக்கு உண்டாகும் நலன்களையும் இம்மாதிரி நச்சுப்பொருள்களால் வரும் ஆபத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குழந்தையின் நலம் கருதி தாய்ப்பால் கொடுப்பதே நல்லது. ஃபீடிங் பாட்டில் மூலம் பால் கொடுக்கும்போது மைக்ரோ பிளாஸ்டிக்கும் குழந்தையின் உடலுக்குள் செல்வதால் அதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.


இதற்கெல்லாம் தீர்வு அவ்வளவு எளிதல்ல. உலக நாடுகள் ஒன்றுபட்டு சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதைக் குறைத்தால் மனித இனம் ஆரோக்கியமாக வாழலாம். ●

கட்டுரையாளர், குழந்தை மருத்துவ நிபுணர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 325/-




₹ 270/-




₹ 120/-




₹ 165/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



மதிப்புரை

# 'பாமர இலக்கியம்' புதினத்தில் கிராமியப்பதிவுகள்

முனைவர் பெ.முருகன்

'இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது' என்றார் மகாத்மா காந்தி. உண்மையில் கிராமப்புறச் சமூகங்களுக்கே உரிய நிறை, குறைகளோடுதான் இன்றைய மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றே கூற வேண்டியுள்ளது. இத்தகைய கிராமத்து வாழ்க்கையையும், அதன் செழுமைகளையும் வட்டார வழக்கான மக்களின் மொழியோடு இயைந்து எழுதியிருக்கிற நாவல்தான் பாமர இலக்கியம். இருபதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களை இயக்கிய கஸ்தூரிராஜா தன்னுடைய திரைப்படங்களிலும் கிராமம் சார்ந்த மக்களின் பண்பாட்டை, மன உணர்வுகளை மிக எதார்த்தமாகப் பதிவு செய்திருக்கிறார். தென்கோடித் தமிழகத்தின் பழக்கவழக்கங்கள் பலவும் நாவலில் விவரிக்கப்படுகின்றன. சுதந்திரப் போராட்ட காலத்தில் ஒரு தமிழ் கிராமம் எப்படியான உணர்வுகளைக் கொண்டிருந்தது. மக்களின் வாழ்வு நிலை எப்படியிருந்தது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார் நாவலாசிரியர். கிராமத்தின் மண்ணோடு பின்னிப்பிணைந்த வெகுசன மக்களின் சடங்குகள், புழங்கு பொருட்கள், நம்பிக்கைகள், விளையாட்டுகள், காதல், திருமணம், சண்டை சச்சரவுகள், வழிபாடு, பண்டிகை, விருந்து, திருவிழா போன்றவற்றை இந்நாவல் முன்வைக்கும் விதத்தை இக்கட்டுரை பேச முயல்கிறது.

**நாவலின் கதைக்களம்**

மனிதன் எழுதவும், படிக்கவும் கற்றுக் கொள்வதற்கு முன் தன் உணர்வுகளை கலை நயத்துடன் வாய்மொழி வடிவில் வெளிப்படுத்தியவையே நாட்டுப்புற கதைகளாகும். இவை இன்று மிகவும் குறைந்து வருகின்றன. இன்றைக்கு வட்டாரமொழி நாவல்கள் வரத் தொடங்கியிருக்கின்றன. அந்தவகையில் இந்த நாவலின் ஆசிரியர் தான் பிறந்து வளர்ந்த கிராமிய மண்ணை, மக்களை, வாழ்க்கையை விரிவாக இந்த நூலில் பதிவு செய்திருக்கிறார்.இன்றைய விஞ்ஞான வேகமும், நகர்மயமாதலும் கிராமங்களின் புறத் தோற்றத்தையும், வாழ்வியல் முறைகளையும் முற்றிலும் மாற்றிப்போட்டு விட்டன. இதனால் தமிழர்கள் இழந்தவை என்னென்ன? என்பதை வாசகர்களுக்கு தெரிவிப்பதற்காக எழுதினேன் எனத் தன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார் நாவலின் ஆசிரியர். முழுவதும் வட்டார வழக்கு மொழியிலேயே எழுதப்பட்டிருப்பது இந்த நூலின் சிறப்பாகும். பேச்சு வழக்கை சுமந்திருக்கிற இந்நூல் வாசிப்பவர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை ஏற்படுத்துகிறது. தேனியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள மல்லிங்காபுரமும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும் நாவலின் கதைக்களமாகத் திகழ்கிறது.

**பாத்திரங்களும், அடையாள வெளிப்பாடும்**

நாவலின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்படுகிற முத்துக்கருப்பனும், முருகேசனும் நாவலின் போக்கை வழிநடத்திச் செல்கின்றனர். வேளாண்மையை மட்டுமே நம்பியிருக்கிற சம்சாரிகளின் சுவாரசியமான வாழ்க்கையை பாத்திரங்களின் மூலம் நம் கண் முன்னே நிறுத்துகின்றார் ஆசிரியர். கோட்டை தங்கம், சீனித்தாயி, துரைச்சாமி, தர்மர், தவசி, பூச்சி, மாயன், இராமர், ரெங்குத்தாயி, மாரிச்சாமி, ராமுதாயி, முனியாண்டி, பாண்டுரங்கன், வேலம்மாள் இப்படி நிறைய பாத்திரங்கள் நாவல் முழுவதும் பவனி வந்தாலும்,'மாமென், மாப்ள, மச்சியான், கொளுந்தன், அண்ணென், தம்பி, சித்தப்பு, பெரியப்பு, பாட்டென், அப்பச்சி, சியான் இன்னும் பொம்பளைகளுக்குள்ள மதினி, நாத்துனா, கொளுந்தியா, அக்கா, தங்கச்சி, சின்னாத்தா, பெரியாத்தா, பாட்டிண்டு இந்த நாவல் முழுவதும் உறவுப் பெயர்களாகக் கொட்டிக் கிடக்கின்றன.

**வட்டார வழக்குச் சொற்கள்**

நாட்டுப்புற வழக்குச் சொற்கள் என்பவை கிராம மக்களின் பேச்சு வழக்கை ஒட்டியவை. அது கிராம மக்களை நேரடியாக மட்டுமல்லாமல் இதயத்தோடு இதயத்தை பிணைத்து வைக்கின்றன. அவர்களுடைய தனித்தன்மையைக் காட்டுகின்றன. இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் ஒட்டுமொத்தமான நிகழ்ச்சிகளை பிரதிபலிக்கின்றன. வட்டார இலக்கிய நாவல் எங்கும் வட்டார மொழியே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "மொளச்சா செடி, தளுத்தாக் கொளுந்து, அரும்புனா மொட்டு, மலந்தா புவ்வு, பரிஞ்சா பூட்ட, சமஞ்சா கருது, காச்சா பிஞ்சு, வெளஞ்சா காயி, பழுத்தாப் பழம், முத்துனா நெத்து, வெடிச்சா வெடி" என இருபது வார்த்தைகளில் ஒரு செடியின் பிறப்பு முதல் இறப்பு வரை பதிவு செய்யும் பாமர மொழியை அத்தனை எளிதாகக் கையாண்டிருக்கிறார் கஸ்தூரிராஜா. காத்து கருப்பு, பம்முரது, பம்மாத்து, கேணச்சி, கண்ணால் கவுத்தா காட்டுச் சிறுக்கி, கண்ணுமுழிய பிதுக்கி கொமரிப் பிள்ளை மேல எறிஞ்சிவிட்டான், உறக்கம், உசுப்பு, செத்த நேரம், ரவைக்கு, கோக்கு மாக்கான, விறுவிறுண்டு, கருமம், கண்ராவி, எகடாசி, எடக்கு மடக்கு, ஒலமுடி, சுணையா, சிறுக்கி, உண்ச்சி, அம்புட்டுதே போன்ற வட்டார வழக்குச் சொற்கள் நாவலின் பக்கங்கள் தோறும் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரை ஒருவர் பேசுகின்ற மொழியை வைத்து அவர் எந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர் என்பதை எளிதாக அறிய முடியும். மதுரை வட்டாரத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்திருக்கக் கூடிய மல்லிங்காபுரத்தின் மண்ணின் மைந்தரான கஸ்தூரிராஜாவுக்கு இந்த வட்டார வழக்குகள் இயல்பாகவும், எதார்த்தமாகவும் அமைந்திருப்பது இயல்பே.

**வழிபாடு, சடங்குகள், நம்பிக்கைகள்**

கிராம மக்களின் தெய்வங்களையும், தேவதைகளையும், வழிபாடுகளையும் எண்ணுவது எளிதான காரியமில்லை. கோயில்கள் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. மனித மனம் ஒரு பலவீனமான கொடி அது தனக்கு தானே நிமிர்ந்து நிற்காது. கடவுள், தலைவர் போன்றோரைப் பற்றி ஏறிக் கொள்வதுதான் தொன்று தொட்டு இன்றுவரை இயல்பாகி விட்டது. டான்யோடர் "நாட்டுப்புற சமயம் என்பது அமைப்புக்கு உட்படுத்தப்பட்டு நிறுவனமாக்கப்பட்டு விட்ட கட்டுப்பாடுகளை கொண்ட சமயங்களுக்கு மாறுபாடானது" என்று கூறுகிறார். நாட்டுப்புற தெய்வங்களை,

1) ஊர்த் தெய்வங்கள்
2) இனத் தெய்வங்கள்
3) குலத் தெய்வங்கள்
4) சமாதித் தெய்வங்கள்

என்று பகுக்கின்றார் துளசி ராமசாமி.


கிராமம், கிராமம் சார்ந்த மக்கள், அவர்தம் தொழில்கள், நம்பிக்கைகள் எல்லாம் இயற்கையோடு இயைந்ததாக இருக்கும். அவர்களிடையே குல தெய்வங்கள், ஊர்ப் பொது தெய்வங்கள், தேவதைகள், துணைத் தெய்வங்கள், மூதாதையர் வழிபாடு போன்றவை நிரம்பியிருத்தலைக் காணலாம். இந்நாவலில் ஆங்காங்கே சில இடங்களில்

மேற்சொன்ன வழிபாடுகளைக் குறிப்பிட்டிருந்தாலும், மாட்டை வணங்குவதும், கிடா வெட்டுவதும், முளைப்பாரி எடுத்தலும் போன்றவையே அதிகம் பேசப்படுகின்றன. தைத்திருநாளுக்கு அடுத்த நாள் மாட்டை வணங்குவதும், அதனை கொண்டாடுவதும், அன்றைய நாளின் சிறப்பு வழிபாடாக வைத்திருக்கிறார்கள்.

இதைப் பின்வருமாறு நாவல் பதிவு செய்துள்ளது: "அந்தநாளில் யாரும் மாடுகளை அடிக்க மாட்டார்கள். மாட்டை தெய்வமாக வழிபடுவார்கள். ஏனென்றால் அந்த மாடுகள் இல்லையென்றால் சம்சாரித்தனம் இல்லை. விவசாயம் நின்று போனா அத்தனை பேரும் பட்டினிதா அதனால்தான் மாட்டை சம்சாரிகள் தெய்வமாக வணங்குகிறார்கள். அந்த நாளில் மாடுகளைக் கழுவி குளிப்பாட்டி அலங்காரம் பண்ணி ஊரெல்லாம் ஓட விட்டு கெட்டிப் போடுவாக அன்றைக்கு தீவனம் தள தளன்று மொச்சைக் கொளயும், தட்டாங்கொளயும் போடுவார்கள்."

மாடுகளுக்கு பொங்கல் வைப்பது தமிழக கிராமங்களுக்குரிய வழக்கமாக இருக்கிறது. தைப்பொங்கல் மாடுகளுக்குதான். ஆயுள் முழுவதும் மனிதர்களுக்காக பாடுபடுகின்ற மாடுகளுக்கு விசுவாசத்தை காட்டுவதற்குத்தான். மாடுகளுக்கு முதல் பூசை, மாட்டுக் கொம்புகளில் உருமாக்கட்டி கழுத்துள பூமாலைகளைப் போட்டு நெத்தியில குங்குமத்த பூசி சாம்பிராணிய போட்டு மாட்டுக்குப் பூசைய போடுவார்கள்.

கிராம மக்கள் அந்த ஆண்டு மழை பொழிவதற்கும், பச்சைப் பயிறுகள் செழித்து வளர்வதற்கும் பெண்கள் முளைப்பாரி இட்டு வழிபடுதல் வழக்கம். முதலில் வயது வந்த பிள்ளைகளெல்லாம் ஒன்றுகூடி ஒரு வீட்டைத் தேர்வு செய்து அந்த வீட்டில் முளைப்பாரி இடுவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு பெரிய மனுசியிடம் கேட்பார்கள். பெரிய மனுசி மொச்சைப்பயிறு, கானப்பயிறு, தட்டாம்பயிறு என்று ஆளுக்கொரு பயிரைச் சொல்லி "காய்ந்த எருவை கொண்டு வந்து நல்லா இடுச்சுப் பொடியாக்கி கரம்ப மண்ணைப் போட்டு, கலந்து மண்சட்டி, ஓலப்பொட்டி, அடுக்குச்சட்டி இதுகள்ல போட்டு தண்ணிய ஊத்தி இருட்டுக்குள்ள வருசையா வச்சுப்புடுவாக. கோபுர மொளப்பாரிண்ட்றது வேற மாதிரி, நல்லா மண்ணை கோபுரகணக்கா செஞ்சு பிடிச்சு வச்சு, வெத நெல்லக் கொண்டு வந்து உச்சி வரெக்கிம் குத்திக்குத்தி நட்டுவிடுவாக. அது நல்லா வெளேர்ண்டு வளந்து ஒசரமா கோபுரங்கணக்கா நிக்கிம். மொளப்பாரி போட்ட வீட்டுக்குள்ள ஆம்பளெக ஆரும் நுழையக் கூடாது. வெளிக்காத்து, வெயிலு படக்கூடாது. இது எளம் பயிராவே நீட்டுன வெள்ளக்குச்சி கணக்கா வளந்து முனில ரெண்டு எல, நாலு எல பசேர்ண்டு இருக்கும். வெயிலுப்பட்டால்




"மொளச்சா செடி,
தளுத்தாக் கொளுந்து,
அரும்புனா மொட்டு,
மலந்தா புவ்வு,
பரிஞ்சா பூட்ட,
சமஞ்சா கருது,
காச்சா பிஞ்சு,
வெளஞ்சா காயி,
பழுத்தாப் பழம்,
முத்துனா நெத்து,
வெடிச்சா வெடி"

வெள்ளக்காம்பு நீட்டமா வராது. செடி கொடி கணக்கா பசேர்ண்டு படந்திரும். அதனால் சாமி கும்பிடு வரை இருட்டு வீட்டுக்குள்ளேதான் வச்சு தண்ணிய ஊத்தி பக்தியோடு வளர்ப்பார்கள்.

**நம்பிக்கைகள்**

நாட்டுப்புற மக்களின் மனம் சார்ந்த கூறாக விளங்குவது நம்பிக்கைகள் ஆகும். நம்பிக்கை வாழ்க்கையில் அடிப்படையான ஒன்றாக மனித சமுதாயத்தில் காணப்படுகிறது. ஒவ்வொரு காலத்திலும் சமூக நிகழ்வுகளில் தோற்றுவிக்கப்படும் நம்பிக்கைகள் வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வும் நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. இவை பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன என்கிறார் சு.சக்திவேல்.

பாமர இலக்கியம் நாவல் அச்சத்தை அடிப்படையாக வைத்து எழும் பிரச்சினைகளை கிராம மக்கள் காத்து கருப்பு என்று பெயர் வைத்து அழைப்பார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது. தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது முதியவள் ஒருத்தி தன்னுடன் வேலை செய்து கொண்டிருந்த ரங்குத்தாய் என்ற குமரிப் பெண்ணைப் போய் சாக்கலூத்துக்குள் இறங்கி தண்ணியை பிடித்துக் கொண்டு வா என்று சொன்ன போது அவளுக்கு ஒத்தையில் செல்ல பயமாக இருக்கிறது. வேறு வழியில்லாமல் அவள் மூஞ்சியைத் தூக்கி வச்சுக்கிட்டு வெடுக்குனு குடத்தை கையில் எடுத்துக் கொண்டு நடந்தாள். நடக்கும் பொழுது அவளுக்கு பாம்பு பற்றிய பயம் எல்லாம் இல்லை. சில நாட்களுக்கு முன்பு தூக்கில் தொங்கிய கன்னியம்மாவின் நினைவுதான் வந்தது. அவள் பேயாக வந்து அந்தப் பகுதியில் செல்லுகின்ற வயசு பிள்ளைகளை பிடித்துக் கொள்வதை கேள்விப்பட்டிருந்தாள். ஏற்கனவே அவளால் பேய் பிடிக்கப்பட்டிருந்த மூக்கப்பன் மகள் பவுன் பிள்ளையைவா செத்தநேரம் பேசிட்டு போவ வா செத்த நேரம் விளையாடுவோம்னு சொல்லி, நான் ஒத்தையில கிடக்குறன். யாரும் இரக்கப்பட மாட்ராங்க என்று கூப்பிடும் பொழுது பவுன் பிள்ளையும் யாரோ பெண் பிள்ளைதான் கூப்பிடுகிறது என்று போனாள். அவளை அந்த கன்னியம்மா பேய் பிடித்துக் கொண்டது. பிறகு உடையாளி சாமிகிட்ட சொல்லிதான் உடுக்கை அடித்து விபூதி, வேப்பிலை எல்லாம் அடிச்சு பேய் ஓட்னாங்க. ஆனா பேய் அவளை விட்டுப் போகவில்லை. பிறகு நாலு ஐஞ்சு நாளா செரமப்பட்டுதான் விரட்டினார் உடையாளிச்சாமி. இப்படிப்பட்ட அமானுசிய நம்பிக்கை. 'சாமி கும்பிடு சாட்டி விட்டா ஊர தாண்டி போகக்கூடாது' என்கின்ற நம்பிக்கையும்,'களவாங்கப் போகும்போது சவனம் பார்ப்பதும்' 'சடங்கான பிள்ளை முளைப்பாரி போட்டா கல்யாணம் கூடும்' என்பன போன்ற கிராம மக்களின் ஆழ்ந்த நம்பிக்கைகள் இந்நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**வாய்மொழி வழக்காறுகள்**

கிராம மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபடும் பொழுது சடங்கு சம்பிரதாயங்களில் கலந்து கொள்ளும் பொழுதும், ஊர் நிகழ்வுகளில் பங்கேற்கும் பொழுதும், நண்பர்களுக்குள்ளும், தோழிகளுக்குள்ளும் பேசிக் கொள்ளும் போதும் வெளிப்படுகின்ற சொலவடைகள், பழமொழிகள், விடுகதைகள் போன்றவைகளும் கிராம மக்களின் வழக்காறுகளாகக் வெளிப்படுகின்றன.

1) 'வெட்டிக் கெட்டது வேம்பு வெட்டாம கெட்டது புளி'
2) 'மங்குற காலத்துக்கு மாங்கா பொங்குற காலத்துக்கு புளியங்கா'
3) 'ஆண்டிபட்டியில களவாங்க ஆனைமலையம் பட்டியில பம்முறது கணக்கா'
4) 'கோடி ஒரு வெள்ளைக்கு குமரி ஒரு பிள்ளைக்கு'
5) 'பனி தை மாத்தயில தரய பிளக்கும் மாசி மாத்தயில மச்ச பிளக்கும்'
6) 'ஆம்பள முத்துனா அழகு பொம்பள முத்துனா சருகு'
7) 'இவ சூரியனுக்கு சூடு வக்கிறவ'

என்பன போன்ற சொலவடைகளும், பழமொழிகளும் இந்நாவலில் இடம்பெற்றுள்ளன.

பொட்டச்சியாப் பொறப்பெடுத்தவளுக்கு நாலு பொறப்பாத்தா... வயித்துக்குள்ளருந்து சொத்துண்டு பூமியில விழுகுறப்ப ஒரு பிறப்பு வளந்து சமஞ்சு குத்த வச்சு வயசுக்கு வாராது ஒரு பொறப்பு... ஒரு புருசனக் கட்டிக்கிட்டு பெறந்த வீட்டை விட்டுப் போறது ஒரு பெறப்பு... வயித்துள ஒரு புள்ளயச் சுமந்து செத்துப் பொழச்சு அத பெத்துப் போடுறது ஒரு பொறப்பு... என்று பெண்களின் வளர்ச்சி நிலை சார்ந்த ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பிறப்பாக்கிப் பார்ப்பது கிராம மக்களின் வழக்கமாக இருக்கிறது என்பதை இந்நாவல் பதிவு செய்கிறது.

**புழங்கு பொருட்கள்**

புழங்கு என்பதற்கு கதிரைவேற்பிள்ளை தமிழ்மொழி அகராதியில் வழங்குதல் என்றும், தமிழ் லெக்சிகன் கையாளுதல், புழங்குதல் என்றும் விளக்கம் தருகிறது. எனவே, புழங்கு பொருள் என்பது மக்கள் அன்றாடம் தங்கள் தேவைகளுக்காக

பயன்படுத்தி வருகின்ற பொருட்களை குறிப்பதாகக் கூறலாம். மக்களின் பண்பாட்டை மானுடவியலார் இரண்டாக வகைப்படுத்துகின்றனர்.

1) பொருள்சார் பண்பாடு

2) பொருள்சாரா பண்பாடு

இதில் பொருள்சார் பண்பாடு புழங்கு பொருட்களை குறிக்கும். குட்டக்கம்பு, கைக்கம்பு, வீச்சருவா, சூரிக்கத்தி, பட்டாக்கத்தி இவற்றுள் சூரிக்கத்தி எப்பொழுதும் கிராமத்து ஆண்களின் இடுப்பிலே இருக்கும். கொழு, கலப்பை, மாட்டு வண்டி, தட்டு வண்டி, செக்கு, பெண்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் குழுதாடி, கயிறு, பாத்திரங்கள் போன்றவை மனிதனோடு சார்புடைய புழங்கு பொருட்களாக இந்நாவலில் காட்டப்படுகின்றன.

**உணவு முறைகள்**

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு கிராம மக்களின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்கிறது. இந்நாவலில் வரும் கிராம மக்கள் தானிய உணவையே அதிகமாக உண்டாலும் திருவிழாக் காலங்களிலும் வீட்டு விசேசங்களிலும் அசைவ உணவையே பெரிதும் விரும்பி உண்கின்றனர். திருமணமான தம்பதியினர்களுக்கு உறவினர்கள் வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுப்பது நமது பண்பாடாகக் கிராமங்களில் இன்றைக்கும் இருப்பதைக் காணலாம். ‘விருந்து திண்டா உறவு விருத்தி’ என்பது கிராம மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. வயதுக்கு வந்த பெண்களுக்கு

ஒரு நாளைக்கு வெந்தய களி,
ஒரு நாளைக்கு உளுந்தங் களி,
நெத்தம் பச்சை முட்டை,
தினம் கறிக்கொழம்பு,
நெதமும் கோழிக்குழம்பு,
கேப்பக்களியும் கறிக்குழம்பும்.

பேறு காலத்தில் பயன்படுத்தப்படும் மருந்துக்களி, பச்சை மருந்து, கோழிச்சாறு, கடுகுப்பொடி, வெற்றிலை பாக்கு போடுதல், நல்லெண்ணெய், பூண்டு, நாட்டுக் கருப்பட்டி போன்ற உணவு வகைகள் இந்நாவலில் கிராம மக்களின் உணவுப் பயன்பாட்டில் இருப்பதை ஆசிரியர் பதிவு செய்கின்றார்.

**காதல்**

காதல் அடைதல் உயிர் இயற்கை என்ற அடிப்படையை உணர்ந்த இந்நாவலில் கால்பகுதி இடம் பிடித்திருக்கிறது. கோட்டத் தங்கத்தின் காதலும் அங்குத் தாயின் பருவத்திற்கேற்ற காதல் வெளிப்பாடும், அச்சமும் பயமும் துரைசாமியின் மனதில் சீனித்தாயைக் கண்டவுடன் ஏற்படும் காதலும் ராமுத்தாயியின் நம்பிக்கையும் வாசகரின் உள்ளங்களை கொள்ளை கொள்வதாக அமைகின்றன. இந்நாவலிலே ஒரு காட்சி,

“ஒத்தயில வரமாட்டாளாண்டு ஏங்கிக்கிட்டு பய காத்துக் கெடப்பியான்” அவளும் வருவா... கிட்டப்போவியான், ஒடம்ப முறுக்குவியான், வளைவியான், நெளிவியான், குறுக்க மறுக்க நடப்பியான், அவளச் சுத்தி வட்டம் போடுவியான், இம்புட்டு கூத்துக்கும் அந்தப்புள்ள என்னாண்டுவா? ரேசா ஒதட்டோரத்துல சிரிப்பா... அம்புட்டுத்தேன் அம்புட்டுத்தேன் இந்த சிரிப்புக்குத்தேன் அம்புட்டு கூத்து” என்று கிராமியக் காதலைக் காட்சிப்படுத்துவது அழகியல் தன்மையுடையது.

**முடிவுரை**

கிராமப் பழக்கவழக்கங்களையும், பாரம்பரியத்தையும், மண்ணையும், மக்களின் வாழ்க்கையையும் விரிவாக இந்நூலில் பதிவு செய்திருக்கிறார். நாவல் முழுவதும் வரும் காட்சிகளும், சம்பவங்களும் ஒரு திரைப்படம் பார்ப்பதைப் போன்று அமைந்துள்ளன. படிப்பதற்கு வேறு வட்டாரத்தைச் சார்ந்தவர்கள் கொஞ்சம் சிரமப்பட்டாலும் நாவலின் போக்கில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டால் விறுவிறுப்பான ஓட்டத்துடன் நாம் தொலைத்த, இழந்திருக்கிற பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு இந்நாவல் ஒரு கிராமத்து ஆவணமாக அமைந்திருப்பது பாராட்டுதலுக்குரியதாகும். நாவலின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை வட்டார மொழியில் எழுதியிருப்பது கஸ்தூரிராஜா என்ற இயக்குநரை மிகச்சிறந்த படைப்பாளராகவும், எழுத்தாளராகவும் முழுமையடையச் செய்திருக்கிறது. பாமர இலக்கியம் என்ற பெயரைத் தாங்கியிருக்கிற இந்நாவலில் கிராமத்துக்குரிய பண்பான பட்டப் பெயர்களே இல்லாமல் அவரவர்தம் பாத்திரப் பெயர்களோடு இயங்கிக் கொண்டிருப்பது ஒரு குறையாகத் தென்படுகிறது.


**துணைநூற்பட்டியல்**


1) கஸ்தூரிராஜா - பாமர இலக்கியம், விஜயலட்சுமி பதிப்பகம், 33/5, ராஜா மன்னார்சாலை, தி.நகர், சென்னை. முதற்பதிப்பு - ஜுலை - 2021
2) சு. சண்முகசுந்தரம் - நாட்டுப்புறவியல், 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை. மூன்றாம் பதிப்பு - 2003
3) டாக்டர். சு. சக்திவேல் - நாட்டுப்புறவியல் ஆய்வு மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை. முதற்பதிப்பு - 2014
4) டாக்டர். த. ரெஜித்குமார் - நாட்டுப்புற இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை. முதற்பதிப்பு - 2017


●


கட்டுரையாளர், இணைப் பேராசிரியர் - தமிழ்த்துறைத் தலைவர், ஹாஜி கருத்தராவுத்தர் ஹவுதியா கல்லூரி, உத்தமபாளையம்.

கட்டுரை



# தேடுவோம் மாற்றத்திற்கான இளைஞர்களை

க. பழனித்துரை

காந்தியப் போராளி சர்வோதயத் தலைவர் அமரர் ஜெகந்நாதன் அவர்களின் இந்த ஆண்டுக்கான நினைவுச் சொற்பொழிவுக்கு என்னை அழைத்திருந்தனர். அந்த நிகழ்வில் ஒவ்வொரு ஆண்டும் ஓர் வலுவான கருத்தினை முன் வைத்து ஆகச் சிறந்த வல்லுநர்களை அழைத்து விவாதிக்கச் செய்வார்கள். அந்த விவாதங்களிலிருந்து உருவாகும் கருத்துக்களை சமூகத்தில் செயல்படுத்திட களச் செயல்பாடுகளுக்கான இளைஞர்களைத் தயார் செய்ய முனைவதைத்தான் அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்வு நடந்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் பல நாடுகளிலிருந்தும் இந்த நிகழ்வுக்கு பங்கேற்பாளர்கள் வருவதுண்டு. இந்த ஆண்டும் அமெரிக்கா, கனடா, கம்போடியா போன்ற நாடுகளிலிருந்து பங்கேற்பாளர்கள் வந்திருந்தனர். இதில் கருத்தாளர்கள் வயதானவர்களாக இருப்பார்கள், பங்கேற்பாளர்கள் இளைஞர்களாகத்தான் இருப்பார்கள். இதுதான் இந்நிகழ்வின் சிறப்பம்சமே. இந்த நிகழ்வு ஒரு சடங்காக நடைபெறாமல் செயலாக்கத்திற்காக இளைஞர்களை தயார்படுத்தும் நிகழ்வாக இருப்பதால் அதில் கலந்து கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளேன்.

இந்த நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் மூன்று நாட்கள் நடைபெறும். எந்த ஆரவாரமும் இல்லாமல், அமைதியாக நடந்தேறும் ஓர் நிகழ்வு இது. இதன் மூன்றாம் நாள் நிகழ்வு "காந்திகிராம ஊழியரகம்" என்ற இடத்தில் அமரர் ஜெகந்நாதன் அவர்களின் நினைவுச் சொற்பொழிவு நடைபெறும். அதனைத் தொடர்ந்து கிராம மேம்பாட்டுப் பணிகளில் தன்னலம் பாராது சேவை செய்வோரைப் பாராட்டி அவர் பெயரில் விருது வழங்குவதும் ஒரு சிறப்பான நிகழ்வாகும். அந்த நிகழ்வை நிறைவு செய்யும் விதமாக அவரின் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்திவிட்டுக் கலைந்து செல்வர்.

காந்திகிராமம் என்பது ஒரு கிராமம் மட்டுமல்ல, ஒரு நிறுவனம் மட்டுமல்ல, அனைத்தையும் தாண்டிய சமூக மாற்றத்திற்கான ஒரு மக்கள் இயக்கம். காந்திய அமைப்புக்களையும், நிறுவனங்களையும், மக்கள் இயக்கங்களையும் கட்டி உருவாக்கிய மிகப் பெரிய ஆளுமைகள் வாழ்ந்து செயல்பட்ட இடம். அவர்கள் அனைவரின் கல்லறைகளும் அங்குதான் உள்ளது. மகாத்மா காந்தியின் கனவை செயல்படுத்தும் செயற்களம்.

இந்த ஆண்டு இந்த நிகழ்வின் விவாதக் கருத்து "ஒருமித்த ஆரோக்யம்" என முடிவு செய்து உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குனர் மற்றும் பல கருத்தாளர்கள் அழைக்கப்பட்டு விவாதம் நடத்தப்பட்டது. இந்தக் கருத்தியலை இன்னும் உயர்கல்வி நிலையங்களே உள்வாங்காத சூழலில் இந்த நிகழ்வுக்கு இந்தத் தலைப்பை எடுத்து விவாதித்தது பலருக்கு ஆர்வத்தையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது.

நாம் வாழும் உலகம் ஒரு மயக்க உலகம். நாம் மயக்கத்தில் உலகைக் கட்டியாள்வதற்கும், நாட்டைக் கட்டியாள்வதற்கும், பதவிகளைப் பிடிப்பதற்கும், புகழில் மயங்குவதற்கும், பொருள் சேர்ப்பதற்கும், சொத்துச் சேர்ப்பதற்கும் நுகர்வில் தோய்ந்து வாழ்வதற்கும் மனித சமுதாயத்தை சந்தைச் செயல்பாடு தயார் செய்து விட்டது. இதன் விளைவு உலகம் அழிவுப் பாதையில் நிற்கிறது, நாம் வாழும் வாழ்க்கைச் சூழல் முற்றிலும் சிதிலமடைந்துவிட்டது, இயற்கை சீரழிந்து சீற்றம் கொள்ளத் தொடங்கிவிட்டது. பருவநிலை மாற்றம் பெற்று விட்டது. கோள்கள் இயங்கு தன்மையில் மாற்றம் பெற்று இயற்கைப் பேரிடர் என்பது சமூகத்தால் சமாளிக்க இயலாத அளவில் தொடர் நிகழ்வாக நிகழ்ந்து கொண்டுள்ளது என்பதை அறிந்தும் அறியாததுபோல் நாம் வாழ்கின்றோம். நம் அறிவியல், தொழில் நுட்பத்தின் சக்திக்கு உலகை வெல்லும் ஆற்றல் கிடையாது என்பதைத் தொடர்ந்து இயற்கை நிரூபித்து வருகிறது என்பதை ஐ.நா. அறிக்கைகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இனிமேல் சமூகம் நலமுடன், அமைதியாக, பாதுகாப்பாக வாழ, பொருளாதார மேம்பாடும், ராணுவமும், அரசாங்கமும் மட்டும் போதாது. இவைகளைத் தாண்டி கோளங்களைப் பாதுகாப்பது, இயற்கையைப் பாதுகாப்பது, இயற்கை வளங்களைப் பாதுகாப்பது என்பதை தாரக மந்திரமாக அரசும், மக்களும் செய்தால் மட்டுமே சாத்தியப்படும் என்பதைத்தான் இந்த அறிக்கைகள் பிரகடனப்படுத்துகின்றன.

புவியில் படைக்கப்பட்டவைகள் அனைத்தும் மக்களுக்காக என்ற சிந்தனையில் வாழ்ந்த மனித சமூகம் இன்று ஒரு புதிய சிந்தனைக்குச் செல்ல வேண்டியுள்ளது. புவியில் உள்ள அத்தனை உயிரினங்களுக்கும் புவி சொந்தமானது. மனிதர்கள் மட்டும் உரிமைகள் கொண்டாட முடியாது. எனவே புவியில் படைக்கப்பட்ட மற்ற உயிரினங்கள் முறையாக, ஆரோக்கியமாக வாழ இயலவில்லை என்றால் அதன் தாக்கம் சமூகத்தையும் பாதிக்கும். எனவே மானுட சமூகத்திற்கு சமூகத்தைப் பாதுகாப்பது மட்டுமல்ல மற்ற உயிரினங்களைப் பாதுகாப்பதும், அவைகளை ஆரோக்கியமாக வாழவைப்பதும் நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு தேவைப்படுகிறது என்பதைத்தான் இந்த அறிவியலாளர்கள் தங்கள் ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்ததை அறிக்கைகளாகத் தயார் செய்து ஐ.நா.மன்றங்கள் மூலம் வெளியிட்டு, மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தியும், அரசாங்கங்களுக்கு ஆலோசனைகளையும் தந்து கொண்டுள்ளனர்.



*ஒரு புரிதலை மக்களிடம் ஏற்படுத்த நம் இளைஞர்களைத் தயார் செய்யும் பணியில் இறங்குவதுதான் மறைந்த ஜெகந்நாதனுக்கு நாம் செய்யும் முறையான அஞ்சலியாக இருக்கும்.*

இவைகளை மையப்படுத்தியதாகவே இந்த மூன்று நாள்கள் நடந்த சர்வோதய மாநாடு அமைந்தது. மூன்றாம் நாளில் அமரர் தியாகி ஜெகந்நாதன் அவர்களின் நினைவுச் சொற்பொழிவினை ஆற்ற என்னை அழைத்திருந்தனர். அதனை இளைஞர்களுக்கு கள வழிகாட்டுதலுக்கு எதாவது நாம் கூற முடியுமா என்று சிந்தித்து ஒரு சில கருத்துக்களை அங்கிருந்த இளைஞர்களுடன் பகிர்ந்து கொண்டேன். இன்றைய சூழல் கூறும் செய்தி என்னவென்றால், மானுடம் இதுவரை சந்திக்காத சவால்களைச் சந்தித்து வருகிறது. இந்தச் சூழலை சமாளிப்பது மிகவும் கடினமான செயல். ஆனால் இன்றைய தேவை நமக்கு ஒரு கடப்பாடுடன் செயல்பாடு. ஆகவேதான், சமூகத்திற்கு நான் எதையாவது செய்வேன் என்று சமூக அக்கறையுடன் செயல்படும் இளைஞர்களுக்கு எதாவது வழி காட்டுதல் தரவேண்டும் என்று என் உரையைத் தயார் செய்திருந்தேன். அது மட்டுமல்ல ஜெகந்நாதன் தன் வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக போராட்டக்களத்தைச் சந்தித்தவர். அவருடைய இறுதிக்

காலத்தில் அவரைத் தொடர்ந்து சந்திக்கும் வாய்ப்பும், உரையாடும் வாய்ப்பும் கிட்டியது. காரணம், அவர்களின் "ஊழியரகம்" காந்திகிராம வளாகத்திற்குள்ளே இருந்ததால் அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்படி அவருடன் உரையாடும்போது, அவரின் செயல்பாடுகளிலிருந்து அவரைப் பற்றிய பார்வை எனக்கு விசாலமடைந்தது. அவர் எந்த இடத்திலும் நிறுவனம் கட்டவில்லை. தொடர்ந்து மக்கள் பணி, போராட்டங்களில் இருந்து மக்களுக்காக செயல்பட்ட வித்தியாசமான மாமனிதராக செயல்பட்டதை என்னால் உணர முடிந்தது. எனவேதான் இது ஒரு வாய்ப்பு எனக் கருதி அந்த நினைவுச் சொற்பொழிவுக்கு ஒப்புக் கொண்டேன். இதற்கு முன்பு நினைவுச் சொற்பொழிவாற்றியவர்களின் பட்டியலைப் பார்த்தால் மிகப் பெரிய காந்திய ஆளுமைகளாக இருந்தார்கள். அது எனக்கு ஒரு மன நெருடலைத் தந்தது. இந்தச் சொற்பொழிவுக்கு நாம் தகுதியானவர்தானா என்ற கேள்வியுடன் என் சொற்பொழிவைத் தயார் செய்தேன்.

நான் அமரர் ஜெகந்நாதனைச் சந்தித்த போதெல்லாம் ஒன்று நிலம் பற்றிய உரையாடல் அடுத்து கிராம சுயராஜ்யம் பற்றிய உரையாடல் இந்த இரண்டும்தான் இடம் பெற்றிருந்தன. இந்த இரண்டிலும் அவர் மிகப் பெரிய விசாலமான சிந்தனையைப் பெற்றிருந்தார். அந்த விவாதத்தில் ஒருசில கருத்துக்களை அழுத்தமாக முன் வைப்பார். இந்தியாவில் நிலச் சீர்திருத்தம் செய்யாமல் கிராம சமுதாயத்தை மேம்படுத்த முடியாது, இந்தியாவுக்குத் தேவை பொதுமக்களுக்கான அறிவியல் கல்வி, மக்கள் கையில் வலுவான உள்ளாட்சி அரசாங்கம், மக்களுக்கு எளிய வாழ்வியலுக்கான புரிதல், இயற்கையுடன் அமைதியாக ஆனந்தமாக வாழ்வது பற்றிய பார்வை. இவைகளைத்தான் விவாதிப்பார். அவரிடம் உரையாடும்போது ஒரு பிரச்சினையை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதற்கு மிக எளிதாக ஒரு அணுகுமுறையைக் கூறிக்கொண்டேயிருப்பார். அது வேறு ஒன்றும் அல்ல. "எந்தப் பிரச்சினை வந்தாலும் உடனே நாம் என்ன பார்க்க வேண்டும் என்றால், இந்தப் பிரச்சினையால் கடைக்கோடியில் வாழுகின்ற சாதாரண ஏழைகள் எப்படிப் பாதிக்கப்படுவார்கள் என்று பார்க்கும் பார்வை வந்துவிட்டால் மேம்பாட்டிற்கான சூழலை உருவாக்குவது மிக எளிது" என்பார்.

அடுத்து காந்தியின் சுயராஜ்யம் என்பதற்கு காந்தி தந்த விளக்கத்தினை மிகச் சரியாக உள்வாங்கிய காரணத்தால் காந்தியை எதிர்த்தே சத்தியாக்கிரகம் செய்து, காந்தியிடம் அதற்கான விளக்கத்தினை கடிதம் மூலம் பெற்றவர். சுயராஜ்யம் என்பது சுதந்திரம் மட்டுமல்ல, அரசு நியாயம் செய்யத் தவறும்போது அதை எதிர்த்துப் போராடுவதுதான். அதைத்தான் அமரர் ஜகந்நாதன் அவர்கள் கடைசிவரை செய்து கொண்டேயிருந்தார். அந்தப் போராட்டங்களுக்கு உறுதுணையாக எப்படி காந்திக்கு கஸ்தூர்பா காந்தி இருந்து செயல்பட்டாரோ அதுபோல் ஜெகந்நாதன் அவர்களுக்கு கிருஷ்ணம்மாள் இருந்து செயல்பட்டார் என்பது இந்தத் தம்பதியர்களுடன் களத்தில் இருந்து செயல்பட்ட அனைவருக்கும் தெரிந்த உண்மை. இந்த வயதிலும் கிருஷ்ணம்மாள் அழைத்தால் ஒரு இளைஞர் கூட்டம் ஏன் வருகிறது என்றால், இந்தக் காந்தியத் தம்பதியர்களின் குழந்தைகள் இரண்டு பேரும் மருத்துவர்கள். தந்தை விட்டுச் சென்ற பணியை, தாயுடன் இணைந்து ஒரு இளைஞர் கூட்டத்தை உருவாக்கி ஓசையின்றி செயல்பட்டு வருகின்றனர். இருவரும் திருமணம் செய்து கொள்ளாது மக்கள் பணியில் தியாக உணர்வுடன் ஈடுபட்டிருப்பது இளைஞர்களை ஈர்த்து வைத்திருக்கிறது.

இன்று பல சேவை நிறுவனங்கள் காந்திய நிறுவனங்கள் உட்பட தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியாமல் தவிக்கும் நிலையில் இவர்களை நோக்கி மிகப்பெரிய செயல்பாடுகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கக்கூடிய இளைஞர்கள் இவர்களிடம் வந்து புகுவதற்கு என்ன காரணம் என்று சிந்தித்தால், ஒன்று மட்டும்தான் நமக்குத் தெரிகிறது. அவர்களிடம் எதுவும் இல்லை. நல்ல சிந்தனையும், நல்ல உணர்வும், தேசப்பற்றும், மக்கள்மேல் மாறா நம்பிக்கையும் அன்பும்தான். அதுதான் நம் இளைஞர்களை இன்று இவர்கள் பக்கம் ஈர்த்திருக்கிறது.

அந்த இளைஞர்களுக்கு எதாவது ஒரு வழிகாட்டல் செய்ய இயலுமா என்ற சிந்தனையில்தான் என் ஒருசில கருத்துக்களை அவர்கள் முன் வைத்தேன். இன்று நாம் வாழும் உலகம் சந்தை உலகம். லாபம் பார்க்கும் உலகம். அறம் இழந்த உலகம். அனைத்தும் சந்தைப்படுத்தப்பட்டுவிட்டது. அரசானாலும் சரி, அரசியலானாலும் சரி, ஆளுகையானாலும் சரி, கலாச்சாரமானாலும் சரி, ஆன்மீகமானாலும் சரி, குடும்பமானாலும் சரி, அனைத்தும் சந்தைப்படுத்தப்பட்டுவிட்டது, இவைகளில் சேவை மறக்கடிக்கப்பட்டு, லாபம் ஈட்டுதல் பார்வையாக சிந்தனையாக வலுவாக உருவாக்கப்பட்டுவிட்டது. இவை அனைத்திலும் சேவை என்பது மட்டும் மறக்கடிக்கப்படவில்லை, அறமும் முற்றிலுமாக மறக்கடிக்கப்பட்டுவிட்டது. இந்தியா என்பது பன்முகத் தன்மை கொண்ட நாடு. அது மட்டுமல்ல அடிப்படையில் இந்தியா அதிக ஏழைகளைக் கொண்ட நாடு. இது நடுத்தர வர்க்கம் வாழும் நாடு அல்ல. எனவே இந்த நாட்டில் மேம்பாடு என்பது அரசாங்கத்தின் செயல்களால் மட்டும் நடைபெறுவது கிடையாது. அரசாங்க அமைப்புக்களின் செயல்பாடுகள் அனைத்திலும் மக்கள் பங்கேற்பை உறுதி செய்து மக்கள் கையில் அரசுத் துறைகளை இயங்க வைப்பதில் தான் உள்ளது. இந்தக் கருத்தாக்கம் சுதந்திரப் போராட்ட காலத்தில் வலுப்பெற்றாலும், சுதந்திரம் அடைந்த பின் அரசு வியாபித்து மக்களை பயனாளியாகப் பார்த்து அவர்களை அரசாங்கத்திடம் வர இயலாது அரசாங்கத்தை எஜமானனாக மாற்றிக் கொண்டு விட்டது.

இதன் விளைவுதான், 75 ஆண்டுகால மக்களாட்சி அரசாங்கம் நடைபெற்று வந்த நாட்டில் 80 கோடி மக்கள்

தங்கள் உணவுப் பாதுகாப்பை அரசாங்கத்தின் பொது வினியோகத் திட்டத்தில் விலையில்லா உணவு வாங்கி உறுதி செய்துள்ளனர். ஆனால் 7% பொருளாதாரம் வளர்ச்சி கண்டுவிட்டது இந்தியா. 3% பொருளாதார வளர்ச்சியில், அனைத்து அடிப்படை வசதிகளையும் எல்லாத் தரப்பு மக்களுக்கும் செய்த நாடுகளைப் பற்றி நம் தலைவர்களுக்கு ஏன் தெரியவில்லை என்பதுதான் நமக்குப் புதிராக உள்ளது. இந்த முரண்பாட்டை புரிந்து கொள்ள நம் பொருளாதார நிபுணர்கள் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும். அவர்கள்தான் இந்த அரசுக்கு வழிகாட்டியவர்கள். அவர்கள் கூறுவது என்ன? அரசும் தோற்றது, சந்தையும் தோற்றது, அரசும் சந்தையும் மக்களுக்கு எவற்றையெல்லாம் சேவையாகச் செய்வோம் என்று கூறி செயல்பட்டனவோ அவைகளைச் செய்ய இயலாமல் தோற்றுவிட்டன. அதை அரசும் ஒப்புக் கொண்டுவிட்டது, சந்தையும் ஒப்புக் கொண்டு விட்டது.

தீர்வு என்ன? தீர்வு எங்கே? தீர்வு மக்களிடம்தான், சமூகத்தில்தான். என்றும் கூறுகின்றனர். அந்தத் தீர்வை நோக்கி எப்படி நகர்வது என்பதுதான் கேள்வி? இதற்கு முதல் படி மக்களை அதிகாரப்படுத்துவது. அவர்களிடம் அரசாங்கத்தில் இருக்கும் வாய்ப்புக்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது. அடுத்து அரசாங்கத்தில் ஆளுகையிலும், நிர்வாகத்திலும் பங்கேற்க வைப்பது. இதற்காகத்தான் புதிய உள்ளாட்சியை அரசாங்கமாக உருவாக்கி அரசியல் சாசனத்தில் இணைத்தார்கள். இந்த உள்ளாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டதே மத்திய மாநில அரசுகளால் தொடமுடியாத மக்களைத் தொட்டு அவர்கள் வாழ்வை செம்மையடையச் செய்யத்தான். அடுத்து, இந்த நாட்டில் இன்றும் விளிம்புநிலை மக்களாக வாழக்கூடிய ஆடு மாடு மேய்த்து வாழ்வோர், காடுகளில் வாழும் ஆதிவாசிகள், விவசாயக் கூலிகள், சுகாதாரப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், மீனவர்கள், தெரு வணிகம் செய்வோர், கட்டுமானப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள், வீட்டுவேலை செய்யும் பணிப் பெண்கள், குடிசைத் தொழில் செய்வோர், கூடை முடைவோர், மரம் ஏறுவோர், பிணம் புதைப்போர், பிணம் எரிப்போர், பிணவறை காப்போர் இவர்கள் அனைவரும் அரசின் கவனத்திற்கு வராதோர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வாழும் பகுதிகளுக்கு கார் செல்ல இயலாது. கார் செல்ல இயலாத பகுதிகளுக்கு அரசு அலுவலர்கள் செல்ல மாட்டார்கள்.

ஆனால் அவர்கள் வாழும் பகுதிக்கு வாக்குப்பெற மட்டும் கழுதை முதுகிலாவது வாக்குப் பெட்டியை எடுத்துச் சென்று அவர்களின் வாக்குகளைப் பெற்று வந்துவிடுவார்கள். இவர்களின் வாழ்வில் கவனம் செலுத்தி செயல்படத்தான் உள்ளாட்சியை அரசாங்கமாக உருவாக்கியுள்ளனர். அது மட்டுமல்ல இந்த விளிம்புநிலை மக்களை பாதுகாத்து மேம்படுத்த தேவையான அனைத்தையும் உரிமைகளாக சட்டங்கள் மூலம் தந்துவிட்டனர். அத்துடன் இந்த விளிம்புநிலை மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி மன்றங்களில் இடம்பெற இட ஒதுக்கீடும் செய்துவிட்டனர். கட்டுக்கட்டான உரிமைச் சட்டங்கள் அனைத்தும் இந்த விளிம்புநிலை மக்களைப் பாதுகாக்கும் ஆதங்கள். இந்த ஆயுதங்கள் இன்னும் பயன்படுத்தாமல் துருப்பிடிக்கின்றன. காரணம், இந்தச் சட்டங்கள் பற்றியும், புதிய உள்ளாட்சி பற்றியும் எந்தப் புரிதலும் இந்த விளிம்பு நிலை மக்களுக்கு ஏற்படவில்லை. ஏற்படுத்த முயலவும் இல்லை. முயன்றவர்களும் களைத்து ஒதுங்கி விட்டனர். இதற்கான புரிதல் வந்துவிட்டால், இந்த சுரண்டல் அரசியலுக்கு, சந்தை அரசியலுக்கு, ஊழல் நிர்வாகத்திற்கு ஆபத்து வந்துவிடும். எனவேதான் இந்தப் புதிய உள்ளாட்சியின் முக்கியத்துவத்தை பெரும்பான்மை அரசியல் கட்சிகளும் பேசுவதில்லை, பெரும்பான்மை ஊடகங்களும் விவாதிப்பதில்லை, எந்த அரசியல் சாசனம் மத்திய அரசுக்கு அதிகாரங்களை வழங்குகின்றதோ, அதே அரசியல் சாசனம்தான் மாநிலத்திற்கும் அதிகாரங்களை வழங்குகின்றது, அதே அரசியல் சாசனம்தான் உள்ளாட்சிக்கும் அதிகாரங்களை வழங்குகின்றது. உள்ளாட்சி மட்டும் ஏன் இன்னும் மாநில அரசின் அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது என்பதனை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.


இன்று நாம் வாழும் உலகம் சமூகச் சிந்தனையற்ற சுயநலம் பேணும், லாபம் பார்க்கும் சிந்தனையுடன் வாழும் பெரும்பான்மை மக்களைக் கொண்ட காலம். இந்தக் காலத்தில் நாம் தேடுவது தியாகத்திற்கான இளைஞர்களை. மாற்றத்திற்கான விடுதலைச் சிந்தனைகளைத் தெளித்த காந்தி, விவேகாநந்தர், அரவிந்தர் போன்றோர் தங்கள் சேவையை ஆரம்பித்தபோது அவர்கள் இளைஞர்கள் என்பது நம் இளைஞர்கள் பலருக்குத் தெரியாது. இன்று பெரும்பாலான இளைஞர்கள் நுகர்வில் மயங்கிக் கிடக்கின்றனர். இந்த மயக்கத்திலிருந்து அவர்களை வெளியேற்றி கடையனுக்கும் கடைத்தேற்றம் செய்ய பல இளைஞர்கள் முன் வருகின்றனர். பலர் களத்தில் பணி செய்கின்றனர். எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல். ஆனால் இன்று இவர்களுக்குத் தேவை அரசாங்கத்தை சமூகத்திற்குப் பணி செய்ய வைக்கத் தேவையான ஆற்றல் மற்றும் புரிதல். அந்த ஆற்றலையும், புரிதலையும் சேவை செய்யத் தயாராக முன்வரும் இளைஞர்களுக்குத் தரவேண்டியதுதான் உண்மையான காந்தியப்பணி. பேராடாமல் சுதந்திரமும் கிடைக்காது, உரிமைகளும் கிடைக்காது, வறுமையையும் போக்க இயலாது. இதற்கான ஒரு புரிதலை மக்களிடம் ஏற்படுத்த நம் இளைஞர்களைத் தயார் செய்யும் பணியில் இறங்குவதுதான் மறைந்த ஜெகந்நாதனுக்கு நாம் செய்யும் முறையான அஞ்சலியாக இருக்கும். அதைச் செய்ய முயல்வோமாக என்று கூறி என் உரையினை நிறைவு செய்தேன்.

●


கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்துராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வெளியீடாக


## எஸ்.ஜெயசீல ஸ்டீபன் நூல்கள்





₹ 300/-





₹ 275/-





₹ 250/-




₹ 200/-




₹ 160/-




₹ 375/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



கட்டுரை

# பண்பாட்டு எழுத்து

இரா.காமராசு

பண்பாடு என்ற சொல் இன்று மிகப் பரவலாகி உள்ளது. தனி மனிதனில் தொடங்கிச் சமுதாயத்தில் நிலை கொண்ட இச்சொல் இன்று அரசியல், பொருளாதாரப் பின்புலத்திலும் கவனம் பெறும் ஒன்றாக மாறி உள்ளது.

பண்பாடு என்பதற்குப் பல்வேறு வரையறைகள் தரப்படுகின்றன. என்றாலும் மனிதனின் பண்பிலிருந்து உருவானது என்பதை அனைவரும் ஒப்புகின்றனர். ‘பண்படு’ என்பதிலிருந்து பண்பாடு வந்திருக்கலாம் என்பர். ‘பண்படுதல்’ என்பதற்கு அமைதல், உதவுதல், ஏவல் செய்தல், சீர்த்தருத்தல், செப்பமாதல் எனவும், ‘பண்பாடு’ என்பதற்குச் செல்வி, குணநலம், சீர்திருத்தம், பெருமை, தன்மை, அமைதி, இயல்பு என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகின்றது.

“பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும், நடையுடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின் பலபல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்தப் பண்பாடென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனதைப் பற்றிய தூய்மை நிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்” *(1973:5)* என்ற தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் கருத்து, பண்பாடு என்பதன் உள்ளார்த்தத்தை உணர்த்தும்.

‘பண்பாடு’ எனும் சொல் வழக்கத்துக்கு வந்ததை கா. சிவத்தம்பி, “பண்பாடு என்னும் சொல் ஏறத்தாழ *50* ஆண்டுகளாக மாத்திரமே வழக்கிலுள்ளது என்ற உண்மை பலருக்கு ஆச்சரியத்தைத் தரலாம். *1926-31*இல் தயாரிக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக லெக்சிகனில் அச்சொல் இல்லை. ஆங்கிலத்தில் *Culture* எனக் குறிப்பிடப்பெறும் சொல்லைக் கலாச்சாரம் என்று கூறும் ஒரு மரபு இருந்தது. டி.கே. சிதம்பரநாத முதலியார்தான் *Culture* எனும் ஆங்கிலச் சொல்லுக்குப் பண்பாடு என்னும் பதமே பொருத்தமானதென மொழிபெயர்ப்பு செய்தார். அது நிச்சயிப்புச் சொல்தான் என வையாபுரிப்பிள்ளை கூறுவார்” *(1994:1)* என்பார்.

பண்பாடு எனும் சொல்தான் புதிதே தவிர அது உணர்த்தி நிற்கும் பொருள் பழமையானது. அது

உலக மாந்த இனத்தின் வாழ்வோடும் வளர்ச்சியோடும் இயங்கியல் உறவு கொண்டது. நெகிழ்வுத் தன்மை கொண்டது. கொண்டு கொடுத்து செழுமைப்படுவது. கால வளர்ச்சியில் புதுப்பித்துக்கொள்வது.

''உணவு, உடை முதலியன தயாரிப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் பின்பற்றப்படும் வழக்கங்கள், பழக்கங்கள், வீடுகட்டுவதில் கவனிக்கப்படும் வழக்கங்கள், திருமணத் தொடர்புகள், மரியாதை செலுத்துதல், பொதுவான நடத்தைகள், குறியீடுகள், மரபுகள், புராணக் கதைகள், பரம்பரைக் கதைகள், கூத்துக்கள், கிராமியப் பாடல்கள், கதைகள், வைத்திய முறைகள், மாந்திரீகம், மாயாஜாலம், சமய நூல்கள், கிரியைகள், வழக்கங்கள், விழாக்கள், சடங்குகள், கல்விமுறை, இசை, நடனம், விவசாய வாழ்வு, கலைகள், கைப்பணிகள் போன்றனவும் மனித வாழ்வுடன் தொடர்புடையனவும், அவ்வாழ்வினை நெறிப்படுத்துவனவுமாகிய வேறுபல விடயங்களும் பண்பாடு என்னும் சொல்லாலே சுட்டப்படுகின்றன'' *(2006:23-24)* என்ற அ.சண்முகதாஸின் விளக்கம் பண்பாட்டின் விரிந்தத் தன்மையைச் சுட்டும். பண்பாட்டின் வேர்களை அறிய பழங்குடிச் சமூகங்களில் இருந்தும் வாய்மொழி மரபிலிருந்தும் தொடங்க வேண்டியிருக்கிறது. எனவேதான் பண்பாடு குறித்த கற்றலுக்கும் ஆய்வுக்கும் மானிடவியல் புலம் ஓர் கற்கைநெறியாக அமைகிறது.

''ஒரு பண்பாட்டு நடத்தையின் முக்கியத்துவமானது அதை நாம் ஆங்காங்கே உள்ளதாகவும், மனிதனால் ஏற்படுத்தப்பட்டு மிகவும் மாறக்கூடிய தன்மையுடையதாகவும், புரிந்துகொண்டு விட்டால் அதோடு முடிந்துவிடாது. அது இணைந்திருக்க முற்படுகிறது. எண்ணத்திலும் செயலிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான முறையைத்தான் பண்பாடும் ஒரு தனி மனிதன் போல் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பண்பாட்டிலும் மற்றையச் சமூகங்களிலில்லாத பல நோக்கங்கள் தோன்றக்கூடும். இவற்றிற்காக ஒவ்வொரு மக்களும் தங்கள் அனுபவங்களை மேலும் மேலும் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். நடத்தையின் தொடர்பில்லா பல விவரங்கள் இந்த நோக்கங்களை யொட்டியே ஒரு உருவகத்தை அடைகின்றன. நன்றாய் இணைந்த ஒரு பண்பாட்டால் எடுத்துக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தப்படாத விவரங்கள் அதன் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கேற்றவாறு மாற்றங்களை அடைகின்றன'' *(1964:46)*. என்ற ரூத் பெனிடிக்ட்டின் கருத்து பண்பாட்டின் பின்புலத்தை உணர்த்தும்.

பண்பாடு குறித்து விரிவாகப் பேசும் பக்தவத்சலபாரதி, தனது பண்பாட்டு மானிடவியல் நூலில் பண்பாடு குறித்து அனைத்து தரப்புகளையும் தொகுத்துத் தருகிறார். பண்பாடு குறித்த பல்வேறு வரையறைகளில் உள்ள முரண்பட்டத் தன்மைகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

அ. பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்துகொள்கின்றனர்.

ஆ. பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது.

இ. மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்.

ஈ. பண்பாடு என்பது மனிதனின் உடல்சாராத தகவமைப்பு.

உ. பண்பாடு என்பது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச் சூழல். இதில் பொருள் சாராப் பண்புகள், சட்டங்கள், நம்பிக்கைகள் முதலானவை அடங்கும்.

ஊ. பண்பாடு என்பது மரபு வழியில் புரிந்துகொண்டுள்ளவை பற்றிய ஓர் அமைப்பு. இது கற்றலின் மூலம் பெறப்படுவது; கற்றல் நடத்தை முறையின் வழி உருவாக்கப்படுவது.

எ. பண்பாடு என்பது அனைவராலும் புரிந்துகொள்ளப்பட்ட கருத்துக்களும், சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் அடங்கியத் தொகுப்பாகும்.

ஏ. பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுத் தொகுப்பாகும் *(2003:151-152)* என்றும் கூறுவார்.

என்று பல வரையறைகளைக் குறிப்பிடும் பக்தவத்சலபாரதி, ''பண்பாடு என்பது ஒரு முறைப்படியான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி'' *(2003:153)* என்கிறார்.

**இலக்கிய மானிடவியல்**

இலக்கியம், மானிடவியல் ஆகிய இரு புலங்களைப் பற்றிய அறிவு சார்ந்தது இலக்கிய மானிடவியல். இதனைப் பக்தவத்சல பாரதி, ''இலக்கிய மானிடவியல், ஒரு புதிய அறிவுப்புலம். இலக்கியத்தை மானிடவியல் நோக்கிலும், மானிடவியலை இலக்கியவியல் நோக்கிலும் அறியக்கூடிய வாய்ப்பினை இப்புலம் கொண்டிருக்கிறது. இலக்கியம், மானிடவியல் ஆகிய இரண்டு துறைகளையும் இணைத்தறியும் 'துறையிடை அணுகுமுறை' *(Inter-disciplinary approach)* புதிய உள்ளொளிகளைக் காட்டவல்லது. இதன் மூலம் தமிழ் இலக்கியத்தில் புதைந்திருக்கும் மானிடவியல் கூறுகளை இனங்கண்டு அவற்றின் வாயிலாகத் தமிழ்ச் சமூகத்தையும் பண்பாட்டையும் நுட்பமாக அறிய இயலும்'' *(2020:3)*.

தமிழில் இலக்கியங்களை மானிடவியல் நோக்கில் - சமூகப் பண்பாட்டு மானிடவியல் நோக்கில் பார்க்கும் பார்வைகள் பெருகி உள்ளன. தொல்காப்பியம் தொடங்கி சங்க இலக்கியம் முதல் சமகால இலக்கியப் படைப்புகள் வரை ஆய்வுகள் தொடர்கின்றன. எனவே இலக்கிய மானிடவியல், தமிழர் மானிடவியல் என வழங்கும்

அளவுக்கு இப்பிரிவு வளர்ந்து வருகிறது. பண்பாட்டு மானிடவியலின் நீட்சியாக இனவரைவியல் அமைகிறது. தமிழில் இனவரைவு இலக்கிய ஆக்கங்களும், இனவரைவியல் இலக்கிய ஆய்வுகளும் அதிகரித்து வருகின்றன.

''கிராமபுற விவசாயிகள் - பழங்குடிகள் இடையில் இன்றும் நிலவும் சமூகப் படிநிலை வேற்றுமை ஒரு பக்கம் இருந்தாலும், குறிப்பாக ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் வாழ நேர்ந்த இந்த இரு சமுதாயங்களிடையில் நிகழ்ந்த பரஸ்பர பண்பாட்டு ஏற்புகளின் மிச்ச சொச்சங்கள் இரு சமுதாயங்கள் மத்தியில் இன்றும் காணக் கிடைக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், இன்று இந்த கடவுள் என அறியப்படும் ஏராளமான கடவுள்கள் தன் வேர்களைப் பழங்குடி சமுதாயங்களில்தான் கொண்டுள்ளன. இன்றைய நவீன காலத்திலும் பல சடங்குகள் பழங்குடிகள் - இந்து மத வேளாண் வகுப்புகள் இரு தரப்புக்கும் பொதுவானதாகவே காணப்படுகின்றன. இந்தப் பழக்க வழக்கங்களை வெறும் மூட நம்பிக்கைகள் என்று மட்டும் ஒதுக்கிவிட முடியாது. இவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் இலக்கியங்கள் மட்டுமல்லாமல் தொல்லியல் எச்சங்கள், அறிவியல் ஆய்வு முடிவுகள் இவற்றுடன் இப்பழக்க வழக்கங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்ய முடியும்'' *(2022:112)*. என்ற டி.டி. கோசம்பியின் கருத்து பண்பாட்டாய்வில் கவனம் கொள்ளத் தக்கது.

**இலக்கியமும் பண்பாடும்**

இலக்கியம், பண்பாடு ஆகியன குறித்த வறையறைகள் தனித்தனியே சொல்லப்பட்டாலும் இரண்டுக்குமான தொடர்புறவு இறுக்கமானது. பண்பாட்டின் ஒரு கூறு இலக்கியம் என்பது ஏற்கத்தக்கது. இலக்கியம் மொழிசார் கலை. அது வாய்மொழி, எழுத்து மொழி ஆகிய இரண்டு சார்ந்தும் மொழியில் நிலை கொள்ளும் இலக்கியம் தன்னைப் பண்பாட்டு வெளியாகவே வெளிப்படுத்துகிறது.

இலக்கியத்தின் மையம் மனிதன் எனில் பண்பாட்டின் மையமும் மனிதனே. மனிதப் பண்பாடு, உயிர்ப் பண்பாடு, பொருள் பண்பாடு ஆகியனவற்றின் கூட்டு மொத்தமே ஓர் இலக்கியப் படைப்பு. நிலம், காலம், சூழல், இனம் ஆகியனவற்றின் பன்மைப் பண்புகளின் திரட்சியாக பண்பாட்டையும் இலக்கியத்தையும் அணுகமுடியும்.

'இலக்கியத்தைப் பண்பாட்டைச் சித்திரிக்கக்கூடியப் பனுவலாகவும், இலக்கியப் படைப்பாளியை அவனுடைய பண்பாட்டின் படைப்பாறிம்' ஆ. தனஞ் செயன் குறிப்பிடுவார். இந்த அர்த்தத்தில் படைப்பு-படைப்பாளி குறித்து அவர் கூறும் கருத்து முக்கியமானது.

''படைப்பாளி என்பவன் தன்னுடைய பண்பாட்டினால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு படைப்பாகவே கருதப்படுகிறான். அத்துடன், தன்னைப் படைத்த பண்பாட்டை அவன் தன்னுடைய அழகியல் கண்ணோட்டத்திலிருந்தே பிரதிநிதித்துவப்படுத்துகிறான். அதாவது, தனக்கு உகந்த உபாயங்கள் மூலமாக - மொழியையும் உலகக் கண்ணோட்டங்களையும் குழைத்துப் பதப்படுத்தி - பண்பாட்டின் விதிகளையும் ஒழுங்குகளையும் மீறித் தன்னுடைய படைப்பின் வழியாகத் தன்னுடைய பண்பாட்டினைப் பிரதிநித்துவம் செய்கிறான். இத்தகைய இலக்கியப் படைப்பு, அவனுடைய சமூகத்தின் பண்பாட்டினை அல்லது அதன் ஒரு பகுதியை விவரிக்கும் பிரதிபலிப்பானாகத் திகழ்கிறது அல்லது அப்பண்பாட்டைப் பற்றி விவரிக்கும் ஆய்வு முறையான இன வரைவியலுக்கு உதவும் ஆதாரங்களில் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படுகிறது'' *(2015:16)*.

**இனவரைவியல்**

தமிழில் ஆ. தனஞ்செயன், ஞா.ஸ்டீபன், ஆ.சிவசுப்பிரமணியன் போன்றோர் இனவரைவியல் இலக்கிய ஆய்வுகளைத் தொல்காப்பியம், சங்க இலக்கியம், நவீன இலக்கியம் ஆகியவற்றில் செய்து நூல்களாகவும் வெளியிட்டுள்ளனர்.

இனவரைவியல் எனும் பெயரில் தொடங்கி, வரையறை, வகை, சூழல், பயன்பாடு ஆகிய எல்லாவற்றிலும் கருத்துமாறுபாடுகள் இருந்தபோதும் இனவரைவியல் இன்று பண்பாட்டாய்வுகளில் தவிர்க்க முடியாத ஒன்றாக நிலை பெற்றிருக்கிறது.

இனவரைவியல் என்பதை பண்பாட்டை மொழிபெயர்த்தல் *(Cultural translation)* என்பார் பக்தவத்சலபாரதி. இனவரைவியல் குறித்த சில வரையறைகளை ஆ.தனஞ்செயன் குறிப்பிடுகிறார். தேவை கருதி அதனை அப்படியே இங்குக் காணலாம்.

''ஒரு குறிப்பிட்ட மக்கள் குழு அல்லது வட்டாரத்தில் காணப்படும் அனைத்து வகையான மரபுகள் பற்றி மேற்கொள்ளப்படும் விளக்கமுறை ஆய்வே இனவரைவியல் *(Brunvand 1986:329)* என்றும், 'ஏதேனும் ஒரு பண்பாட்டைப் பற்றி எழுதப்பட்ட வரைவு அல்லது விளக்கமே இனவரைவியல் *(Herskovits, 1974:8)*' என்றும், 'ஒரு குழு அல்லது பண்பாட்டைப் பற்றி விளக்கிக்கூறும் ஒரு வருணனைக் கலை மற்றும் அறிவியல்தான் இனவரைவியல். இந்த விவரிப்பானது, எங்கோ ஒரு நாட்டிலுள்ள சிறிய இனக்குழுவைப் பற்றியதாக இருக்கலாம். அல்லது ஒரு நடுத்தரமான நகரத்திலுள்ள ஒரு பள்ளிக்கூட வகுப்பறை பற்றிய விவரிப்பாகவும் இருக்கலாம்' *(Feeterman, 1989:11)*.

'நமக்கு மிகவும் அந்நியமான உலகங்களோடு போராடி, அவற்றைப் பற்றி அறிந்துகொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய ஆய்வுமுறையை இனவரைவியல் என்றோ நாட்டார் பார்வையிலான விவரிப்பு *(Folk description)* என்றோ அழைக்கின்றனர் *(Agar, 1986:12)*'.

'எழுத்தாளன் மற்றும் அவன் யாரைப்பற்றி எழுதுகிறானோ அந்த மக்கள் ஆகிய இருவருடைய வாழ்க்கை முறையைப் பற்றிய விளக்கவுரைகள், விவர அறிக்கைகளை உருவாக்கக்கூடிய விசாரணை முறை மற்றும் எழுத்து வடிவமே இனவரைவியல்' *(Denzin, 1997:XI)*.

இப்படியான இந்த விளக்கங்கள் இனவரைவியல் என்பதைப் புரிந்துகொள்ள உதவும். மனிதப் பண்பியல் சார்ந்ததாக உள்ள இனவரைவியலின் சிக்கலான பகுதி குறித்து பக்தவத்சலபாரதியின் கூற்றும் நோக்கத்தக்கது.

'இனவரைவியல் என்பது புற மெய்ம்மைகளை மட்டுமே முன்னிறுத்தி சுயம் சாராத ஒரு நடுநிலையான, உன்னதமான பொதுமைப்பாடு கொண்டதாக இருக்காது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. காரணம் என்னவெனில் மனித சமூகத்தைப் பற்றி மனிதர்களே ஆராய்வது என்பது முதல் விமர்சனமாகும். அடுத்து, மனித சமூகத்தைப் பற்றி ஒரு தனிமனிதர் தன்வயப்பட்டே பொருள் கோடல் செய்வது இரண்டாவது விமர்சனமாகும். தகவலாளிகளைப் பார்த்து ஆய்வாளர் கேட்கும் வினாக்களும் சமூகம் பற்றி ஆய்வாளர் உருவாக்கும் உற்று நோக்கலும் அகவயமானவை என்பதை நாம் உணர முடியும். ஓர் அயற்பண்பாட்டைச் சேர்ந்த ஆய்வாளர் இன்னொரு பண்பாட்டை ஆராய்ந்து விளக்கும்போது அகவயத்தன்மை ஏதோ ஒரு வகையில் செயல்படுவது இயல்புதான். மேலும் ஒரு சிறிய பகுதியிலிருந்து, ஒரு பரந்த பிரதேசத்திற்குரிய சமூகத்தைக் கள ஆய்வு செய்து கூறுவது என்பதும் அகவயம் சார்ந்தே கூறுவதாகும்' *(2020:23)*.

இந்த விமர்சனங்களையும் கருத்தில் கொண்டே இனவரைவியல் ஆய்வுகளை நடத்த வேண்டி உள்ளது.

இனவரைவுப் படைப்புகளின் ஆழ்நோக்கை ஞா.ஸ்டீபன் இப்படிச் சுட்டிக்காட்டுவார்:

"படைப்பாக்கத்திற்கு இனவரைவியல் இன்றியமையாதது என்பதை இலக்கியப் பனுவல்களைச் சமூகப் பின்புலத்தில் வாசிக்கும்போது உணரலாம். இலக்கியம் பண்பாட்டின் உற்பத்திப் பொருள். மறுபக்கத்தில் அது பண்பாட்டைச் சமைப்பதாகவும் விளங்குகின்றது. இலக்கியப் பனுவல்களில் பரந்து காணப்படும் இனவரைவியல் தகவல்களினாலேயே இது சாத்தியமாகின்றது" *(2017:25)*. என்பது கருதத்தக்கது.

**பின்காலனியம்**

பண்பாடு குறித்த ஆக்கங்களும் ஆய்வுகளும் 'பின்காலனியம்' சார்ந்து அமைவதையும் இதனை ஓர் அணுகல் முறையாக கைக்கொள்வதையும் காணலாம். இது சமூக அசைவியக்கத்தின் விளைபொருளாகும். வேர்களைத் தேடல், காலனிய மறுப்பு, காலனிய விடுபடல், அடையாள மீட்பு ஆகிய கூறுகள் பின்காலனிய அனுகுமுறையில் கவனம் பெறுகின்றன. இது பின் நவீனத்துவத்தின் அதிகாரம் பற்றிய பார்வையின் தொடர்ச்சியாக அமைகிறது. மேற்கு x கிழக்கு, சிவப்பு x கருப்பு, மையம் x விளிம்பு, உண்மை x போலிமை போன்ற எதிர்வுகளில் பின் காலனியப் படைப்புகள் அடையாளப்படுகின்றன. காலனியாதிக்கத்துக்குள்ளானோர் தங்கள் பண்பாட்டு வேர்களைத் தேடுதுடன், தங்கள் சுயத்தையும் அடையாளத்தையும் மீட்டுருவாக்கம் செய்தல் வழியாக காலனியக் கருத்தியலை அழிக்க முடியும் என பின்காலனியம் கருதுகிறது.

பின் - காலனித்துவம், பின்காலனித்துவம் ஆகிய இரு சொற்களின் கருத்தமைவை க.பஞ்சாங்கம், "ஆய்வாளர்கள் பலதரப்பட்ட விவாதங்களை முன்வைத்த போதும், அடிப்படையில் 'பின் - காலனித்துவம்' *(With hyphen)* என்கிற சொல், காலனித்துவ அதிகாரத்திலிருந்து ஒரு நாடு விடுதலை அடைந்த காலகட்டத்தையும், 'பின்காலனித்துவம்' *(Without hyphen)* என்கிற சொல், காலனித்துவம் தொடங்கிய காலகட்டத்தில் இருந்து இன்றுவரை பண்பாட்டு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒரு காலனிய நாடு அடைந்த பாதிப்புகளைக் குறிக்கின்ற ஒன்றாகவும் விளங்குகிறது. காலனித்துவத்திற்கு ஆட்பட்ட மக்களின் மொழி, இலக்கியம், பண்பாடு, மரபு ஆகியவற்றின் மீது காலனித்துவ சக்திகளின் இடையீடு குறித்துப் பின்காலனியம் ஆராய்கிறது. அந்த இடையீடு பெரும்பாலும் மொழியின் மூலமாகவே நிகழ்த்தப்பட்டிருக்கிறது. எனவே, மொழியின் மூலமாக ஆதிக்கக் கருத்தியல் எவ்வாறு பரப்பப்பட்டிருக்கிறது என்பதையும், காலனித்துவத்திற்கு ஆளான மக்கள் எவ்வாறு அந்தக் கருத்தியல்களை எதிர்ப்பது, தலைகீழாக்குவது என்பதையும் பின்காலனித்துவ ஆய்வு உள்ளடக்கியிருக்கிறது" *(2011:270)*.

"பின்காலனித்துவ உலகம் ஒரு கலவையின் இருப்பிடம். 1968இல் மெக்லுஹன் உலகளாவிய கிராமம் என்ற கருத்தாக்கத்தைக் கண்டுபிடித்த பிறகு உலக நாடுகளில் உள்ள பண்பாடுகள் பல படிவங்கள் கொண்டதாக மாறி வருகின்றன; பல பண்பாடுகள் கலக்கின்றன; அடுத்தடுத்துக் காணப்படுகின்றன. கலப்பினக் கூறுகள் நிலைப்படுகின்றன" *(2007:161)* எனப் பின்காலனியம் நூல் குறிப்பிடுவது உலக அளவில் பண்பாடுகள் தமக்குள் ஊடுருவி நிற்பதை உணர்த்தும்.

**பண்பாட்டு எழுத்து**

திணைசார் நிலவியலை தமிழின் சங்க இலக்கியங்களில் காணலாம். இவை மனிதப் பண்பியலின் பிழிவாகவும் இயற்கை இலக்கியங்களாகவும் திகழ்வன. அதன் தொடர்ச்சியை இன்றைய நவீன இலக்கியங்களில் குறிப்பாக நாவல் இலக்கியங்களில் காணமுடிகிறது. விரிந்த களமும் வாழ்வும் மிக்க இலக்கியப் பரப்பாக நாவல் எனும் வகைமை விளங்குகிறது.

திணைச் சமூக நிலவியலை அடிப்படையாகக் கொண்டு முல்லை, குறிஞ்சி சார்ந்த பழங்குடிகள், மருதநில சமவெளிப்பரப்பைச் சார்ந்த உழுகுடிகள், நெய்தல் நிலக் கடலோடிகள் ஆகிய மக்களின் வாழ்வியல் இலக்கியப் பதிவுகளாகின்றன. அதேபோல கிராமம் சார்ந்த நிலவியலின் மறுதலையான பெருநகரத்திணை சார்ந்தும் படைப்புகள் வெளிவருகின்றன.

இப்படி நிலத்தை எழுதும் பண்பாட்டுடன் கூடவே மக்கள் குழுவின் வாழ்வும் வழக்காறுகளும் பதிவாகின்றன. இவ்வகையில் தொல்குடிகள், தலித்துகள், பெண்கள், அரவாணிகள், பால்புதுமையினர், பெரு நோயாளர்கள், விலக்கப்பட்டோர், விளிம்புநிலை-யினர் போன்றோர் இலக்கிய நாயகத் தன்மைப்

பெற்று வருகின்றனர். கூடவே சமூக வரலாற்றுச் சட்டகத்தில் ஆவணங்களாகிவிட்ட நிகழ்வுகளும் இலக்கியப் படைப்புகளாகி வருகின்றன. கூட்டு மொத்தமாகப் பார்க்கும்போது இவை அனைத்தும் வெகு மக்களின் பண்பாட்டை மொழியும் இலக்கியப் படைப்புகளாக அமையக் காணலாம். பண்பாட்டு மானிடவியல், இனவரைவியல், கிராம்ஷியம், பின் காலனியம் முதலிய அணுகல் முறைகளினூடாக மக்கள் பண்பாட்டை இலக்கிய ஆக்கமாகவும் ஆய்வாகவும் வெளிப்படுத்துவதை பண்பாட்டு எழுத்து (Cultural writing) என அழைப்பது பொருத்தமானது.

ஐரோப்பிய, ஆங்கில மைய எதிர்ப்பு, மாற்று வரலாற்று உருவாக்கம், நாட்டை எழுதுதல், பண்பாட்டை எழுதுதல், திருப்பி எழுதுதல், தன் வரலாறு, வாழ்க்கை வரலாறு, ஆவணப் பதிவுகள், வேர்களைத் தேடுதல், அடையாள மீட்பு ஆகியன பின்காலனிய எழுத்து முறைமையாகத் தொகுத்துக்கொள்ள முடியும். மேலும், மொழி சார்ந்து புறந்தள்ளுதல் (abrogation), கைப்பற்றுதல் (appropriation), இருமுகத்தன்மை (ambivalence), போன்மை (Mimicry) ஆகியவை மற்றும் கலப்பினத் தன்மை (Hybridity), இரட்டைக் காலனித்துவம் (Double clonization) போன்றவை பின்காலனியத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.

பண்பாடு குறித்த அக்கறையும் கவனமும் நவீனத்துவத்துக்குப் பிந்தைய மற்றும் காலனியக் காலத்தில் அதிகம் ஏற்பட்டது எனலாம். பண்பாட்டியல் எனும் படிப்புத் துறையும் ஆய்வுத் துறையும் உருவாகித் தனித்தப் புலமாக உருவெடுத்ததும் கவனம் கொள்ளத்தக்கது. உலகில் மாற்றத்தை உருவாக்கும் தத்துவமாக அறியப்பட்ட மார்க்சியம் பண்பாட்டியல் குறித்துக் கவலைப்பட்டது. அது அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம் என்ற வகைமைக்குள் பண்பாட்டை வைத்தது. இதன் தொடர்ச்சியாக அந்தோனியோ கிராம்ஷி 'பண்பாட்டு ஆய்வாளர்' எனும் அடையாளப்படும் அளவுக்கு இது குறித்துப் பேசினார். அவரின் குடிமைச் சமூகம் (Civil Society), பண்பாட்டு மேலாண்மை (Cultural Hegemony) போன்ற கருத்தாக்கங்கள் சமூக இயக்கத்தில், சமூக மாற்றத்தில் பண்பாட்டின் இடத்தை மதிப்பிட்டன.

மானிடவியலின் கூறுகளாக அறிவாராய்ச்சித் துறையில் தொழிற்பட பண்பாட்டு மானிடவியல், இனவரைவியல் போன்ற புதிய அணுகுமுறைகளும் பண்பாட்டியல் சார்ந்து உருவாயின. அதே போல பின்னைக் காலனியம் எனும் ஆய்வு அணுகுமுறை பண்பாடு குறித்த புதிய திறப்புகளைச் சாத்தியப்படுத்தியது.

இந்தியா போன்ற நாடுகளில் சாதி, பால் (பெண்) ஆகியவற்றில் காலனித்துவம் செய்த நற்பயன்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட முடியாது.

**நாவல்களும் பண்பாட்டு முன்வைப்பும்**

நாவல்கள் ஆக்கத்திலும் ஆய்வுகளிலும் பண்பாடு என்பது அழுத்தம் பெற்றுவருகிறது. "ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் வாழும் மனிதர்களின் வாழ்வியல் பிரச்சினைகளையும், உளவியல் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டெழுதும் நாவலானது அம்மனிதர்களினதும், சமூகத்தினதும் பண்பாடு, பழக்க வழக்கங்கள், சமய வாழ்வு மற்றும் வாழ்வியல் அம்சங்களை முழுமையாகப் பிரதிபலிப்பது அவசியமாகும். அப்பொழுதுதான் அந்நாவலைப் படிக்கும் வாசகன் அதில் இடம்பெறும் சமூகச் சூழலோடு ஒன்றிவிட முடியும். அத்துடன் அந்நாவலில் இடம்பெறும் பாத்திரங்கள் அவை சித்திரிக்கப்படும் காலச்சூழலோடு பொருந்தி நிற்கும்" *(2019:7)* என்பார் ஆ.சிவசுப்பிரமணியன்.

வட்டார நாவல்களில் இருந்து இனவரைவியல் நாவல்கள் வேறுபடும் விதத்தை, ஆ.சிவசுப்பிரமணியன், "இந்நாவல்கள் அனைத்திலும் ஒரு வட்டாரத்தின் சிறப்புக் கூறுகள் பதிந்திருந்தாலும் இந்நாவல்களின் சிறப்புக்குக் காரணம் அவற்றின் வட்டாரத் தன்மையன்று. இந்நாவல்களில் இடம்பெற்றுள்ள அடித்தள மக்களின் இனவரைவியல் செய்திகளும், தேக்க நிலையிலிருந்து விடுபட்டு மாறுதலை நோக்கி அவர்கள் முன்னேறுவதும் இடம் பெற்றிருப்பதுதான் இவற்றின் சிறப்புக்கு அடிப்படைக் காரணம்" *(2019:25)* எனச் சுட்டுவார்.

"சமூகவியல் நோக்கில் பார்க்கும்பொழுது தமிழ்நாட்டில் வாழும் அனைத்து வகை மக்களின் வாழ்வைப் பதிவு செய்யும் இத்தகைய நாவல்கள், நாவல் என்ற நிலையில் மட்டுமின்றி சமூக ஆய்வுக்கான ஓர் ஆவணமாகவும் விளங்கும் சாத்தியக் கூறு உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு குறிப்பிட்ட சாதி மற்றும் பகுதியினரின் வாழ்க்கை முறையே தமிழ்நாட்டின் பொதுவான வாழ்க்கை முறை என்று கருதும் இனமையவாதச் சிந்தனையை ஒழிக்கும்" *(2019:25)* எனும் ஆ. சிவசுப்பிரமணின் கூற்று இனவரைவியல் ஆய்வுகள் சாதியை மீட்டுருவாக்கம் செய்கின்றன என்பதற்கு விடை சொல்கிறது.

பல்துறைக் கூட்டாய்வு (Inter-disciplinary) என்பதை ஆ. தனஞ்செயன் கலப்புப்புல அணுகுமுறை என்பார். மானிடவியல் சார்ந்த இவ்வகை ஆய்வுகளை இருவேறு களங்களாக அவர் சுட்டுகிறார்.

"1. இலக்கியப் படைப்புகளை முதன்மைப்படுத்தாமல் சமூக நிறுவனங்கள் மற்றும் பண்பாட்டை மட்டுமே முதன்மைப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் காணப்படும் கலப்புப்புல அணுகுமுறை.

2. தமிழ் இலக்கிய படைப்புகளை முதன்மைப்படுத்தி அவற்றிலிருந்து இனங்காணப்பட்ட மானிடவியல் தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் புலப்படும் கலப்புப்புல அணுகுமுறை.

இவ்விரண்டு களங்களிலும் மானிடவியல் என்பது ஒரு பொதுவான அளவுகோலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது" *(2014:21)*.

இப்படிப் பல பகுப்புகளாக உள்ள பண்பாட்டுக் கோலங்களை சமூகங்களின் வாழ்வும் இருப்பும் இடப்பெயர்வும் சார்ந்து எழுதுவது பண்பாட்டு எழுத்தாக அமையும்.

எல்லாவற்றிலும் முழு உடன்பாடு கொள்ள முடியாது. விமரிசனங்கள், போதாமைகள், விடுபடல்கள்

இருக்கத்தான் செய்கின்றன. என்றாலும் இன்று பண்பாடு என்பது ஓர் அரசியல் கருத்தியலாக உலக அரங்கில் தொழிற்படும் தருணத்தில் மேற்சுட்டிய எல்லா போக்குகளையும் வரித்துக்கொண்டு வாசிக்க வேண்டியிருக்கிறது.

**மொழி, வாழிடச் சூழல், நிலம், தொழில்**

தமிழகத்தின் மக்கள் வாழ்வியல் கூறுகளை இனம் சுட்ட பக்தவத்சலபாரதி தன் 'தமிழர் மானிடவியல்' நூலில் தரும் விவரம் இவை குறித்த மதிப்பீட்டைத் தரும் காட்சிச் சித்திரமாக அமைகிறது.

தமிழகத்தில் வாழும் 364 சமூகங்களுள் 209 சமூகத்தவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். மீதமுள்ள 155 சமூகத்தவரில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்களே அதிகம். இதில் தெலுங்கு மொழியை 70 சமூகத்தினரும், கன்னடத்தை 25 சமூகத்தினரும், மலையாளத்தை 21 சமூகத்தினரும், படக மொழியை 4 சமூகத்தினரும் பேசுகின்றனர். கொங்கணி, துளு போன்ற பிற திராவிட மொழிகளைப் பேசுவோரும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர்.

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் கடலோரப் பகுதியில் மிகுதியான சமூகத்தவர்கள் வாழ்கின்றனர். தேசிய அளவில் இதன் சராசரி 14.80% ஆக இருக்கத் தமிழகத்தில் 39.10% ஆக உள்ளது. ஏறக்குறைய 25% கூடுதலாக உள்ளது. 142 சமூகத்தவர் கடலோரப் பகுதியில் வாழ்கின்றனர்.

மலையகப் பகுதியைப் பொறுத்தவரை தேசிய சராசரியும் தமிழகத்தின் விழுக்காடும் ஏறக்குறைய நெருங்கிக் காணப்படுகின்றன. தேசிய சராசரி 25.83%, தமிழகம் 24.45%. தமிழக மலைப் பகுதிகளில் 89 சமூகங்கள் வாழ்கின்றனர். 307 சமூகத்தவர் சமநிலப் பகுதியில் வாழ்கின்றனர். இதன் அளவு தேசிய சராசரியைக் காட்டிலும் 23% கூடுதலாகும் தேசிய சராசரி 61.38% மட்டுமே. தமிழகத்தில் இது 84.34% ஆக உள்ளது.

தமிழகத்தின் 364 சமூகங்களில் 269 சமூகத்தாருக்கு நிலமே உடைமையாகவும் வாழ்வாதாரமாகவும் உள்ளது. 73.90% அளவைக் கொண்ட இத்தன்மை தேசிய சராசரி அளவான 64.10% விட 9% கூடுதலாகவே உள்ளது. 235 சமூகங்கள் வேளாண்மை செய்து வருகின்றன. தேசிய சராசரி அளவான 53.57% காட்டிலும் இது 11% (64.56%) கூடுதலாகும். இடம் விட்டு இடம் பெயர்ந்து வேளாண்மை செய்யும் முறையை 7 சமூகத்தவர்கள் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் பழங்குடியினரே.

அடுத்தாக, 113 சமூகத்தவர் கைவினைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பட்டனவர், செம்படவர், கரையார், வலையர், காடையர், பரதவர், முக்குவர் போன்ற 26 சமூகத்தவர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மீன்பிடித் தொழில் செய்து வந்த சீவலக்காரர் இப்போது அத்தொழிலை விடுத்து விவசாயத்திற்கு வந்துவிட்டனர்.

"அவ்வாறே உப்பளம் கவனித்து வந்த உப்பிலியன்கள் அத்தொழிலை விடுத்து விவசாயத்திற்கு மாறிவிட்டனர். நாடார்கள் பெரும்பாலோர் தங்கள் மரபுத் தொழிலை விடுத்து வணிகத்தில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். கணக்குப் பிள்ளைகளும் இவ்வாறே கிராம நிர்வாகத்திலிருந்து விடுபட்டு நவீன கல்வியையும் குலத் தொழில் சாரா புதிய தொழில்களையும் ஏற்றுக்கொண்டனர்". (2019:457-458)

நிலம், மொழி, தொழில், சூழல் ஆகிய இவைதான் பண்பாடு என்பதன் அசைவியக்கக் காரணிகள். இவற்றை வரலாற்றுப் பின்புலத்தில் விளங்கிக் கொள்ளவும், இவற்றின் உள் ஆற்றலைப் புரிந்துகொள்ளவும் பண்பாட்டு எழுத்துக்கள் துணை புரிகின்றன.

"பண்பாடு என்பது சிக்கலான, பலவித கருத்துநிலை மட்டங்களை உள்ளடக்கியது என்பதையும், பண்பாட்டு மாற்றங்கள் மெதுவாகவும் படிப்படியாகவுமே ஏற்படுகின்றன என்பதையும் மனதில் கொண்டு செயல்பட வேண்டும்" (2016:557) என்றும்,

"எந்தவொரு புதிய பண்பாட்டிற்காக நாம் போராடுகிறோமோ அந்தப் பண்பாடு உயிருள்ளதாகவும் அவசியமானதாகவும் இருக்குமேயானால், அந்தப் பண்பாட்டின் வீச்சு தவிர்க்க முடியாததாக இருக்கும்; அது தனக்கான கலைஞர்களைத் தானே கண்டறியும். ஆனால், அரசியல் நிர்பந்தங்கள் இருந்தும்கூட அந்தப் பண்பாட்டின் வீச்சு தவிர்க்க முடியாததாகவும் ஆற்றல் மிக்கதாகவும் இல்லாமல் போகுமானால் அதன் பொருள் இதுவாகத்தான் இருக்க முடியும்; அந்தப் புதிய பண்பாடு செயற்கையானது; கற்பனையானது; அது பெரும் கலைஞர்கள் தங்களுடன் ஒத்துப்போவதில்லை என்று புலம்புகிற சராசரித்தனமான மனிதர்களின் அட்டை உலகம்தான்" (2016:561) என்றும் கிராம்ஷி கூறுபவை பண்பாடு, பண்பாட்டு மாற்றம், கலைஞர்களின் சார்பு நிலை ஆகியவற்றைத் தெளிவுப்படுத்தும்.

"வாய்மொழிக் கதைகளில் பெரும்பாலும் சமூகத்தில் பாதிக்கப்பட்டோர் வெற்றி பெறுவதைக் காணலாம். இயல்பான வாழ்க்கையில் வெற்றிபெற இயலாத நலிந்த பிரிவினர் வாய்மொழிக் கதைகளில் வெற்றியாளர்களாக உலா வருவர். பெண் தருவதாகக் கூறிப் பணக்காரனால் ஏமாற்றப்பட்ட ஓர் ஏழை இளைஞன் அதீத சக்தி பெற்று அப்பணக்காரனை வெல்வான். நடைமுறை வாழ்க்கையில் ஒரு குடும்பத்தில் பிறக்கும் மூத்தவர்கள் அதிக அதிகாரத்தைப் பெற்றவர்களாகத் திகழ்வர். வாய்மொழிக் கதைகளில் இளையோர்களே வெற்றியாளர்களாக வலம் வருவர்.

ஒரு குடும்பத்தில் பிறக்கும் அழகு வாய்ந்த சகோதரர்களை விட அக்குடும்பத்தில் பிறக்கும் அழகற்ற அல்லது ஊனமுற்ற குறைபாடுடைய சகோதரர்களே கதைகளில் வெற்றியாளர்களாகத் திகழ்வர். இத்தகைய கதைகளைக் கேட்கும் நலிந்த பிரிவினர் மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைவதைக் காணமுடியும்" (2018:102) என ஆறு. இராமநாதன் வாய்மொழி மரபு பற்றிக் கூறுவது வாய்மொழி வழக்காறுகளைப் பயன்படுத்தி எழுதப்பெறும் எழுத்து ஆவணங்களுக்கும் பொருந்தக்கூடியது. மையம் x விளிம்பு, ஆதிக்கம் x அடித்தளம் என்ற எதிர்மைகளில் ஒடுக்கப்பட்டத் தன்மைக்கு ஆதரவான நிலை எடுப்பது என்பது நாட்டுப்புற வாய்மொழி மரபின் நீட்சியாகவே அமையும்.

இந்தப் பன்மைத்துவக் கூறுகள் காலம், வெளி, சூழல் சார்ந்தவை. சமூக இயக்கக் கூறுகள், பொருள்சாரா மற்றும் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் வாய்மொழி மரபிலும் எழுத்து மரபிலுமாக தொழில்படும் விதத்தை ஆராய்ந்தறிவது அவசியம். இன்று தேசிய ஒற்றைப் பண்பாடு எனும் பண்பாட்டு ஏகாதிபத்தியம் அச்சப்படுத்தும் கருத்தியலாக உருவெடுத்துள்ளது.

எனவே, தாய்மொழிகள், தேசிய இனங்கள், இனக் குழுக்கள், நிலவியல் அடையாளங்கள், காலம், சூழல் சார் பன்மியங்கள் படைப்புகளில் வெளிப்படுகின்றன. எல்லா ஆதிக்கங்களுக்கும் எதிராக, மாற்றாக அடையாள மீட்டுருவாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பண்பாடு இனி பண்பாடுகள் ஆகும். பொதுப் பண்பாடு ஆதிக்கப் பண்பாடாகக் கட்டமைக்கப்பட்ட நிலையில் எதிர்ப் பண்பாடு, மாற்றுப் பண்பாடு, விளிம்புநிலைப் பண்பாடு எனும் எதிர்வுகள் தவிர்க்கமுடியாதவை. எனவே பண்பாட்டுக் கல்வியில் பண்பாட்டு எழுத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறும்.

**பயன்பட்ட நூல்கள்**


1. அப்பணசாமி.மூ, வரலாறு பண்பாடு அறிவியல் டி.டி.கோசம்பியின் வாழ்க்கையும் ஆய்வுகளும், ஆறாம் திணை பதிப்பகம், சென்னை, 2022.
2. இராமநாதன்.ஆறு, வாய்மொழி மரபும் எழுத்து மரபும், மணிவாசகர் பதிப்பகம், , சென்னை - 108, பதிப்பு: 2018.
3. கீதா.வ எஸ்.வி.ராஜதுரை, கிராம்ஷி புரட்சியின் இலக்கணம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98, பதிப்பு: 2016.
4. சண்முகதாஸ். அ, மொழியும் பிற துறைகளும், குமரன் புத்தக நிலையம், கொழும்பு - சென்னை, பதிப்பு: 2006.
5. சிவசுப்பிரமணியன்.ஆ, இனவரைவியலும் தமிழ் நாவலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பதிப்பு: 2014.
6. சுப்பிரமணியன்.கி.பூ, (தமிழாக்கம்) ரூத் பெனிடிக்ட், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், முதற்பதிப்பு: மார்ச் 1964.
7. தனஞ்செயன். ஆ, தமிழில் இலக்கிய மானிடவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113, பதிப்பு: 2014.
8. ………, விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள்(இனவரைவியல் ஆய்வு), நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 98, பதிப்பு: 2015.
9. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், 53,புதுத்தெரு, சிதம்பரம் - 608 001, விரிவாக்கப் பெற்ற திருத்திய பதிப்பு: ஏப்ரல், 2003.
10. ………, தமிழர் மானிடவியல், அடையாளம், திருச்சி - 621 310, மூன்றாம் பதிப்பு: 2015.
11. ………., இலக்கிய மானிடவியல், அடையாளம், இரண்டாவது பதிப்பு: 2020
12. பஞ்சாங்கம். க, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம், தஞ்சாவூர் - 613 007, முதற்பதிப்பு: 2011.
13. மகேசுவரன்.சி, இனக்குழுவரைவியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை - 600 098, பதிப்பு: 2020.
14. ராபர்ட் ஜே.சி.யங், தமிழில் மங்கை.அ, பின்காலனியம் மிகச் சுருக்கமான அறிமுகம், அடையாளம், பதிப்பு: 2007.
15. ஸ்டீபன். ஞா, இலக்கிய இனவரைவியல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை - 98, பதிப்பு: 2017.


●


கட்டுரையாளர், பேராசிரியர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறைத் தலைவர், தஞ்சாவூர்




15.02.2023 அன்று திருச்சி மாவட்டம் மணப்பாறையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியை காவல் ஆய்வாளர் ஜே.கே.கோபி அவர்கள் திறந்துவைத்தார். இதில் சௌமா ராஜரத்தினம், எழுத்தாளர் இந்திரஜித், தலைமையாசிரியர் அருள் அரசன், தங்கமணி, நவமணி சுந்தர்ராஜன், ஜனசக்தி உசேன், சுப்பிரமணியன், என்சிபிஎச் திருச்சி மண்டல மேலாளர் எஸ்.குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்

02.02.2023 அன்று நாகர்கோவில் நியூ செஞ்சுரி புத்தக புத்தக நிறுவனம் மற்றும் புனித ஜாண்ஸ் கலை அறிவியல் கல்லூரி நூலகத்துறை இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சி இனிதே துவங்கியது கண்காட்சியை அருட்பணி சாம் மேத்திவ் அவர்களின் தலைமையின் குளச்சல் தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திறந்துவைத்து முதல் விற்பனையைத் துவக்கிவைத்தார்.விழாவில் எழுத்தாளர் குறும்பனை சி.பெர்லின் பல துறைகளின் பேராசிரியப்பெருமக்கள், மாணவர்கள் மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்






12.02.2023 அன்று நாகர்கோவில் நியூ செஞ்சுரி புத்தக புத்தக நிறுவனம் சார்பாக புனித வின்சென்ட் தே பவுல் சபை, புனித ஜெபமாலை அன்னை கிளை சபை மேலப்பெருவிளையின் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவில் சிறப்பு புத்தக கண்காட்சி அருட்பணி குருசு கார்மல் அவர்களின் தலைமையில் துவங்கியது. கண்காட்சியை பெருருட்பணி ஹிலாரியூஸ் அவர்கள் திறந்து வைத்தார். பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணாக்கர் மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



16.02.2023 அன்று நாகர்கோவில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சார்பாக தக்கலையில் 37 ஆவது தேசிய புத்தக கண்காட்சியை பத்மநாபபுரம் சார் ஆட்சியர் உயர்திரு *H.R.*கௌசிக் *I A S* அவர்களின் தலைமையில் நாகர்கோவில் தனி மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி அவர்கள் திறந்து வைத்தார்கள். முதல் விற்பனையை அரசு கூடுதல் வழக்கறிஞர் *Adv M.* ஜெகதேவ் அவர்கள் துவக்கி வைத்தார். விழாவில் தோழர் இசக்கிமுத்து, தோழர் ராஜு, எழுத்தாளர் குறும்பனை சி. பெர்லின், பேரா. ஹமீம் முஸ்தபா, தோழர் பைசல்,கவிஞர் நா.நாகராஜன், தோழர் சுரேஷ் மேஸ்திரி தாஸ் எழுத்தாளர் கோட்டூர் மனோஜ், ஊடகவியலாளர் ஜவஹர், சமூக ஆர்வலர் சச்சின், நியூ செஞ்சுரி மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூல் அறிமுகம்




# மனிதனின் பயணம்
## *(Journey of Man)*

**எஸ்.விஜயன்**

M9, M89, M45, M175... இந்த எண்கள் எல்லாம் சென்னை நகரில் இயங்கும் நகரப் பேருந்துகளின் வழித்தடம் போன்று தோன்றுகிறதல்லவா? உண்மையில் இவையெல்லாம் மனித மரபணுக்களில் காணப்படும் மார்க்கர்கள் எனப்படும் மரபணுப் பிறழ்வுகளின் அடையாளங்கள் ஆகும். சரி, இந்த பிறழ்வுகள் பற்றிய ஆய்வுகள் எதற்கு பயன்படுகின்றன? இந்தப் பிறழ்வுகளின் வரலாற்றை வைத்து மனிதன் எங்கு தோன்றினான். எப்படி இடம் பெயர்ந்து உலகம் முழுவதும் வியாபித்தான் என்று கூறமுடியும். இதற்கான ஒரு தனி அறிவியல் புலமே தோன்றி-விட்டது. அதுதான் பாப்புலேஷன் ஜெனிட்டிக்ஸ் எனப்படும் மக்கட்தொகை மரபணுவியல்.

ஆங்கிலத்தில் 'ஜர்னி ஆஃப் மேன்' என்ற தலைப்பில் மக்கட்தொகை மரபணுவியலாளர் ஸ்பென்ஸர் வெல்ஸ் எழுதிய இப்புத்தகத்தை மிகவும் தாமதமாக அறிமுகப்படுத்துகிறேன். 2003ஆம் ஆண்டு வெளியான இப்புத்தகத்தை கிட்டத்தட்ட 20 வருடங்கழித்து அறிமுகப்படுத்த வேண்டிய தேவை இருப்பதால் இதைச் செய்ய வேண்டியதிருக்கிறது. குறிப்பாக நிறுவப்பட்ட அறிவியல் உண்மைகள் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை அல்லது தடுக்கப்படுகிறது. நவம்பர் 2022டெஹ்ராடூனில் நடந்த ஆகாய தத்துவம் என்ற போலி அறிவியல் மாநாடு பண்டைய இந்தியாவின் பஞ்சபூதம் எப்படி அறிவியல் பூர்வமாக இந்த அண்டத்தைப் பற்றிய விளக்கம் கொடுக்கிறது என்பதற்காக நடந்தது. பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாயம் அல்லது வெளி என்பது ஈத்தர் என்ற ஊடகத்தால் நிரப்பப்பட்டிருக்கிறது என்கிறது பண்டைய தத்துவம். இது உலகம் முழுவதும் நம்பிய விஷயம்தான். ஆனால் 19ஆம் நூற்றாண்டில் மைக்கேல்சன், மார்லே என்ற இரு அமெரிக்க அறிவியலாளர்கள் ஈத்தர் என்ற ஒன்று கிடையாது என்று நிறுவிவிட்டனர். அறிவியல் உலகமும் ஈத்தரை கைவிட்டுவிட்டது. எனினும் நம்மவர்கள் மாநாடு நடத்துகிறார்கள். புளகாங்கிதம் அடைந்து கணிசமான பேர் ரசிக்கிறார்கள் என்றால் அறிவியல் உண்மைகள் அவர்களிடம் போய்ச்சேரவில்லை என்றே அர்த்தம். எனவேதான் இப்புத்தகத்தை மீண்டுமொரு அறிமுகப்படுத்த முடிவு செய்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் இதைச் செய்ய வேண்டும் என்றும் நினைக்கிறேன்.

**நூலின் அறிமுகம்**

இன்றைய நவீன மனிதர்கள் ஹோமோ சேப்பியன்கள் (Homo Sapiens) என்று அழைக்கப்படுபவர்கள் அனைவரும் ஒரே உயிரினம் என்றும் அவர்கள் அனைவரும் ஆதிமந்தியினத்-திலிருந்து பரிணமித்தவர்கள் என்றும் ஆப்பிரிக்காவில் பரிணமித்து உலகம் முழுவதும் பரவியவர்களின் வாரிசுகள் என்றும் அறிவியல் பூர்வமாக இந்நூலில் நிறுவியுள்ளார். இந்த முடிவானது பல்வேறு ஆய்வுகள்

மூலம் பல்வேறு அறிஞர்களின் பணியால் வந்து சேர்ந்த முடிவு. இந்த முடிவு வந்து சேர்ந்த வரலாறும் இங்கே விளக்கப்படுகிறது. மானுடர்கள் சம்பந்தமான பல்வேறு கருத்துகளை முதல் அத்தியாயத்தில் ஆய்வு செய்கிறார். மனிதர்கள் இறைவனின் படைப்பு என்ற படைப்புக் கோட்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டில் நொறுங்கிப் போனது. இப்போது பரிணாமக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. இப்படிக் கூறுவதால் பரிணாமக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையை நான் மறைக்கவில்லை. உலகம் இன்னும் தட்டையானது என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். அவர்களைப் போன்றவர்கள்தான் இவர்களும் என்றுதான் முடிவு செய்ய வேண்டும்.

பரிணாமக் கோட்பாட்டிற்கு மூலகர்த்தா 19ஆம் நூற்றாண்டு அறிஞர் சார்லஸ் டார்வின். இவர் தனது பீகில் பயணத்தில் பல்வேறு உயினங்களைக் காண்கிறார் அவற்றைப் பற்றி பதிவுசெய்கிறார். அத்துடன் பல்வேறு வகையான மனிதர்கள் வெவ்வேறு கண்டங்களிலும் தீவுகளிலும் காண்கிறார். அவர்களிடம் உள்ள தோற்ற வித்தியாசங்களையும் காண்கிறார். இருப்பினும் பரிணாமமே உயிரினங்களின் தோற்றத்திற்கு அடிப்படை என்ற முடிவுக்கு வந்தடைகிறார். டார்வினுக்கு முன்பு சிலர் மதங்களின் படைப்புக் கோட்பாட்டை நிராகரித்திருக்கின்றனர். அவர்களில் குறிப்பாக லூயிஸ் அகாஸிஸ் போன்றவர்கள் பூமியின் மேற்பரப்பில் ஏற்பட்ட பல்வேறு பேரழிவுகளின் விளைவாகவே உயிரினங்கள் தோன்றின என்கின்றனர். மனிதர்கள் அனைவரும் ஒரே உயிரினம் இவர்கள் பரிணாமத்தில் தோன்றினார்கள் என்றால் பல்வேறு தோற்ற வித்தியாசங்களும் பல்வேறு உடற்கட்டமைப்பு வித்தியாசத்தையும் எப்படி விளக்கப் போகிறோம் என்ற கேள்வியும் எழுகிறது. அத்துடன் உயிரினம் என்பதற்கான விளக்கம் என்ன என்ற கேள்வியும் எழுகிறது. இதையும் இந்தப் புத்தகம் விளக்குகிறது.

பரிணாமக் கோட்பாடு நிறுவப்பட்ட பிறகு வந்தவர்கள் பல்வேறு வித்தியாசமான மனிதர்கள் மனித இனத்தின் உபஇனங்கள் என்று கூறி வந்தனர். இது தவறு என்பதை இப்புத்தகத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க மானுடவியலாளர் சார்ல்டன் கூன் என்பவர் பல்வேறு தோற்ற வித்தியாசங்களுக்குக் காரணம் அவர்கள் பரிணாமத்தின் வெவேறு கட்டங்களில் உள்ளவர்கள் என்கிறார். இதுவும் தவறு என்று ஸ்பென்ஸர் நிறுவுகிறார். மனிதர்களுக்குள்ள வித்தியாசத்தை டார்வினின் பரிணாமக் கோட்பாட்டை மீறாமல் விளக்க முயன்ற இன்னொரு குழுவும் உண்டு.

கூனைத் தொடர்ந்து வந்தவர் பிரான்ஸில் கால்டன். இவர் இன்னொரு படி மேலேபோய் மனிதர்களுக்கு ஐந்துவகை உபஇனங்கள் உண்டு என்று அதற்கு பெயரிட்டு அழைத்தார். டார்வினின் ஒன்றுவிட்ட சகோதரர் கால்டன். கால்டனின் உபஇனங்கள் வாதமானது மனிதர்களை மனிதர்கள் சுரண்டும் அரசியலை தீனிபோட்டு வளர்த்தது. இதன் ஒரு பகுதியாக தோற்ற மானுடவியல் *(Physical Anthropology)* என்றொரு போலி அறிவியல்முறை வேகமாக வளர்ந்தது, தோற்ற மானுடவியலின் முக்கிய புள்ளியாக அலேஸ் ஹ்ரிலிக்கா *(Ales Hrdlicka)* விளங்கினார். இவர்களைப் பின்பற்றியவர்கள் நற்பிறப்புவாதிகள் *(Eugenics)* என்று அழைக்கலாம். ஐரோப்பாவில் நற்பிறப்புவாதம் செல்வாக்கு பெற்று விளங்கியது. இதன் விளக்கங்கள் போலி அறிவியல் வகையினத்தைச் சார்ந்தது என்று ஸ்பென்ஸர் நிறுவுகிறார். நற்பிறப்பு வாதம் கொண்டு வந்ததெல்லாம் பேரழிவுதான். இதற்கு உதாரணம் ஹிட்லர். நற்பிறப்புவாதத்தின் விளைவாக பாரபட்சமான குடியேற்றச் சட்டங்களை சில நாடுகள் நிறைவேற்றின.

**மனிதர்களின் வித்தியாசங்களைப் பற்றிய ஆய்வின் வரலாறு**

சரி, தோற்றத்திலும் தோற்றப் பண்புகளிலும் விதவிதமான மனிதர்களைப் பார்க்கிறோம். இவற்றை விளக்க போலி அறிவியல் தலைதூக்கியதும் அதன் பின்னணியில் சுரண்டல் அரசியல் இருந்ததையும் விட்டுவிட்டு உடற்கூறியல் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக எப்படி விளக்கப்போகிறோம் என்ற கேள்வி எழுகிறது. மனிதர்களுக்கிடையிலான தோற்ற வேற்றுமைகளை வகைப்படுத்தியது தோற்ற மானுடவியல் என்றால் அதற்கான உடற்கூறு அடிப்படையை ஆய்வு செய்யும் முதல் முயற்சியைத் துவங்கியவர் கார் லேண்ட்ஸ்டீனர் என்பவர். இவர் 1901ம் ஆண்டு ரத்த உறவு இல்லாத இரு நபர்களின் ரத்தத்தை எடுத்து ஒரு குடுவையில் போட்டு கலக்கியதில் இரண்டும் ஒன்று சேராமல் கட்டி கட்டியாக உறைந்து போனதைக் கண்டார். இதிலிருந்து ரத்தங்களை வகைப்படுத்தும் முயற்சி துவங்கியது. இதுதான் மரபணு வேற்றுமைகளை அடையாளம் காணத்துவங்கிய துவக்கப்புள்ளி எனலாம். 20ஆம் நூற்றாண்டின் மையப்பகுதிக்குள் நுண்ணுயிரியல் அடிப்படையில் மனித ரத்தம் நான்கு வகைகள் என்று அடையாளம் காணப்பட்டுவிட்டது. கூன், லின்னஸ், கால்டன் ஆகியோர் வரையறுத்த உப இனங்களின் ரத்த மாதிரிகளை பரிசோதித்தபோது அவையும் இதே நான்கு வகைகளில் வருவதை கண்டறிந்ததில் உபஇனக்கோட்பாடு நிராகரிக்கப்படுவதில் போய் முடிந்தது. இனவாதம் அறிவியல் ரீதியாக நிராகரிக்கப்பட்டுவிட்டது. மனிதர்களுக்குள் உள்ள வேறுபாடுகள் பற்றிய டார்வினின் மதிப்பீடு சரியென்று நிரூபணமானது,

இரத்தவகை மாறுபாடுகளில் மேலும் ஆராய்ச்சியைத் தொடர்ந்து இத்தாலிய மருத்துவர், அறிஞர் காவோலி ஸ்போர்ஸா *(Lui Lucca Kavoli Sforza)* இவற்றிற்கும் மனிதர்களுக்கிடையிலான உறவிற்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்விக்குள் சென்றார். இவர் புள்ளியல் கணித உத்திகளை கையாண்டு ஆய்வுகளைத் தொடர்ந்தார். எந்த அடிப்படையில் இந்த மாறுபாடுகள் தொடர்ச்சியாக நீடிக்கின்றன அல்லது அழிகின்றன என்பதே இவருடைய ஆய்வு.

இயற்கைத் தெரிவுக்கு9ம் மாறுபாடுகளுக்கும் உள்ள உறவு ஆய்வுக்குட்பட்டது. இதில் இரண்டு முகாம்கள் தோன்றின. ஒன்று மாறுபாடுகளுக்கும் இயற்கை தெரிவிற்கும் சம்பந்தமில்லை என்று வலியுறுத்தும் ஒரு குழு. சம்பந்தமுண்டு என்று கூறும் மற்றொரு குழு. முதலாவது குழுவில் முக்கியமானவர் ஜப்பானிய ஆய்வாளர் கிமூரா. அரிஸ்ட்டாட்டிலின் சீடராக வாழ்ந்தவர் 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்லியம் ஓக்ஹாம். இவருடைய கோட்பாட்டின் படி தேவையில்லாமல் எந்த விஷயமும் நீடிக்க முடியாது. இதை ஓக்ஹாம் கத்தி என்பார்கள். மரபணு மாறுபாடுகள் சம்பந்தமான ஆய்வுகளில் ஓக்ஹாம் கத்தி பயன்படுத்தப்பட்டது. ஓக்ஹாம் கத்தியானது மாறுதல்கள் மிகக் குறுகிய பாதையில் பயணிக்கும் என்ற கோட்பாட்டிற்கு இட்டுச் சென்றது. இதைப் பயன்படுத்தி காவோலி மனித வேறுபாடுகளை 1964ம் ஆண்டு வகைப்படுத்தினார். மாறுபாடுகளை பின்னோக்கி ஆய்வு செய்து கொண்டே போனால் மனிதன் எங்கு தோன்றினான் என்ற கேள்விக்கான விடை கிடைத்துவிடும்.

நுண்ணுயிரியலில் ஏற்பட்ட முன்னேற்றங்களில் ஒன்று இரத்தத்தில் உள்ள ஹிமோகுளாபின் மூலக்கூறின் கட்டமைப்பு கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. இதை மற்ற மிருகங்களின் ரத்த ஹிமோகுளாபினை தொகுத்துப் பார்த்ததால் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் தெரியவரும். ஜுக்கர்காண்டில், பாலிங் ஆகிய இரு விஞ்ஞானிகள் இந்த ஆய்வில் இறங்கினார்கள். கொரில்லாவிற்கும் மனிதனுக்கும் உள்ள ஹிமோகுலோபின் வேறுபாடுகள் என்பது இரண்டு இடங்களில்தான் தெரிகிறது. இதை வைத்து கொரில்லாவும் மனிதனும் எப்பொழுது கிளைபிரிந்தான் என்று கூறிவிட முடியும். அத்துடன் இயற்கைத் தெரிவானது விதவிதமான ஹிமோகுளோபின் கட்டமைப்பிற்கு எப்படி காரணமாகிறது என்பதையும் ஓரளவு கண்டறிந்தனர்.

## ஏவாளைத் தேடி

நமது டிஎன்ஏவானது நீண்ட சுழலேணி. இது 23 ஜோடி மடிப்புகளாக மடித்து வைக்கப்பட்டிருக்கிறது என்று கொஞ்சம் கச்சாவான கருத்தாகச் சொல்லலாம். ஒவ்வொரு மடிப்பையும் நாம் குரோமோசோம் என்றழைக்கிறோம். மடிப்புகளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் மலைப்பாதையை மலை உச்சியிலிருந்து பார்க்கும் போது கொண்டை ஊசிவளைவுகளில் சேரும் இரு பாதைகளைச் சேர்த்து பார்த்தால் கிடைக்கும் வடிவம் ஒரு ஜோடி குரோமோசோம். குழந்தை உருவாகும்போது தாயிடமுள்ள 23 ஜோடிகளில் 23 குரோமோசோம்களும் தந்தையின் 23 குரோமோசோம்களும் இணைந்து புதிய டிஎன்ஏ உருவாகிறது. எனவே தாயிடமே அல்லது தந்தையிடமே தங்கியுள்ள குரோமோசோம்களில் உள்ள பிறழ்வு அடைந்த மரபணுவின் ஆயுட்காலம் அத்துடன் முடிந்து போகிறது. எனினும் தாயின் அல்லது தந்தையின் எந்த 23 குரோமோசோம்கள் அடுத்த தலைமுறைக்குச் செல்கிறது என்பது புள்ளியில் ரீதியாகவே கணிக்க முடியும். அடுத்தது, குழந்தை உருவாகும் போது தாயின் கருமுட்டைக்குள் இருக்கும் செல்லும் (இதில் தாயின் 23 குரோமோசோம்கள் மட்டுமே உள்ளன) தந்தையின் விந்தணு செல்லும் (இதிலும் தந்தையின் 23 குரோமோசோம்கள் மட்டுமே உள்ளன) இணைந்து 23 ஜோடி குரோமோசோம்களைக் கொண்ட குழந்தையின் கரு உருவாகிறது. ஆனால் இக்கருவானது தாயின் கருமுட்டை செல்லுக்குள் உருவாவதால் அச்செல்கருவிற்கு வெளியே உள்ள அத்துனை வேதிப்பொருட்களும் தாயிடமிருந்தே குழந்தைக்கு வருகிறது. அதில் ஒன்று மிட்டோகாண்ட்ரியா என்ற கூட்டுப்பொருள். இதுவும் மரபணுச்செய்திகளை தாங்கி நிற்பவை எனினும் இவை குழந்தையின் உடற்கூறை தீர்மானிப்பதில் எந்தப் பங்கும் வகிக்காது. எனவே மிட்டோகாண்ட்ரியாவை வைத்து தாயைப் பற்றி ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

1970களில் மனித மரபணுத் தொகுப்பை அடையாளம் காணும் வழிமுறையின் அடிப்படைகள் ஓரளவுக்கு கண்டறியப்பட்டது. இந்த கண்டுபிடிப்புக்காக வால்டர் கில்பர்ட், ஃபிரட் சாங்கர் ஆகியோருக்கு 1977ம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதைப் பயன்படுத்தி முதன் முதலில் மிட்டோகாண்ட்ரியா டிஎன்ஏஐ தொகுக்கும் பணி நடைபெற்றது. புதைபொருள் படிமங்களை எடுத்து அவற்றின் வயதைக் கண்டுபிடித்தபின் அதில் உள்ள டிஎன்ஏக்களை தொகுத்துப் பார்க்க முடிந்தது.

தாயின் மிட்டோகாண்டிரியாவில் ஏற்படும் பிழை மகனுக்கு அல்லது மகளுக்கு கடத்தப்படுகிறது. மகனுக்கு செல்லும் மிட்டோகாண்டிரியா அவனோடு நின்றுவிடுகிறது. ஆனால் மகளுக்குச் செல்லும் மிட்டோகாண்டிரியா அவளது மகளுக்கும் அவளிடமிருந்து அவளது மகளுக்கும்... என்று தலைமுறை தலைமுறையாகத் தொடர்கின்றது. இதேபோல் பின்னோக்கிச் சென்றால் பிழைகள் தோன்றிய தலைமுறையையும் அது வாழ்ந்த காலத்தையும் அவதானிக்கலாம். இப்படியே தேடிக்கொண்டே போனால் நாம் ஏவாளைக் கண்டுபிடித்துவிட முடியும். மனிதனின் மிட்டோகாண்ட்ரியா மாறுபாடுகளை ஆய்வு செய்தவர் ரிபேக்கா கான் என்பவர். இவரது ஆய்வு முடிவுகள் 1987ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவரின் ஆய்வு முடிவுப்படி எல்லாருடைய மிட்டோகாண்டிரியா டிஎன்ஏவும் 2 லட்சம் வருடத்திற்கு முன்பு வாழ்ந்த ஒரு பெண்ணிடமிருந்து வந்திருக்கிறது என்பதுதான். ரிபேக்காவின் கணக்கீடுகள் மறுபரிசீலனைக்கு உட்பட்டு அந்த மூதாட்டி 1.5 லட்சம் ஆண்டுக்கு முன்பு என்று பிறகு திருத்தம் செய்யப்பட்டது. அவள் ஆப்பிரிக்காவில் வாழ்ந்ததற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. அவள் வாழ்ந்த இடத்தை ஈடன் தோட்டம் என்றும் அவளை ஏவாள் என்றும் நாம் அழைத்தால் அவளுடன் வாழ்ந்த மற்ற பெண்களின் வாரிசுகள் எங்கே என்ற கேள்வி எழுகிறது. இக்கேள்விக்கான

விடையையும் ரிபேக்காவின் ஆய்வைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள இந்த நூலைப் படிக்க வேண்டும்.

**மனிதப் பேரினம்**

மனிதப் பேரினத்தில் (Genus : Homo) உள்ள நம்முடைய இனம் நவீன மனித இனம். இதை ஹேமோ சேப்பியன் என்று பெயரிட்டு அழைத்தவர் லின்னஸ். இதேபோல் இரண்டு கால்கள், நிமிர்ந்து நிற்கும் உடல் என்று இதர மனித இனங்களும் உண்டு என்பது 1856ம் ஆண்டு ஐரோப்பாவில் உள்ள நியாண்டார்தால் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடு கூறுகிறது. இந்த மண்டை ஓடு நியாண்டார்தால் மனிதன் என்று அழைக்கப்பட்டாலும் இதை மனிதப் பேரினத்திற்குள் உள்ள இன்னொரு மனித இனம்தான். இது ஹோமோ எரக்டஸ் என்ற இனத்தைச் சேர்ந்தது. அடுத்து யூகின் ட்யூபோயிஸ் என்ற டச்சு அறிவியலாளர். இவர் ஜாவாத்தீவில்கண்டுபிடித்த மண்டையோடும் மனித இனத்தைச் சேர்ந்தது. இந்த இனத்திற்கு பித்தேகேன்த்ரோப்பஸ் எரக்டஸ் என்று பெயரிட்டார். இதுவும் ஹேமோ எரக்டஸ் இனத்தைச் சேர்ந்ததுதான். சீனாவில் 1920களில் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடு சைனாத்ரோப்பஸ் என்னும் பீகிங் மனிதன் என்றழைக்கப்பட்டாலும் அதுவும் ஹேமோ எரக்டஸ் இனத்தைச் சேர்ந்ததுதான். அடுத்தது ஆப்பிரிக்காவில் டான்சானியாவில் கண்டெடுக்கப்பட்ட மண்டையோடு. இதை ஆஸட்ரலோபித்தேகஸ் என்று அழைத்தாலும் இதுவும் ஹேமோ எரக்டஸ் இனத்தைச் சேர்ந்ததுதான். இப்படி மனிதப் பேரினத்திற்குள் பல்வேறு மனித இனங்கள் இருப்பதை வைத்து சார்ல்டன் கூன் மனிதப் பேரினத்தின் மூதாதையர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேறி உலகின் வெவ்வேறு பகுதிகளில் பரவி வெவ்வேறு திக்குகளிலும் ஆங்காங்கு தனித்தனியாக பரிணமித்ததன் பயனாகத் தோன்றியது ஹோமோ சேப்பியன் என்ற முடிவுக்கு வந்திருந்தார். ஒற்றைப் பரிணாமம் என்பதிலிருந்து பன்முகப்பரிணாமம் என்ற கோட்பாட்டிற்கு இந்த இதர மனித இனங்கள் வழிவகுத்தது.

ஆப்பிரிக்காவின் ஹோமோ எரக்டஸ்க்கும் ஐரோப்பாவின் ஹோமோ எரக்டஸ்க்கும் 2 மில்லியன் ஆண்டுகள் வித்தியாசம். ஆக நவீன மனிதனின் தோற்றம் ஆப்பிரிக்கா என்று எப்படிக் கூறமுடியும் என்ற கேள்வி எழுகிறது. தொல்லியல், மானுடவியலால் தீர்க்க முடியாத பிரச்சனை இது. இதற்கு தீர்வு கண்டது மரபணுவியல். மிட்டோகான்டிரியா ஆய்வுகள் தெளிவுபடுத்துவது என்னவென்றால் பிரேஸில் பழங்குடியினராக இருந்தாலும் சரி, தாய்லாந்து பழங்குடியினராக இருந்தாலும் சரி ஐரோப்பியப் பழங்குடியினராக இருந்தாலும் சரி இவர்கள் எல்லாருக்கும் ஒரே தாய் 1.5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெண் என்பது தான்.

**ஆதாமைத் தேடி**

மிட்டோகாண்டிரியா டிஎன்ஏவில் உள்ள வேறுபாடுகளை அல்லது இரு வேறுபாடுகளுக்கு முந்தைய நிலையின் பிளவு என்று மைட்டோகாண்ட்டிரியா வேறுபாடுகளை ஒரு மரமாக சித்தரித்தால் ஒவ்வொரு கிளையின் உச்சியிலும் ஒரு குழு இருக்கும்.அதன் அடிவேர் ஒரே ஒரு பெண்ணுடையது என்று தெரிந்தது. அப்பெண்ணை ஏவாள் என்றோம். எனினும் மனித இனத்தின் பயணத்தைத் தெரிந்து கொள்ள மிட்டோகாண்டிரியா டிஎன்ஏயில் உள்ள வேறுபாடுகள் மட்டும் போதாது. ஆகவே செல்கரு டிஎன்ஏயில் உள்ள வேறுபாடுகளில் கவனம் செலுத்த வேண்டும். செல்கரு டிஎன்ஏ சுழலேணி வடிவத்தில் உள்ளது என்று கண்டறியப்பட்டிருக்கிறது. இதில் 300 கோடி ஏணிப்படிகள் உள்ளன. கார (Base) இணைவுகளே அந்த ஏணிப்படிகள். சரி 300 கோடி படிகளைஎவ்வாறு வரிசைப் படுத்துவது.இதில் குறிப்பிட்ட சில படிகளே மரபுச் செய்திகளை தாங்கி நிற்பவை. மற்றவை இண்ட்ரான்கள் எனப்படும் மரபணு செய்தியில்லா படிகள். இவற்றில் ஏற்படும் பிறழ்வுகளே மார்க்கர்கள் என அழைக்கப்படுகிறது. இவற்றை எவ்வாறு அடையாளம் காணுவது. இதற்கான முயற்சியை நூலாசிரியர் விளக்குகிறார். மரபணுவைத் தொகுக்கும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை நாம் அறிந்து கொள்ள முடியும். Gel method, HPLC, dHPLC என்று தொழில்நுட்பம் வளர்ந்ததை நாம் அறியலாம்.

செல்கரு டிஎன்ஏ தாய் தந்தையரிடமிருந்து பெறப்படுவதால் இதில் உள்ள மாறுபாடுகள் அடுத்தடுத்த தலைமுறைகளில் மறைந்துவிடும். இதைப் பின்தொடர்ந்து செல்வது பயனில்லாத வேலை. எனினும் செல்கரு டிஎன்ஏயில் உள்ள 23வது ஜோடி குரோமோசோம் நமது பயணத்தை தொடருவதற்கு வழி செய்கிறது. ஆம் அந்த குரோமோசோம் ஜோடிதான் ஒரு மனிதனுடைய பாலினத்தைத் தீர்மானிப்பது. அந்த ஜோடியில் ஒன்று X ஆகவும் மற்றொன்று X ஆகவும் இருந்தால் அது பெண் என்றும் ஒன்று X ஆகவும் மற்றொன்று Y ஆகவும் இருந்தால் அது ஆண் என்றும் தீர்மானிக்கப்படுகிறது. எனவே Y குரேமோசோம் ஆணிடமிருந்துதான் வரமுடியும். Y குரேமோசோம்களில் 1500 மரபணுக்கள் மட்டுமே செயலூக்கம் உள்ளவை இவற்றில் 21 மரபணுக்களே ஆண்தன்மையை தீர்மானிப்பவை, எஞ்சியுள்ள மரபணுக்கள் ஆணின் இதர அம்சங்களைத் தீர்மானிக்கிறது. 1500 போக மற்றவை எல்லாம் இன்ட்ரான்கள். இவை ஜங்க் என்று அழைக்கப்பட்டாலும் இவை நமது ஆண்வழி வரலாற்றை தாங்கி நிற்பவை. ஆகவே Y குரேமோசோம்களில் உள்ள பிழைகள் அல்லது மார்க்கர்களை பின்தொடர்ந்து சென்றால் மூதாதையரை அடையாளம் காணலாம்.

ஒருவருக்கு பெற்றோர் இருவர். தாத்தா பாட்டிகள் 4. முப்பாட்டனார்கள் 8. இப்படியே 20 தலைமுறைக்கு முன்னாள் வாழ்ந்த முன்னோர்கள் 2^20 = 1 டிரில்லியன் (1,000,000,000). தலைமுறை இடைவெளி 25 ஆண்டுகள் என்று கணக்கிட்டால் 500 ஆண்டுகளுக்கு முன்பு இத்தனை பேர் இருந்திருப்பார்களா என்றால்

*மிட்டோகான்டிரியா ஆய்வுகள் தெளிவுபடுத்துவது என்னவென்றால் பிரேஸில் பழங்குடியினராக இருந்தாலும் சரி, தாய்லாந்து பழங்குடியினராக இருந்தாலும் சரி, ஐரோப்பியப் பழங்குடியினராக இருந்தாலும் சரி, இவர்கள் எல்லாருக்கும் ஒரே தாய் 1.5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெண் என்பது தான்.*

இல்லை என்றுதான் கூறவேண்டும். ஆக மரபணு வேறுபாடுகள் நாம் நினைப்பதுபோல் தலைமுறைக்கு தலைமுறை விரிவாக பரவியிருக்க வாய்ப்பில்லை. ஒரே குடும்பத்திற்குள் திருமண உறவு என்பதை கணக்கிட்டால் இந்த எண் சுருங்கிவிடும். இதன்விளைவாக நாம் செல்கருமரபணுக்களில் உள்ள மாறுபாடுகளை வைத்து பின்னோக்கிச் செல்வதில் பிரச்சனைகள் உள்ளது. அடுத்தது, திருமணஉறவுகளைப் பொறுத்தவரை, பொதுவாக மனிதன் தன் துணையை அருகாமைக்குள் தேடிக்கொள்கிறான். இதுவும் மரபணுக்கள் கலப்பதற்கு வழிவகுப்பதால் நாம் பின்னோக்கிச் சென்று ஆய்வதில் கூட்டம் கூட்டமாகவே அடையாளம் காணமுடியும். மிட்டோக்காண்டிரியா டிஎன்ஏயில் உள்ள வேறுபாடுகளை பின்தொடர்ந்து சென்றபொழுது மூல மிட்டோகாண்டிரியா டிஎன்ஏஜ நாம் ஆப்பிரிக்காவில் 200000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெண்ணுடையது என்று பார்தோமல்லவா அதேபோல் சீ குரோமோசோம் மார்க்கர்களையும் நாம் பின்தொடர்ந்து சென்றால் அதுவும் ஆப்பிரிக்காவில் போய் முடிகிறது. இந்தக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியவர்கள் இந்த நூலாசிரியர் உள்ளிட்ட 19பேர். இவர்கள் கண்டுபிடிப்பானது நேச்சர் ஜெனிடிக்ஸ் இதழில் 2000ம் ஆண்டு வெளியானது. இந்த ஆண் 59000 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவில் வாழ்ந்தவர் என்ற முடிவுக்கு வந்தனர். இவரை நாம் ஆதாம் என்றால் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் 80000 ஆண்டுகள் வித்தியாசம் வருகிறது. இதை எப்படிப் புரிந்து கொள்வது என்பதற்கு இந்நூலை வாசிக்க வேண்டும்.

**கடற்கரை நெடும்பயணம்**

மனிதர்களின் மரபணுத் தொகுத்தலும் அவற்றில் உள்ள வேறுபாடுகள் சம்பந்தமான ஆய்வுகளும். இன்றைய நவீன மனிதன் எங்கு தோன்றினான் என்ற கேள்விக்கு சந்தேகத்துக்கிடமின்றி பதிலைத் தந்துவிட்டது. ஆம் இன்றைய மனிதர்கள் அனைவரும் ஒருதாய்ப் பிள்ளைகள் என்பதும் இவர்கள் அனைவரும் ஆப்பிரிக்க மூதாதையர்களின் வழித்தோன்றல்களே என்பதும் தெளிவாகிவிட்டது. அப்படியென்றால் உலகின் மூலை முடுக்குகளுக்கு எப்படி இந்த மனிதர்கள் பயணித்தார்கள். குறிப்பாக தனித்தனியாய் உள்ள தீவுகளுக்கு இவர்கள் எப்போது போய்ச் சேர்ந்தார்கள், எப்படிப் போய் சேர்ந்தார்கள் என்ற கேள்வி எழுகிறது. இதுவரை நாம் பார்த்ததை புத்தகத்தின் ஒரு பாகம் விளக்குகிறது என்றால் மற்ற இரண்டு பாகங்களும் இக்கேள்விக்கான விடையையும் அவற்றை விளக்குவதிலும் கவனம் செலுத்துகிறது. இவற்றை விளக்குவதற்கு வெறும் மரபணுவியல் ஞானம் மற்றும் போதாது. அத்துடன் மானுடவியல், தொல்லியல், புவியியல், நிலவியல், புவியின் பருவநிலைகளின் வரலாறு, மொழியியல், இயல்பியல், தடயங்களின் காலத்தை ஆய்வு செய்யும் தொழில்நுட்பம் போன்ற அனைத்து அம்சங்களையும் கற்றுத் தேர்ந்தால்தான் மனிதப்பரவலை விளக்க முடியும்.

ஆப்பிரிக்காவின் மத்திய பகுதியானது அடர்த்தியான மழைக்காடுகளையும் அதே நேரத்தில் மரங்களல்லாத புல்வெளிகள் நிரம்பிய சவென்னா வெளிகளையும் கொண்டது. மழைக்காடுகளில் ஏராளமான பாலூட்டி விலங்கினங்கள் உருவாயின. சவென்னா வெளிகள் இருகால் உயிரினங்களுக்கே ஏற்றது. இங்கேதான் விதவிதமான மனித இனங்களின் மூதாதை மந்தியினம் பரிணமித்திருக்கிறது. ஆப்பிரிக்காவின் நிலப்பகுதிகளில் வாழ்ந்த மந்திகள் சிம்பன்ஸி, கொரில்லா ஆகியவையாக பரிணமித்தன. இன்னொரு மந்தியினம் பல்வேறு மனித இனங்களாக 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பரிணமித்தன. ஆப்பிரிக்காவின் நிலவியல் வரலாற்றையும், பூகோள விபரங்களையும் ஆசிரியர் இங்கே தொகுத்தளிக்கிறார்.

ஆப்பிரிக்காவின் மத்திய கிழக்கு பகுதியான ரிஃப்ட் பள்ளத்தாக்கில் பரிணமித்த இன்றைய நவீன மனிதன், கடைசி பனி ஊழிக் காலத்தில் அங்கு வாழமுடியாத அளவுக்கு வறட்சி நிலவியதால் கிழக்கு நோக்கி பயணிக்கத் துவங்கினான். பண்டைபருவநிலையியல் (Palaeoclimatology) ஆய்வுகள் ஆப்பிரிக்காவில் நிலவிய பருவநிலைகளையும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய அறிதலை வழங்குகிறது. தொடர்ச்சியாக நிலவிய வறட்சியானது அங்கு வாழ்ந்த உயிரினங்களை கடற்கரையை நோக்கித் தள்ளியது. இப்படித்தான் இன்றைய மனிதன், ஆப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரைக்கு வந்து சேர்ந்தான். கிழக்கு கடற்கரையை அடைந்ததும் அங்கிருந்து கடற்கரை ஓரமாகப் பயணம் துவங்கியது. வடக்கு கடற்கரையில் பயணித்த மனிதர்கள் அரேபியாவை வந்தடைகிறார்கள். அங்கிருந்து கடற்கரையோரப் பயணம் துவங்குகிறது அரேபிய தீபகற்ப கடற்கரைகளை தாண்டி ஈராக் கடற்கரையையும் அதையொட்டிய பாகிஸ்தான் இந்திய மேற்கு கடற்கரை என்று பயணம் நீடிக்கிறது. இந்திய கிழக்குகடற்கரையில் வந்தவர்கள் தொடர்ந்த கடற்கரைப் பயணமானது வங்காளம் பர்மா என்று

தென்கிழக்கு ஆசியநாடுகளின் கடல்கரை வழியாகத் தொடர்கிறது. அது ஆஸ்திரேலியாவில் போய் முடிகிறது. கடற்கரைகளின் ஒவ்வாரு புள்ளியிலும் தங்கிய மனிதர்கள் பரவி நிலத்தின் உட்பகுதிக்கு பரவுகிறார்கள். இதை மனிதப்பரவலின் முதல் அலை என்கிறார். இந்த முதல் அலையை வெவ்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட படிமங்கள் இந்த மனிதர்களின் எச்சங்கள் ஆகியவற்றின் டிஎன்ஏக்களில் உள்ள மார்க்கர்களை ஆய்வு செய்ததன் மூலம் வந்தடைகின்றனர்.

ஆய்வுகள் பற்றிய தொழில்நுட்பங்களை இந்நூலில் தொட்டுச் செல்கிறார். தொன்மங்களின் வயதைக் கண்டறிய கார்பன் டேட்டிங் தொழில் நுட்பம், தெர்மோலுமினிஸன்ஸ், ஆப்டிக்கலி ஸ்டிமுலேட்டட் லுமினஸன்ஸ், எலக்ட்ரான் ஸ்பின் ரெஸனன்ஸ் ஆகிய தொழில்நுட்பங்களின் அடிப்படைகளையும் விளக்குகிறார். Y குரேமோசோம் மார்க்கர்களின் வரலாற்றைத் தேடினால் 1,50,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மார்க்கருக்குப் பிறகு ஆப்பிரிக்காவிற்கு வெளியே கிடைக்கும் மார்க்கர் 60000 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததுதான். இந்த மார்க்கரின் அடிப்புள்ளியை வி168 என்று அழைக்கிறார்கள். 1,50,000 - 60,000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கிடைத்த மார்க்கர்கள் எல்லாம் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தது. எனவே ஆப்பிரிக்கர் அல்லாத மக்களின் ஆப்பிரிக்க மூதாதை M168. இவருடைய மூதாதையர்கள் ஆப்பிரிக்கர்கள். முதல் வி168 மார்க்கர் உள்ளவர் 70,000 - 31,000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கலாம். இதே காலகட்டத்தில் உள்ள மிட்டோகாண்டிரியா மார்க்கரை நாம் லி3 என்று அடையாளம் காணப்படுகிறது. ஆக, ஆப்பிரிக்கர் அல்லாதவர்களில் ஆகப் பெரும்பாலான ஆணிடம் வி168 சீ குரோமோசாம் மார்க்கரும் L3 மிட்டோகாண்டிரியா மார்க்கரும் இருக்கிறது. இவர்களில் வடகிழக்காப்பிரிக்காவிலும் காணலாம்.

**தாவிப்பாய்ச்சல் முன்னேற்றம்**

ஆப்பிரிக்க மழைக்காடுகள், மழை குறைந்ததால் மரங்கள் போய் புதர் மண்டிய சவென்னா வெளிகள், இன்னும் மழை குறைய அது ஸ்டெப்பி வெளிகள், இன்னும் குறைந்தால் அது பாலைவனம் என்ற நிலையில் மழைக்காட்டு மந்திகள், இரண்டுகால் உயிரினங்கள், அதிலிருந்து தோன்றிய பல்வேறு மனித இனங்கள் அதில் உருவான இன்றைய நவீன மனிதன். இதில் மூளை வளர்ச்சியும் படிப்படியாக மேம்பட்டு, சூழலுக்கேற்ப தகவமைக்கும் தன்மை, தொடர்பாடலுக்கு முக்கியமான பேச்சு, மொழி என்று தனிப்பாதையில் பயணித்த நவீன மனிதன் உலகெங்கும் பரவியதில் அவன் கால்பதித்து வாழாத பூமிப்பகுதி இல்லையென்ற நிலை உருவானது. ஒவ்வொரு கட்ட இடப் பெயர்வுக்கும் அதற்கே உரித்தான தட்பவெப்ப பருவ நிலை காரணங்கள், எல்லாவற்றிலும் வாழ்வதற்கு தகவமைக்கும் ஆற்றல், இவை பற்றிய விரிவான ஆய்வுகளுக்கு ஆசிரியர் சில பக்கங்களை ஒதுக்கியிருக்கிறார். இத்துடன் இன்னொரு கோட்பாடும் ஹென்றி ஹார்பெண்டிங்கால் முன்வைக்கப்பட்டிருக்கிறது. ஆம் ஒன்று இரண்டாவது இரண்டு நான்காவது, நான்கு எட்டாவது என்று போய்க்கொண்டே இருந்தால் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு இந்த எண்ணிக்கை எப்படி கூடியிருக்கும் என்று அனுமானிப்பதே சிரமம். இதுபோல் நவீன மனிதனின் மக்கட் தொகைப் பெருக்கமும் அவனை ஆப்பிரிக்காவை விட்டு வெளியேறச் செய்ததில் முக்கிய பங்காற்றியிருக்க வேண்டும். இதில் மூன்று முக்கிய காரணிகள் உள்ளன என்று ரிச்சர்ட் கிளைன் கூறுகிறார். ஒன்று கருவிகளை உருவாக்கும் திறன், இரண்டு தொடர்பாடலுக்கு முக்கியமான மொழி, மூன்று உணவு வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தும் ஆற்றல். இந்த மூன்றின் விளைவாக உருவானது பண்பாடு. மனிதப் பேரினத்தில் உள்ள அத்தனை மனித இனங்களிலும் பண்பாட்டின் தோற்றக் கூறுகளைக் காணலாம். நமது நெருங்கிய சகோதரரான நியாண்டார் மனிதர்களிடம் பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் காண முடிந்திருக்கிறது.

நவீன மனிதனின் உலகம் முழுவதும் பரவியதற்கான புறச்சூழல்களிலும் கவனம் செலுத்துகிறார். வெறும் டிஎன்ஏக்களையும், மார்க்கர்களையும் வைத்து வரலாற்றை கட்டமைக்க விரும்பவில்லை. மனிதன் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பரவுதற்கு வேண்டிய அவசியமான காரணிகள் என்ன? பரவிய இடத்தில் என்ன சூழ்நிலை நிலவியது, அதற்கேற்றாற்போல் எப்படி தகவமைத்துக் கொண்டான் என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். வெப்ப மண்டலம், மிதவெப்ப மண்டலம், பூமியில் ஏற்படும் பருவ மாற்றங்கள் ஆகிய மூன்றும் இதற்கு பங்களித்திருக்கின்றன. மிதவெப்ப மண்டலத்தில் வாழும் விலங்குகள் உருவத்தில் பெரியவையாகவும் கடுங்குளிரை எதிர்கொள்ள தோதான உடலமைப்பும் கொழுப்பைச் சேமித்து வைத்து உணவுகிடைக்காத குளிர்காலங்களில் அவற்றை செலவழித்து பாதுகாத்துக் கொள்வதும் நடக்கிறது. வெப்பமண்டலப் பகுதிகளில் உள்ள விலங்குகளில் கொழுப்பு சேமிக்கும் உடலமைப்பு இல்லாத வகையினங்கள் ஏராளம். உருவத்தில் சிறியவையாகவும் இருக்கின்றன. 80000 வருடங்களுக்கு முன்பு பனிக்காலத்தின் உச்சி இருந்தது. 110000 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோஷ்யா பகுதிக்குள் புகுந்த மனிதன் தாக்குப்பிடித்து வாழ முடியவில்லை. மடிந்திருக்க வேண்டும் அல்லது ஆப்பிரிக்காவிற்கு திரும்பியிருக்க வேண்டும். இதற்குப் பிறகு 65000 ஆண்டுகள் கழித்து அவன் இடப்பெயர்ச்சிக்குச் சாதகமான மூன்று காரணிகள் வளர்ச்சியடைந்தன.

ஆப்பிரிக்காவை விட்டு இடம் பெயர்ந்தவர்களின் Y குரோமோசோமில் ஏற்பட்ட முதல் பிறழ்வு M168. இது 70000 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்தது. இதற்கு

அடுத்த பிறழ்வு M130, M89, முதலாவது இந்தியா முதல் ஆஸ்திரேலியா வரை காணப்படுகிறது, இரண்டாவது யுரேஷியாவில் நிகழ்ந்தது. இவை 40000 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்தது. மார்க்கர் வி168 உள்ளவர்கள் ஆப்பிரிக்காவை விட்டு வெளியேறிவிட்டார்கள். இவர்களில் ஒரு பிரிவினர் இந்தியா வழி ஆஸ்திரேலியா நோக்கி கடற்கரைப் பயணம் மேற்கொண்டனர் இவர்களிடம் மார்க்கர் M130 உள்ளது. இன்னொரு பிரிவினர் வடக்கு நோக்கி நகர்ந்து ஐரோப்பாவையும் ஆசியாவையும் பிரிக்கும் லெவெண்டா பகுதிக்கு வந்து சேர்ந்தனர். இவர்களிடம் M89 பரவலாக காணப்படுகிறது. இவர்கள் கிழக்கே பயணித்து ஆசியா முழுவதும் பரவினர். மேற்கே பயணித்தவர்கள் ஐரோப்பா முழுவதும் பரவினர். M89 வழித் தோன்றல்களிடம் தோன்றியது M9 இது 30000 வருடங்களுக்கு முன்பு தோன்றியது. இது தோன்றியிருக்க கூடிய இடம் ஈரான். M9லிருந்து M45, M175, M20 ஆகியவை தோன்றியிருக்கின்றன. இவையெல்லாம் சென்னை பெருநகரப் பேருந்துகளின் வழித்தடங்கள் போல் தோன்றுகிறது அல்லவா. ஆம் இதற்கும் இதைத்தாங்கி நின்று இடம் பெயர்ந்த கூட்டத்திற்கும் பொருந்தக்கூடிய வழித்தடங்கள்தான். இப்படியாக மரபணுப்பிறழ்வுகளை குறிப்பாக Y குரோமோசோமில் இருக்கும் மார்க்கர்களை வைத்து அதை தாங்கிநிற்கும் மக்கள் கூட்டம் எங்கு பரவலாக காணப்படுகிறது. ஒவ்வொரு மார்க்கரும் எந்த காலகட்டத்தில் தோன்றியிருக்கக் கூடும் என்ற வாதங்களை அறிவியல் பூர்வமாக முன்வைக்கிறார்.

சீனப் பகுதியை எடுத்துக் கொண்டால் ஜௌகாவ்டியன் என்ற இடத்தில் கிடைத்த பண்டைய மனிதனின் தடயங்களை ஆய்வு செய்கையில் எதுவும் 1 லட்சம் வருடத்திற்கு பிந்தையது அல்ல என்று தெரிகிறது. நவீன மனிதனின் தடயம் 40000 வருடங்களுக்கு முன்பிருந்து துவங்குகிறது. இந்த இடைவெளிகளில் என்ன நிகழ்ந்தது என்று தெரியவில்லை எனினும் 2,50,000 க்கும் 1,50,000க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் நிலவிய கடும் பனிக்காலம் பண்டைய மனிதனை அதாவது ஹோமோ எரக்டஸ் இனத்தைச் சேர்ந்த பீகிங் மனிதனை அழித்திருக்க வேண்டும். எனினும் பீகிங் மனிதன் பரிணாம வளர்ச்சியடைந்து நவீன மனிதன் ஆப்பிரிக்காவிற்கு வெளியே சுயேட்சையாக தோன்றியிருக்க கூடும் என்ற கோட்பாடு உலாவருகிறது. ஆனால் சீனப்பகுதியில் வாழ்பவர்களின் டிஎன்ஏ பரிசோதனையில் அனைவருக்கும் 50,000 ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஆப்பிரிக்கப் பிறழ்வின் மூலம் அனைவருக்கும் ஆப்பிரிக்கத் தோற்றம் இருப்பதை உறுதி செய்கிறது. இதேபோல் மைட்டோகாண்ட்ரியா ஆய்வுகளும் ஆப்பிரிக்கத் தோற்றத்தையே உறுதி செய்கிறது.


**நியாண்டார்தால்**

நியாண்டார்தால் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட மண்டையோட்டின் மூலமாக தீர்மானிக்கப்பட்ட நியாண்டார்தால் மனிதனுக்கும் ஐரோப்பாவில் உள்ள தற்கால நவீன மனிதனுக்கும் என்ன உறவு? ஒருவேளை ஐரோப்பா மனிதன் நியாண்டார்தால் மனிதனின் பரிணாம வளர்ச்சியா? போன்ற கேள்விகள் எழுந்தன. இதற்கு விடை கிடைக்க வேண்டுமானால் நியாண்டார்தால் மனிதனின் டிஎன்ஏஐ தொகுக்க வேண்டும். இது சவால் நிறைந்த பணி. இதை வெற்றிகரமான செய்து முடித்தவர் ம்யூனிக் பல்கலைகழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஸ்வெண்டே பாபோ. இவருக்கு 2022ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. பேராசிரியரின் இந்தப் பணியானது ஐரோப்பிய மனிதன் நியாண்டார்தால் மனிதனின் பரிணாமமே என்ற கோட்பாடு தவறு என்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.


மேற்கு ஐரோப்பிய குகை ஓவியங்கள் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வெளிச்சத்துக்கு வந்தன. குறிப்பாக, ஃபிரான்ஸின் கேப்ரேரெட்ஸில் உள்ள பெக் மெர்லி குகை ஓவியங்கள், ஃபிரான்ஸின் சுவட்டே குகை ஓவியங்கள், இத்தாலியின் ஃப்யூமேன் குகை ஓவியங்கள் மற்றும் இதர குகை ஓவியங்கள் காட்டுவது என்னவென்றால் இவையெல்லாம் 35,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவைதான். இந்த ஓவியங்கள் படிப்படியாக வந்தவையல்ல. திடீரென்று தோன்றியவை. இவற்றை வரைந்த மனிதர்கள் எப்படி 35,000 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்தனர் என்ற கேள்வி எழுகிறது. நூறாண்டுகளாக தொக்கி நின்ற இந்தக் கேள்விக்கு மரபணுவியல் விடை பகர்கிறது. மத்திய கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து கிளம்பி வந்து மேற்கு ஆசியாவிற்கு வந்த மனிதர்களிடம் M89 மார்க்கர் இருக்கிறது என்று பார்த்தோம். இது 45,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மார்க்கர்கள். அடுத்த பத்தாண்டுகளில் மேற்கு ஐரோப்பியாவில் தோன்றிய மார்க்கர் M173, மனித மரபணுக்களில் 300 கோடி படிகள் இருக்கின்றன என்று பார்தோம்.ஒவ்வொரு படியும் இரட்டை எழுத்துக்களால் ஆனது. இந்த இரட்டை எழுத்துக்கள் தொடர்ச்சியாக மீண்டும் மிண்டும் அருகருகில் அமையும் பகுதிகளை மைக்ரோ சேட்டிலைட் என்று கூறுவார்கள். மரபணுக்களை பிரதி எடுக்கும் போது ஏற்படும் பிழைகளில் மைக்ரோ சேட்டிலைட் பகுதிகளில் பிழை ஏற்பட அதிக வாய்ப்புண்டு. மரபணுப் பிரதியெடுப்பதில் ஒவ்வொரு தலைமுறைக்கும் 30லிருந்து 40 பிழைகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் மைக்ரோசேட்டிலைட் பகுதிகளில் ஏற்படும் பிழைகள், இதைவிட ஒரு லட்சம் பங்கு அதிக வாய்ப்புள்ளவை. இந்த இரண்டு நிகழ்தகவு இடைவெளியை வைத்து புதிய பிழைகளின் ஆண்டுகளை கணித்துவிடலாம். இப்படித்தான் M173 மார்க்கர் 30,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவை என்று கணக்கிடப்பட்டது. இது மேற்கு ஐரோப்பியர்களில் 90 சதவீதத்தினருக்கு இருக்கிறது என்பதை வைத்து மேற்கு ஐரோப்பியர்கள் நியாண்டார்தால் மனிதர்களிடம் இருந்து பரிணமித்தவர்கள் இல்லை என்பது உறுதியாகிறது.

**மனிதப் பரவலும் பண்பாடும்**

பூமியின் இண்டு இடுக்குகளுக்குள் நவீன மனிதன் பரவியதில் பருவநிலை மாற்றங்கள் மட்டுமல்ல பண்பாட்டு வளர்ச்சியும் ஒரு முக்கியமான அங்கம் என்கிறார் நூலாசிரியர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீவுகளைக் கொண்ட பாலினீஷியாவின் (மத்திய தெற்கு பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவுகள் பாலினீஷியா) ஒவ்வொரு தீவிலும் மனிதன். 1778ல் இதிலுள்ள ஒரு தீவிற்கு சென்ற கேப்டன் குக் அங்கு வாழும் மனிதர்கள் இன்னும் கற்காலத்தில் இருப்பதை பார்க்கிறார். கற்கால மனிதன் எப்படி கடலைக் கடந்து தீவுக்கு வந்தான்? இது எப்படி சாத்தியமாயிற்று. இதை விளக்குவதே நூலின் இப்பகுதி. விவசாயம் கண்டுபிடிக்கப்பட்டது பண்பாட்டு வளர்ச்சியில் ஒரு முக்கியத் திருப்புமுனை என்கிறார். 50,000 ஆண்டுகளுக்கு முன்பு வேட்டையாடி வாழ்ந்த மனிதன் சில ஆயிரங்களில் இருந்தான் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயம் தோன்றிய கட்டத்தில் உலக மக்கள் தொகை 1 கோடியாக இருந்தது, தொழிற்புரட்சி துவங்கிய 1750ல் 50கோடியானது இன்று 900 கோடி. இந்த அதிவேக மக்கட்தொகை பெருக்கம் மனிதர்களை வெவ்வேறு இடம் தேடி நகரச் செய்ததில் முக்கிய பங்காற்றியது. இதற்காக அறிவியல் ஆதாரத்தை நடைபெற்ற மரபணுவியல் ஆய்வுகள் முடிவுகளிலிருந்து தொகுத்தளிக்கிறார். சீனாவின் மஞ்சள் ஆற்று நதிக்கரை நாகரீகத்தில் உருவான அரிசி 5000 ஆண்டுகளில் ஆசியா முழுவதும் பரவியது. அரிசி உணவுக்கும் மக்கட்தொகை பெருக்கத்தையும் Y குரோமோசோம் மார்க்கர்களுக்களுக்கும் உள்ள இணைப்பை நாம் இந்நூலில் காணலாம். பண்பாட்டு வளர்ச்சியில் மக்கட்தொகை பெருக்கம் ஏற்பட்டது ஆனால் சராசரி ஆயுட்காலம் விழ்ந்தது. இதையும் இந்நூலில் விளக்குகிறார். பண்பாட்டு வளர்ச்சியில் உணவு உற்பத்திக்கு அடுத்தபடியாக மொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும் வருபவை. இவையும் மனிதப் பரவலுக்கு ஒரு காரணியாக அமைந்திருக்கிறது.





ஆக மார்க்கர்களையும் ஹாப்லோகுரூப்களையும் வைத்து பார்த்தால் மனிதப் பரவல் பற்றிய கீழ்க்காணும் சித்திரம் நமக்கு கிடைக்கிறது. தாய்வழிக் கொடி ஆய்வுகள் மைட்டோ காண்டிரியாவை வைத்தும் தந்தைவழிக் கொடியை Y குரோமோ சோமை வைத்தும் அடையாளப்படுத்தப்படுகிறது. மைட்டோ காண்டிரியா மாறுதல்களை நாம் ஹாப்லோகுரூப்களாக அடையாளம் காண்கிறோம். தந்தைவழிக் கொடி மாறுதல்களை மார்க்கர்களாக அடையாளம் காண்கிறோம். அடியில் உள்ள M168 ஆப்பிரிக்காவில் 60,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருக்கிறது என்பதை வைத்து இலைகள் ஒவ்வொன்றும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் இன்றைக்கும் இருக்கிறது என்பதை வைத்து நமது பரவல் வரலாற்றை அறிய முடிகிறது. M168க்கு கீழே L இருக்கிறது இது 1,50,000 வருடத்திற்கு முந்தையது.



மேலே உள்ள படத்தில் மனிதப் பரவல் தடத்தை Y குரோமோசோம் மார்க்கர்களை வைத்து குறிக்கப்பட்டிருக்கிறது

| வ.எண் | Y குரோமோசோம் மார்க்கர்கள் | மார்க்கர்கள் தோன்றிய காலம் | வழித்தடம் |
|---|---|---|---|
| 1 | M168 | 70,000 | வடஆப்பிரிக்கா - தென்மேற்கு அரேபியா |
| 2 | M130 | 50,000 | தென்மேற்கு அரேபியா - தென்னிந்தியா |
| 3 | M89 | 45,000 | தென்மேற்கு அரேபியா - வடகிழக்கு அரேபியா |
| 4 | M9 | 40,000 | வடகிழக்கு அரேபியா - மத்திய ஆசியா |
| 5 | M172 | 35,000 | வடகிழக்கு அரேபியா - தென் ஐரோப்பியா |
| 6 | M45 | 35,000 | மத்திய ஆசியா - வடக்கு ஆசியா |
| 7 | M173 | 30,000 | மத்திய ஆசியா - தென் சீனா |
| 8 | M20 | 30,000 | மத்திய ஆசியா - தெற்கு ஆசியா |
| 9 | M242 | 20,000 | வடக்கு ஆசியா - சைபீரியா |
| 10 | M3 | 20,000 | சைபீரியா - அமெரிக்கா |
| 11 | M175 | 10,000 | வடக்கு ஆசியா - மேற்கு ஐரோப்பா |
| 12 | M17 | 10,000 | மத்திய ஐரோப்பா - மத்திய ஆசியா |
| 13 | M122 | 10,000 | தென்சீனா - வடகிழக்கு சீனா |





மேலே உள்ள படத்தில் மனிதப் பரவல் தடத்தை மிட்டோ காண்ட்ரியா மார்க்கர்களை வைத்து குறிக்கப்பட்டிருக்கிறது

ஏற்கனவே குறிப்பிட்டபடி இப்புத்தகம் 2003ல் வெளிவந்தாலும், மீண்டும் மீண்டும் வாசிக்கப்பட வேண்டிய புத்தகம் இது. ஆங்கிலத்தில் 237 பக்கங்களை கொண்டிருக்கிறது, ஒன்பது அத்தியாயங்களைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு அத்தியாயமும் கிட்டத்தட்ட தனித்தனியாக ஒவ்வொரு அறிவியல் புலத்தில் நகர்ந்து செல்கிறது. வரலாறு, அறிவியல், பண்பாடு அகியவற்றுக்குள்ள நெருக்கமான இணைப்பை இப்புத்தகம் வாசிப்பவர்கள் புரிந்துகொள்ளலாம். அத்துடன் சிக்கலான அறிவியல் கோட்பாடுகளையும் ஆய்வு முறைகளையும் எளிமையாகவும் இந்த நூல் விளக்குகிறது. அனைவரும் வாசிக்க வேண்டிய புத்தகம் இது. என்.சிபி.ஹெச் போன்ற நிறுவனம் இதுபோன்ற நூல்களைத் தமிழில் கொண்டுவந்தால் பரந்து பட்ட வாசகர்களுக்கு அது உதவும்.

●

(கட்டுரையாளர், உயர் தொழில் நுட்ப வல்லுநர், தமிழ்நாடு அறிவியல் இயக்க செயல்பாட்டாளர், அரசியல்-அறிவியல்-பொருளாதார-சமூக கட்டுரைகள், நூல்களின் ஆசிரியர்)


ரகுநாதன் கவிதைகள்
ரகுநாதன் கட்டுரைகள்
ரகுநாதன் சிறுகதைகள்
ரகுநாதன் நாவல்கள்
ரகுநாதன் நாடகங்கள்
கிரா மியம்
நெல்லைச் சிற்றிலக்கியங்கள்
ஆரிய முத்துப்பட்டனும் அருந்ததியக் காதலிகளும்
பொருநை
தென்பாண்டிச் சீமையிலே
நெல்லைக் கோயில்கள்
சங்கத் தமிழ்மாலை
நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்
நெல்லை கால்க்கரை
வெ.சுடலைமுத்து தேவர்
நூற்றாண்டு விழாவின்
நெல்லை
காவ்யா தமிழ் சங்கமம்
தொமுசி–கிரா–அழகிரிசாமி
நூற்றாண்டு கொண்டாட்டம்
16 நூல்கள் வெளியீட்டு விழா
கலைமாமணி வேலவன் சங்கீதாவின்
வில்லிசை –காவ்யா புராணம்
தலைமை: பேரா. பா. வளனரசு
முன்னிலை: காவ்யா சண்முகசுந்தரம்
வாழ்த்துரை பேரா.இரா.சீனிவாசன் பெங்களூர் – மயன் ரமேஷ் ராஜா
இடம்: ஓட்டல் ஜானகிராம், நெல்லை ஜங்ஷன்
காலம்: 03.03.23 வெள்ளி, மாலை 5 மணிக்கு
தொடர்புக்கு – 98404 80232

## நூல் அறிமுகம்

# கவி கா.மு.ஷெரீபின் 'மச்சகந்தி'



பேராசிரியர் உ. அலிபாவா

'மச்சகந்தி' எனும் இந்நூல் குறுங்காவியமாகும். இந்து சமயத்தின் புகழ் பெற்ற இதிகாசங்களில் ஒன்றான பாரதக் கதையில் இருந்து கதையை எடுத்து ஒரு முழுமைபெற்ற சிறுகாப்பியமாகக் கவிஞர் இந்நூலைப் படைத்துள்ளார். மானிடக் காதலின் மகத்துவத்தை இந்த 'மச்சகந்தி' எடுத்துரைக்கிறது.

அகவல், அறுசீர், எழுசீர் விருத்தப்பாக்களில் கவிஞர் இந்தக் காவியத்தை இயற்றியுள்ளார். 1963 ஆம் ஆண்டு கவிஞர் தொடர் காவியமாகத் தெசிணியின் கவிதை இதழில் இக்காப்பியத்தை வெளியிட்டுள்ளார். பிறகு கவிஞரின் தமிழ் முழக்கம் ஏட்டிலும் வெளியிடப்பட்டது. பின்னர் முதற் பதிப்பாக 1972 இல் கவிஞர் தேவி நிலையம் மூலம் வெளியிட்டடார்.

"வந்த பதவியை வேண்டாம் என்றவன் பரதன்!"

"வரும் உனக்குப் பதவி" என்ற போதே அதை மறுத்துத் துறவு பூண்டவன் இளங்கோ!

தந்தைக்காகத் தனது இளமையைத் துறந்து முதுமையை ஏற்றவன் யயாதியின் மகன் பூரு.

இவர்கள் வரிசையிலே கம்பீரமாக இடம் பெற்று நிற்பவன் பீஷ்மன்.

இந்த நால்வரின் வரலாற்றையும் காவியமாக ஆக்க நினைத்து அதன் முன்னோடியாக பீஷ்மனின் சூளுரை வரையுள்ள இக்குறுங்காவியத்தை இயற்றியுள்ளேன். நான் எடுத்துக்கொண்ட நால்வரையும் காவியமாக ஆக்கி அளிக்கும் ஆற்றலை இறைவன் எனக்கு அருளட்டும்.

தந்தையின் சுகத்திற்காகத் தன் சுகத்தைத் துறந்தவன் பீஷ்மன். தன் இளம் பிராயத்தில் அவன் செய்த தியாகத்தைத் தமிழில் தனிக்காவியமாக்கும் பேறு பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன் என்று இக்காப்பியத்தின் தோற்றப் பின்புலத்தைக் கவிஞர் முதற்பதிப்பிற்கான ஆசிரியர் உரையில் எடுத்துரைக்கிறார்.

இந்தக் குறுங்காவியத்தின் இரண்டாம் பதிப்பு ஜுலை 1987 இல் வெளிவந்துள்ளது; தமிழ் முழக்கம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவ் இரண்டாம் பதிப்பிற்கான ஆசிரியர் உரையில் கவிஞர், "'கவிதை' எனும் திங்களேட்டில் இக்குறுங்காவியத்தை எழுதுங்கால் நான் இதற்கிட்ட பெயர் "தியாகம்"

என்பதாகும். நூலாக்கம் காணுங்கால் 'வீடுமச் சூளுரை' அல்லது 'பீஷ்ம சபதம்' எனப் பெயரிட விருப்புற்றேன் நூலினை வெளியிட வந்த பதிப்பகத்தார், தலைப்பு கவர்ச்சியாக இருக்கவேண்டுமெனக் கருதி, 'மச்சகந்தி' எனத் தலைப்பிட்டு வெளியிட்டனர்'' என்று குறிப்பிடுகிறார். மேலும் அவர், ''முன்பதிப்பில் வெளிவந்த பெயரை இரண்டாம் பதிப்பில் மாற்றுவது முறையன்று என்பதால் 'மச்சகந்தி' எனும் தலைப்பே நிலைபெற்றுள்ளது. இந்தத் தலைப்பின்படி பார்த்தால் இக்காப்பியம் முழுவதிலும் மச்சகந்தி பேசாப் பாத்திரமாக உள்ளாள். இப்படி ஒரு காவியம் ஆங்கிலத்தில் இருப்பதாகக் கேள்வியுற்றுள்ளேன். ஆகவே, பேசாப் பாத்திரமாகக் கதாநாயகியை வைத்துக் காவியம் பண்ணுவது உலக இலக்கியத்திற்குப் புதுமையன்று என்றாகிறது. எனினும், தமிழ் இலக்கியத்தில் இதற்குமுன் இவ்வாறில்லை எனக் கருதுகிறேன்'' எனவும் பதிவு செய்கிறார்.

சேக்கிழார் அடிப்பொடி தஞ்சாவூர் டி.என். இராமச்சந்திரன் இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1991 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

முதிய மன்னன் சந்தனு இளைய மங்கை மீது கொண்ட பொருந்தாக் காதலுக்காக மகன் செய்த ஈகத்தின் மாண்பை எடுத்துரைக்கிறது. மச்சகந்திக் காவியம். எல்லாச் சமயங்களையும் அரவணைத்துச் செல்லும் இயல்புடைய கவிஞர் தம் வாழ்நாள் முழுவதும் சமய உறவுப் பாலமாகத் திகழ்ந்தார். அதனால் எல்லாச் சமய இதிகாசங்களையும் புராணங்களையும் இலக்கியங்களையும் விருப்பு வெறுப்பின்றிப் பயின்றார். அதற்குச் சான்றாகக் கவிஞர் படைத்த 'மச்சகந்தி' திகழ்கிறது என்றால் அது மிகையில்லை. இந்து சமய இதிகாசமான மகாபாரதத்தில் கவிஞர் ஆழ்ந்து ஈடுபட்டதன் விளைவாகத் தோன்றியதுதான் 'மச்சகந்தி'. தமிழ் முழக்கம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

பரதன், இளங்கோ, யயாதி, பீஷ்மன் ஆகிய நால்வரின் வரலாற்றைப் பாட நினைத்த கவிஞர் 'மச்ச கந்தி' எனும் 'பீஷ்ம சபதத்தை மட்டும் பாடியது குறித்து ஓவியப் பாவலர் மு. வலவன், ''தந்தை சுகத்துக்காகத் தன் சுகத்தை இழந்த பீஷ்மன் போலத் தான் ஏற்றுக் கொண்ட (அரசியல்) தலைவனுக்காக இறுதிவரைத் தன் சுகத்தை இழந்து பாடுபட்ட பாட்டாளிதான் நம் செரீபு ஐயா அவர்கள் 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' எனும் பழமொழிக்கு ஏற்ப தியாகியின் வரலாற்றைத் தியாகியே பாட விழைந்ததில் வியப்பென்ன?'' என்று தம் நெஞ்சத்திரையில் நினைவுக்கோடுகள் எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

கவியரசு கண்ணதாசன் வழங்கிய முன்னுரையில், ''கவிஞர் கா.மு. ஷெரீப் அவர்கள் இன்று கவிதை எழுதுகிற அனைவருக்குமே மூத்தவர். நான் எழுதத் தொடங்கிய காலத்திலேயே அவரது கவிதைத் தொகுதி வெளிவந்து விட்டது. 'ஒளி' என்ற தலைப்புடைய அந்தத் தொகுதியினை நான் சுவைத்திருக்கிறேன். அதன் பின்னரும் அவர்கள் ஏராளமான கவிதைகள் யாத்திருக்கின்றார்கள். இந்த 'மச்சகந்தி' காவியமும் அவர்களது திறமைக்கும் சிறப்புக்கும் எடுத்துக்காட்டாகும்'' என்று கவிஞர் குறித்துக் கூறுவதுடன் மச்சகந்திக் காவியம் குறித்தும் அவர், ''தமிழில் இதுவரை வராத ஒரு கருவினை வைத்துக் கொண்டு, இந்தக் காவியத்தை அவர்கள் பின்னியிருக்கின்றார்கள்.

இந்தக் காவியத்தில் சுவைக்கக்கூடிய பல அம்சங்கள் உண்டு. கவிஞரின் மனவளத்தால் காவியப் பாத்திரங்களும் மனவளம் பெற்றிருக்கின்றன. ஓர் இடத்தில்,

**"அமைச்சர் நடந்தார் மெதுவாக**
**அறிவோ கிளர்ந்தது விரைவாக"**

என்கிறார்.

அங்கங்களைத் தாண்டி அறிவு முந்தியோடுவதைக் கவிஞர் இப்படி வர்ணிக்கிறார். இன்னோர் இடத்தில் :

**"கொள்கைக்காக உயிர்நீத்தான்**
**கோமான் என்ற சரித்திரத்தை**
**எல்லை விரிந்த உலகினுக்கே**
**ஈந்து சாகத் துணிந்துவிட்டேன்"**

என்கிறார்.

காலங்காலங்களாக ஒரே தேசியக் கொள்கையில் ஊறியவர் கவிஞர். ஆகவே, கொள்கையை அவர் வலியுறுத்துவதில் ஆச்சரியமில்லை.

அற்புதமான கற்பனைச் சிறகுகளோடு தமிழுக்கு ஒரு அரிய காப்பியம் கிடைக்கின்றது என்று பாராட்டி மொழிகிறார்.

''இன்றுள்ள கவிஞர்களுள் முதுபெரும் புலவராக விளங்கி வருபவர் நம் கலைமாமணி ஐயா கா.மு.ஷெரீப் அவர்கள் ஆவார். அவர் எழுதியுள்ள 'மச்சகந்தி' எனும் குறுங்காவியத்தின் இரண்டாம் பதிப்புக்கு முன்னுரை எழுதுமாறு பணித்து என்னைப் பெருமைப்படுத்தியுள்ளார்கள்; அதற்கென உளமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். ஐயா அவர்களின் தெளிந்த புலமை, தீந்தமிழ் நடை, சிந்தனைச் செறிவு ஆகியவற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டே இக் குறுங்காப்பியம்'' என்று குறிப்பிடும் சிலம்பொலி சு. செல்லப்பன் இந்நூல் குறித்த தம் கருத்துரையையும், பாரதத்திலுள்ள செய்திகளைக் கருப்பொருள்களாகக் கொண்டு கதைகள் பல புனையப்பட்டுள்ளன. பெரும்பாலும் கிருட்டிணன் தூது, துரௌபதி துகிலுரியப்படுதல், கீசக வதம் போன்றனவே நாடகங்களாவும் குறுங்காவியங்களாகவும் வெளிவந்துள்ளன. அவர்கள் இந்நூலின் முதற்பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளது போல 'தமிழில் இதுவரை வெளிவராத ஒரு கருவினை வைத்துக்கொண்டு இக்குறுங்காப்பியத்தைக் கவிஞர்கள் பின்னியிருக்கிறார்கள்!'' பாரதியார் பஞ்

சாலி சபதத்தைப் பாடியுள்ளார்; நம் கவிஞரோ பீஷ்ம சபதத்தைப் பாடுகிறார். இந்நூலுக்கு மச்சகந்தி என்னும் பெயரைவிட 'பீஷ்ம சபதம்' அல்லது 'வீடுமன் சூளுரை' என்பதையே பெயராகத் தந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது'' எனப் பகர்கிறார்.

'மச்சகந்தி' எனும் காவியத்தை மொழிபெயர்த்த சேக்கிழார் அடிப்பொடி டி.என். இராமச்சந்திரன் தம் மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில்,

''இந்நூலின் ஆசிரியர் ஜனாப் கவி கா.மு. ஷெரீப் அவர்கள் கடவுள் மற்றும் சமயப்பற்றுடைய சுயேச்சை எண்ணங்கள் கொண்ட முசுலீம் ஆகவும் விளங்குகிறார். இவர் ஒரு உண்மையான உலகக் குடிமகன். அதே நேரத்தில் வலுவான தமிழன். இக்காப்பியம் முன்கூட்டி உணர்த்துவது இவரது புகழையும் மேன்மையும் என்பேன்'' என்று கவிஞரின் சர்வ சமய சமரச உணர்வைப் பாராட்டுகிறார்.

உலகத் தமிழராய்ச்சி நிறுவன இயக்குநர் அ. நா. பெருமாள் இந்நூலுக்கு வழங்கிய ஆய்வுரையில், ''பாரதப் பெருங்கதை பாரத நாட்டுப் பாமரரும் நன்கு அறிந்த பழங்கதை. அதிலுள்ள ஒரு சிறு பகுதியை நறுக்கி எடுத்து நல்ல பல கருத்துக்களைப் புகுத்திக் காட்டும் கவிஞர் கா.மு. ஷெரீப் அவர்கள் தம் இலக்கியக் குழந்தையான 'மச்சகந்தி' வாயிலாகத் தமிழ் அன்னையின் அழகுக் கோலத்துக்கு அணியொன்று சூட்டிப் பெருமையடைகிறார் என்று சிறப்பித்துக் கூறலாம். கதையைச் சிறு துரும்பாகப் பெற்று அதற்குப் பொன் புனைவு செய்து இலக்கிய வளம் சிறந்த ஒரு காவியமாகத் தருகிறார்.

உருவில் சிறிய காவியத்தில் பெருகும் அறிவுக் கருத்துக்களைத் தேக்கி அதனை அரியதாகவும் பெரியதாகவும் ஆக்கிவிடும் கவிஞரின் ஆழ்ந்த புலமை மதிக்கத்தக்கதாக மலர்ந்துள்ளது. கவிதை உள்ளம், இலக்கியச் சிந்தனை, சமுதாய உணர்வு, தமிழ் மரபில் பற்று, கொள்கைப் பிடிப்பு, மனித நலம் நாடும் பக்குவ நிலை, நடுக்கண்டு நல்லது கூறும் நடுக்கற்ற நல்மனம் போன்ற பல்வகை இயல்புகளுடன் கவிஞர் இந்த இனிய காவியத்தை எளிமையாகவும் இனிமையாகவும் படைத்துள்ளார்.

கருத்துச் செறிவும், கனிவான மொழியும் இனிமையான நடையும் இசைவாக இணைந்து பயனுடன் மலர்ந்து மணப்பது கவிதை. இத்தகு செம்மைகளுடன் இயல்பாகக் கவிதை புனையும் ஆற்றல் மிக்க கவிஞர்களில் ஒருவராக மதிக்கப்படும் முற்றிய பாவலர் கா.மு. ஷெரீப் அவர்களின் கவிதை உள்ளம் 'மச்சகந்தி' வாயிலாகப் பளிச்சிடுகிறது என்று எடுத்துரைக்கிறார்.

●

(கட்டுரையாளர், பேராசிரியர் தலைவர்,
தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்,



திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் தமிழாய்வுத்துறை சார்பில் பிஷப் கால்டுவெல் புத்தக நிலையம், சீகன் பால்கு பதிப்பகம் ஆகியவற்றை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு திரு கே.என் நேரு அவர்களும், மாநில சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. எஸ் மஸ்தான் அவர்களும் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் கல்லூரியின் ஆட்சிமன்றத் தலைவர் பேராயர் பேரருட்திரு முனைவர் த. சந்திரசேகரன், கல்லூரியின் முதல்வர் முனைவர் த.பால் தயாபரன், தமிழாய்வுத்துறைத் தலைவர் முனைவர் பா. இராஜ்குமார் மற்றும் திருச்சி மண்டல மேலாளர் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மகத்தான படைப்பு விரைவில்...

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

## ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில்

பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள் - பாடற்கருத்து - அருஞ்சொற்பொருள் - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில்

எண்மரின் பத்தாண்டுகாலக் கடும் உழைப்பில்


20 தொகுதிகள், 8000 பக்கங்கள்


உயர்ந்த கட்டமைப்பில்

தமிழக வரலாற்றில் முதல்முறையாக

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!








**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


**மார்ச் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | |
|---|---|---|
| 1858 | 2776 | 1120 |
| 3907 | 2777 | 1119 |
| 3904 | 5672 | 2778 |
| 2775 | 3906 | |

தனி இதழ் ₹ **45.00**
ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**,
ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.



# வ.உ.சி கப்பல் தந்த விடுதலை எழுச்சி!

பாரதிபாலன்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரே தலைவர் வ.உ.சிதம்பரனார் மட்டுமே; பிரிட்டிஷாருக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகத் திகழ்ந்தவர். காரணம் அவர் தொடங்கிய சுதேசிக் கப்பல்: அதன் நோக்கம் வணிகம் அல்ல; விடுதலை உணர்வு; அந்நிய எதிர்ப்பு மக்களை அணி திரட்டுதல்.

இந்திய விடுதலை இயக்கத்தின் தொடக்க காலத் தலைவர்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவர் வ.உ.சிதம்பரம்பிள்ளை. 1872-1936-இல் தனித்துவமான பல போராட்டங்களை முன்னெடுத்தவர் அவர்!

கப்பலில் வந்து, கடல் ஆதிக்கம் செய்து இந்தியர்களை அடிமைப்படுத்தி வணிகம் செய்து கொண்டிருந்த பிரிட்டிஷாரின் 'பிரிட்டிஷ் இந்தியன் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' என்ற ஆங்கிலேயக் கப்பல் நிறுவனத்திற்கு எதிராக ஒரு சுதேசிக் கப்பல் நிறுவனத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் அவரின் பெருங்கனவு. அதை நோக்கிய பணிகளுக்காகவே தன்னை அர்ப்பணித்தார்.

**அன்றைய இந்திய கப்பல் கம்பெனிகள்:**

அப்போது தூத்துக்குடியில் இருந்து கொழும்புவிற்குத் தினமும் பிரிட்டிஷ் இந்தியன் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியின் கப்பல்கள் சென்று கொண்டிருந்தன.

சில இந்தியர்களும் கப்பல் கம்பெனி நடத்திக் கொண்டிருந்தனர். 1884-ஆம் ஆண்டு கொல்கத்தாவில் ஜானகி நாத், உள்நாட்டு நதிப் போக்குவரத்து நாவாய் சங்கத்தைத் தொடங்கினார். அவருக்கு சரோஜினி, பாக்யலட்சுமி, ஸ்வதேசி, பாரத், லார்ட் ரிப்பன் எனும் ஐந்து கப்பல்கள் சொந்தமாக இயங்கின.

1897 இல் தோன்றிய கிழக்கு வங்க நதிப்போக்குவரத்து கப்பல் கம்பெனி 1906 முதல் 1908 வரை சிறப்பாக நடந்தது.

1909 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தனுஷ்கோடி ராசு என்ற இந்திய கிருத்துவத் தனவந்தர் கப்பல் விட்டார்.

ஆதங்குடி செட்டியார் குடும்பத்தினர் தமிழ்நாட்டிற்கும் ஆந்திராவிற்கும் இடையில் "ந.மு கம்பெனி" என்ற பெயரில் சரக்குக் கப்பல் கம்பெனி நடத்தினர். இதேபோன்று நாகப்பட்டினத்திற்கும் காக்கிநாடாவிற்கும் இடையில் 'சி.வ. கப்பல் கம்பெனி' என்ற பெயரில் சி.வ. நல்ல பெருமாள் பிள்ளை கப்பல் ஒன்றும் ஓடியது.

இந்தக் கப்பல் கம்பெனிகளுக்கு பிரிட்டிஷ் இந்தியா கம்பெனி தொடர்ந்து பல தொந்தரவுகளைக் கொடுத்து வந்தது. தங்கள் கம்பெனியின் படகுகளைக் கொண்டு அவற்றின் மீது மோதவிட்டு, பல நஷ்டங்களை ஏற்படுத்தியது. இந்த கம்பெனிகள் அனைத்தையும் பிரிட்டிஷ் அரசு ஒடுக்கியது. இதனால் இந்தக் கம்பெனிகள் ஒன்றன்பின் ஒன்றாக மூடப்பட்டன.

இந்தக் கப்பல் கம்பெனிகளின் முதன்மையான நோக்கம் என்பது பிரிட்டிஷ் இந்தியா கம்பெனியை எதிர்ப்பது என்பதல்ல; வணிகம். வணிகப் போட்டியாக கப்பல் கம்பெனிகள் வளர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே இவைகளை பிரிட்டிஷ் இந்தியா கம்பெனி ஒடுக்கியது. இந்தப் பின்னணியில்தான் வ.உ.சியின் சுதேசி கப்பல் என்ற சிந்தனை வலுப்பெற்றது.

'நமது சுதேசம் க்ஷேமத்தையடைந்து முன்னாளின் மேலான நிலைமைக்கு வருவதற்கு சகல தொழில்களிலும் வியாபாரங்களிலும் மிக்க லாபத்தைக் கொடுப்பதான கப்பல் நடத்தும் தொழிலை நாம் கைக்கொள்வதே முக்கிய சாதனமாகும்' என்று வ.உ.சி எழுதினார்.

1906 அக்டோபர் 6 அன்று விவேகபானு இதழில் வ.உ.சி எழுதினார் "நமது சுதேசத்தை அந்நிய நாட்டார் கைப்பற்றிக் கொண்டதற்கு ஏதுவாக இருந்ததும், நமது சுதேசத்து பொருட்களை எல்லாம் அந்நிய நாட்டார் கொண்டு போவதற்கு ஏதுவாக இருந்ததும், நமக்கு மிக்க லாபத்தை தரக்கூடிய கைத்தொழில் வியாபாரங்களை எல்லாம் அந்நிய நாடுகளுக்கு கொண்டு போவதற்கு ஏதுவாக இருந்ததும், அந்நிய நாட்டார் நம் தேசத்தின் மீது பிரவேசித்து நாம் நீடித்த நாளாகக் கைக்கொண்டிருந்த கப்பல் தொழிலை நம்மிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டது ஒன்றே ஆதலால், நாம் அதிசீக்கிரமாகவும் அத்தியாவசியமாகவும் கைக் கொள்ளத்தக்கதும் கைக் கொள்ள வேண்டுவதும் ஆன தொழில் கப்பல் நடத்துவது மட்டுமே என்பது நம் எல்லோருக்கும் தெளிவாய் தெரிந்ததே..."

"இந்தியா" 01.09.1906 இதழில் பாரதியார் 'ஓர் புதிய சுதேசிய புகைக் கப்பல் கம்பெனி' என்று தலைப்பிட்டு வ.உ.சி. கப்பல் கம்பெனி பங்கு விவரங்களை குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாளான அக்டோபர் 16-ஆம் நாள் 1906 ஆம் ஆண்டு 'சுதேசி நாவாய் சங்கம்' என்கிற சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி இந்தியக் கம்பெனிச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. இதன் தொடக்க மூலதனம் 10 இலட்சம் ரூபாய். பங்கு ஒன்றிற்கு ரூ. 25 வீதம் 40 ஆயிரம் பங்குகள் விற்பனை செய்யப்பட்டன.

**சுதேசாபிமான சீலர்களே!**

நமது சுதேசத் தாயானவள் பூர்வகாலந் தொடங்கி விலையுயர்ந்த நவரத்தினங்களையும், தங்கம் முதலிய லோகங்களையும் சகல விளைபொருட்களையும், கைத்தொழில்களையும், வியாபாரங்களையும் உடையவளாய், மற்ற தேசங்களினும் மேன்மையும் செல்வமும் மிக்க நிறைந்து, நீடித்த காலம் வாழ்ந்திருந்து பின்னர் அந்நிய நாட்டார் பிரவேசித்த காரணத்தால், சகல கைத்தொழில்களையும் வியாபாரங்களையும் இழந்து மிக்க வறுமையுற்றுப் பசியால் வருந்தி இறந்து கஷ்டப்படுவதைக் கண்ணுற்ற சர்வ இரக்ஷகராகிய கடவுளானவர் சென்ற 1905ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 முதல் நம் சுதேசத்தாயின் மீது கருணை கூர்ந்து சுதேசக் கிளர்ச்சியை உண்டாக்கி நாம் நீடித்த நாளாக இழந்திருந்த ஒற்றுமையையும் ஊக்கத்தையும் கைத்தொழில்களையும் வியாபாரங்களையும் நம்மைக் கைக்கொள்ளும்படி செய்து நன்மை புரிந்து வருகின்றதை நாமெல்லோரும் அறிந்திருக்கின்றோம்.

நம் சுதேசம் க்ஷேமத்தையடைந்து முன்னாளின் மேலான நிலைமைக்கு வருவதற்கு சகல தொழில்களிலும் வியாபாரங்களிலும் மிக்க லாபத்தைக் கொடுப்பதான கப்பல்கள் நடத்தும் தொழிலை நாம் கைக்கொள்வதே முக்கிய சாதனமாகும். தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் கப்பல்கள் நடத்துவதற்கு இரண்டு ஸ்டீமர்களும் இரண்டு ஸ்டீம் லாஞ்சுகளும் போதுமானவை; அவைகளை நாம் சொந்தமாக வாங்கி வேலை நடத்துவதற்கு ஐந்து லட்ச ரூபாய் மூலதனம் போதுமானது.

அவ்வைந்து லட்ச ரூபாய் மூலதனத்துடன் கப்பல் நடாத்துந் தொழிலில் சகல செலவும் நீக்கி வருஷம் 1க்கு 10 லட்ச லாபம் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது. இவ்வளவு பெரிய ரூபா இலாபத்தைக் கொடுக்கத்தக்க தொழிலாவது வியாபாரமாவது வேறு கிடையாது. இத்தகைய தொழிலைச் சென்ற பல வருஷங்களாக அந்நிய நாட்டார்கள் கைப்பற்றிக் கொண்டு அதிற்கிடைக்கும் லாபத்தில் ஒரு சிறிதேனும் நம்மையடைய விடாமற் செய்து நம் தேசத்தையும் முக்கியமாக நம் தென்னாட்டையும் மிக்க வறுமைக்குள்படுத்தி விட்டார்கள்.

சகோதரர்களே! இரண்டு ஸ்டீமர்களும் இரண்டு லாஞ்சுகளும் வாங்கி வேலை நடத்துவதற்கு வேண்டுமைந்து லட்ச ரூபாய் நம்மிடமில்லையா? நமக்குக் கப்பல்கள் நடாத்துந் திறமையில்லையா? நம் முன்னோர் கப்பல்கள் நடாத்துவதில் மற்ற நாட்டாருக்குப் பின்னடைந்து நின்றவரா? கப்பல்களில் ஏற்றுமதி, இறக்குமதியா குஞ் சரக்குகள் நம்முடையவையன்றி வேறுண்டா? கப்பல்களில் பிரயாணமாகும் பிரயாணிகளில் ஏகதேசம் ஒன்று இரண்டு தவிர மற்றவர்கள் நம்மையன்றி வேறுளரா? ஒரு விதத்திலும் குறைவில்லாத நாம் தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் மாத்திரம் அன்று; ஆசியா, ஐரோப்பா முதலிய பல கண்டங்களிலுமுள்ள துறைமுகங்களுக்கெல்லாம் கப்பல்கள் நடாத்தும் செல்வமும் திறமையும் பூண்டுள்ளோம்.

நமது சுதேசத்தை அந்நிய நாட்டார் கைப்பற்றிக் கொண்டதற் கேதுவா யிருந்ததும் நம் சுதேசத்துப் பொருள்களையெல்லாம் அந்நிய நாட்டார் கொண்டு போவதற்கேதுவாயிருந்ததும் நமக்கு மிக்க லாபத்தைத் தரக்கூடிய கைத்தொழிலில் வியாபாரங்களையெல்லாம் அந்நிய நாடுகளுக்குக் கொண்டு போவதற்கேதுவாயிருந்ததும் அந்நிய நாட்டார் நம் தேசத்தின் மீது பிரவேசித்து நாம் நீடித்த நாளாகக் கைக்கொண்டிருந்த கப்பல் தொழிலை நம்மிடமிருந்து கைப்பற்றிக் கொண்டதொன்றே யாதலால் நாம் அதி சீக்கிரமாகவும் அத்தியாவசியமாகவும் கைக்கொள்ளத் தக்கதும் கைக்கொள்ள வேண்டுவதுமான தொழில் கப்பல்கள் நடாத்துவதேயாமென்பது நம்மெல்லோருக்கும் பரிஷ்காரமாகத் தெரிந்ததே.

நமது சுதேசம் மற்ற தேசங்களைப் பார்க்கிலும் மேலான நிலைமைக்கு வருவதற்கு நாம் இவ்வுலகின் கண்ணுள்ள துறைமுகங்களுக்கெல்லாம் நமது சுதேசக் கப்பல்கள் போக்குவரவாயிருக்கும்படி செய்ய வேண்டியதவசியமாயிருக்கின்றது.

ஆனாலும் நாம் பல வருஷங்களாக இழந்துவிட்ட தொழில்களையெல்லாம் ஒவ்வொன்றாக மெள்ள மெள்ளக் கைக்கொள்ள வேண்டுமேயன்றி எல்லாவற்றையும் ஒருங்கே ஒரே காலத்தில் கைக்கொள்ள முடியாது. அதனால் தற்சமயம் தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் மற்றும் முக்கியமான துறைமுகங்களுக்கும் கப்பல்கள் நடாத்தி நாம் லாபமடையும் பொருட்டுத் தூத்துக்குடியில் (10,00,000) பத்து லட்சம் ரூபா மூலதனத்துடன் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று மாங்குசீட்டன் என்னும் ஸ்டீமரை வாடகைக்கமர்த்தி அது நடைபெற்று வருகின்றது; சொந்த ஸ்டீமர்கள் சமீப காலத்தில் வந்துவிடும். இதில் ஏழைகள் முதல் பெரும் பணக்காரர் வரையுள்ள சகல சுதேச சகோதரர்களும் பங்காளிகளாகச் சேர்ந்து லாபம் அடையும் பொருட்டுப் பங்கு 1க்கு ரூபாய் 25 வீதம் 40,000 பங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால், ஒவ்வொரு சுதேசாபிமானியும் இக்கம்பெனியில் பங்காளியாகி லாபத்தையடைந்து நமது சுதேசத்தை மேன்மையான நிலைமைக்குக் கொண்டு வரும்படி பிரார்த்திக்கிறேன். *(விவேகபாநு, நவம்பர்-1909)*

**சுதேசிக் கப்பல் நிர்வாகம்:**

சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை நடத்துவதற்கு இயக்குநர் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. நிறுவனத் தலைவராக பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர் நியமிக்கப்பட்டார். நான்காம் தமிழ்ச் சங்கம் என்றழைக்கப்படும் தமிழ்ச்சங்கத்தை மதுரையில் நிறுவியவர் இவர். சேலம் சி. விஜயராகவாச்சாரியார் சட்ட ஆலோசகராக இருந்தார். கந்தசாமி கவிராயர், பம்பாய் வணிகர் கே.ஜெ. முகமது பக்கீர் சேட் ஆகியோர் பெரும் பங்குகளை வாங்கி உதவினர்.

இந்த நிறுவனத்தின் முதன்மையான நோக்கமாக கப்பல் கட்டும் தொழிலை பயிற்றுவிப்பது. குறிப்பாக மாணாக்கர்களுக்கு கப்பல் கட்டும் தொழிலை முறைப்படி முறையான கல்வியாக போதிப்பது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று Maritime University-யே கடல்சார் அறிவுப் புலத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளதை நினைத்துப் பார்க்கும்போது வ.உ.சியின் தொலைநோக்குச் சிந்தனையை உணரலாம்.

**சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி (லிமிட்டெட்), தூத்துக்குடி**

*1. இந்தக் கம்பெனியானது 1882ம் ஷரத்து "இந்தியன் கம்பெனி ஆக்டு'ப்படி 1906 அக்டோபர் மீ 16 தேதியில் செய்யப்பெற்றது.*

*2. ரிஜிஸ்டர் இந்தக் கம்பெனிக்கு மூலதனம் ரூ.10,00,000. இம் மூலதனம் பங்கு 1க்கு ரூ.25 வீதம் 40,000 பங்குகளாக இந்தியா, இலங்கை முதலிய ஆசியாக் கண்டத்துத் தேசத்தார்களிடமிருந்து சேர்க்கப்படும். மூலதனம் வேண்டும்போது அதிகரிக்கப்படும். பங்காளிகள் அவரவர்கள் பங்குத் தொகை மட்டில் உத்தரவாதிகள்.*

*3. இக்கம்பெனியின் உத்தியோகஸ்தர்கள்:*

**அக்கிராசனர்**

*ஸ்ரீமான். பொ.பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள், பாலவநத்தம் ஜமீன்தார், இராமநாதபுரம், மதுரை.*

**டயரெக்டர்கள்**

*1. மகா-ள ஸ்ரீ பி.வெங்கிட்டராமாநுஜலு நாயுடுகாரு, பேங்கர், தூத்துக்குடி*
*2. சி.விஜயராகவாச்சாரியாரவர்கள் பி.ஏ., வக்கீல், சேலம்*
*3. ஏ.சுந்தர சாஸ்திரியாரவர்கள், பி.ஏ.பி.எல்., திருநெல்வேலி பாலம்*
*4. என்.ஏ.வி.சோமசுந்தரம் பிள்ளையவர்கள், பி.ஏ.பி.எல்., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி பாலம்*
*5. எம்.டீ. தேவதாஸ் பிள்ளையவர்கள். பி.ஏ.பி.எல்., பாளையங்கோட்டை*
*6. டி.எஸ்.சுப்பிரமணிய பிள்ளையவர்கள், சேர்மேன், சிவ தேவஸ்தானம் கமிட்டி, திருநெல்வேலி*
*7. மகாளஸ்ரீ சி.சு.வ.கிருஷ்ண பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி.*
*8. அ.மு.ம. அருணாசலம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி.*
*9. அண்ணாசாமி ஐயரவர்கள், பிளீடர், தூத்துக்குடி*
*10. சி.த.ஆ.ஆறுமுகம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி*
*11. அ.சு.வே. வேலாயுதம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி*
*12. வ.அ.ஆ.ஆதிநாராயணஞ் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி*
*13. வ.அ.வெ.சு. வெங்கிடாசலஞ் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி*
*14. ந.சு.தெய்வநாயகம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி*

15. ஏ.சி.வ.திருச்சிற்றம்பலம் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
16. ஏ.வி.ஆர்.ஏ. அடைக்கப்பச் செட்டியாரவர்கள், வியாபாரம், கொழும்பு
17. ஏ.எம்.சைய்யத் இப்ராகிம் அவர்கள், வியாபாரம், கொழும்பு
18. கி.சோலைமலைத் தேவரவர்கள், வியாபாரம், வைத்தீஸ்வரன்கோயில்
19. திரு. நாராயண பிள்ளையவர்கள், கைவிழாஞ்சேரி, சீர்காழி
20. ரி.சிதம்பரநாத முதலியாரவர்கள், கைவிழாஞ்சேரி, சீர்காழி
21 வி.ஜி.ரி.முத்துசாமி செட்டியாரவர்கள், சீர்காழி
22. டி.எஸ்.குப்புசாமி பிள்ளையவர்கள், தாடாளன் கோவில், சீர்காழி
23. D.அனுமந்த செட்டியாரவர்கள், சோமவார்பேட்டை, குடகு
24. எஸ். இராமசாமி பிள்ளையவர்கள், கன்னப்பாடி (ரூவன்வாலா)
25 A. அசனுசைன் இராவுத்தரவர்கள், திண்டுக்கல்
26. சீனி அசனுசை இராவுத்தரவர்கள், இராமனாதபுரம்
27. A. சோமசுந்தரம் அவர்கள், எம்.ஏ., கூடலூர்
28. W. ஸ்ரீநிவாச அய்யங்காரவர்கள், சென்னபட்டனம்
29. அண்ணான் திருமலை அய்யரவர்கள், சேலம்
30. பிட்டா இராமசாமி அய்யரவர்கள், சேலம்
31. A. அருணாசலம் செட்டியாரவர்கள், சேலம்

**செக்ரெட்டேரிகள்**

எஸ்.டி.கிருஷ்ண அய்யங்காரவர்கள், பி.ஏ.பி.எல்., தூத்துக்குடி, கௌரவ காரியதரிசி வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள், தூத்துக்குடி, துணைக்காரியதரிசி.

**ஆடிட்டர்கள்**

பி.கே.இராமய்யரவர்கள், பி.ஏ.பி.எல்., கௌரவ ஆடிட்டர், திருநெல்வேலி பாலம்.

4. கம்பேனியின் ரிஜிஸ்டரான ஆபீஸ் தற்காலம் தூத்துக்குடி பீச்சு ரோடு 4ம் நிர் கட்டிடத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

5. இக்கம்பேனி ஏற்படுத்தியதின் முக்கிய நோக்கங்கள்: தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் சுதேசிய ஸ்டீமர்கள் நடைபெறாத துறைமுகங்கட்கும் பிரயாணத்தையும் வியாபாரத்தையும் சௌகரியப்படுத்தவும் சகாயப் படுத்தவும் தக்க ஸ்டீமர்கள் நடைபெறும்படி செய்தல், இந்தியர்களையும் இலங்கையர்களையும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களையும் கப்பல் நடாத்தும் தொழிலில் பழக்குவித்து அதன்மூலம் வரும் லாபத்தையடையும்படி செய்து, இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களுக்கும் கப்பல் நடாத்துந் தொழிலையும் கப்பல் நிர்மாணஞ்செய்யும் தொழிலையுஞ் செய்து காட்டிக் கற்பித்தல், இந்திய இலங்கை மாணவர்க்கும் மற்றும் ஆசியாக் கண்டத்து மாணவர்க்கும் கப்பலோட்டுந்தொழிலையும் கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலையும் சாஸ்திர சம்பந்தமாகக் கற்பிக்கும் கலாசாலைகள் ஏற்படுத்தல், கப்பல் நடாத்துந்தொழிலிலும் வியாபார முறையிலும் இந்தியர்கள் இலங்கையர்கள் முதலிய ஆசியாக் கண்டவாசிகளுக்குள் ஐக்கிய பாவனையையுண்டுபண்ணி ஒற்றுமையாக உழைக்கச் செய்தல், பற்பல வியாபார ஸ்தலங்களிலுள்ள வியாபாரங்கட்கடுத்த கொள்வன கொடுப்பன தெரிந்து கொள்வதற்காக இந்தியா இலங்கை முதலிய ஆசியாக் கண்ட தேசத்தவர்களை ஏஜெண்டுகளாக நியமித்தல், ஸ்டீமர்கள், ஸ்டீம் லாஞ்சுகள், படகுகள் முதலியன நிர்மாணஞ் செய்வதற்கும் அவைகளைச் செப்பனிடுவதற்கும் கத்தப்படுத்துவதற்கும், துறைகளேற்படுத்தல்; கம்பெனியார் தீர்மானிக்கும் சுதேசியக் கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் நடத்துதல் முதலியனவாம்.

6. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் இந்திய துறைமுகங்கட்கும் பிரயாணமும் வியாபாரமும் அபிவிருத்தியான நிலைமையிலிருப்பதால் கம்பெனியின் செலவும் ரிசர்வ் பண்டுக்கு வைத்துக் கொள்ளும் தொகையும் நீக்கி பெரியதோர் ஈவு கிடைக்குமாறு கணக்கிடப்பட்டிருக்கிறது.

7. 100 பங்கு எடுக்கிற பங்காளிகள் டயரெக்டர்களாவதற்கு பாத்தியதையுடையவர்கள்; ஆனால் டயரெக்டர்கள் வருஷத்துக்கொரு தடவை பங்காளிகளின் மீட்டிங்கில் தெரிந்தெடுக்கப்படுவார்கள். ஆர்டினேரி மீட்டிங்கில் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

8. எடுக்கப்படும் பங்குகளின் மொத்தத் தொகையில் ஐந்திலொரு பங்குத்தொகை முன் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். பாக்கிப் பங்குத் தொகை கம்பேனியார் வேண்டுங் காலங்களில் செலுத்தப்பட வேண்டும்.

9. கம்பேனியின் நன்மைக்காகவும், லாபத்துக்காகவும் பங்காளிகள், கம்பேனியின் ஸ்டீமர்களிலேயே பிரயாணமும், ஏற்றுமதி, இறக்குமதியும் செய்யவேண்டும்.

10. கம்பேனியின் பங்குகளை மற்ற சொத்துக்களைப் போல் அடமானம் கிரயஞ் செய்யலாம்; ஆனால் பணம் ஒரு பங்காளிக்கும் கம்பேனியிலிருந்து வாபஸ் கொடுக்கப்பட மாட்டாது.

11. கம்பேனிக்குக் கிடைக்கும் லாபத்தொகையில் கம்பேனிக்கு ரிசர்வ் பண்டாக வைத்துக் கொண்டது போக மீதத் தொகையைப் பங்காளிகளுக்கு அவர்கள் பங்கு வீதாசாரப்படி பகுந்து கொடுக்கப்படும்.

12. கம்பேனியின் விதிகளடங்கிய புத்தகமும், மிமோரண்டமும் அப்ளிக்கேஷன் பாரங்களும் தூத்துக்குடி கம்பேனி ஆபீசிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விதிகளடங்கிய புத்தகம் மிமோரண்டம் இவைகளின் கிரயம் ரூ.0.80

13. சகல மணியாடர்களும் கரஸ்பாண்டன்ஸ்களும், அப்ளிக்கேஷன்களும் தூத்துக்குடி யிலிருக்கும் கம்பேனியில் செக்ரட்டேரி அல்லது அசிஸ்டெண்டு செக்ரட்டேரியர்களுக்கு அனுப்பவேண்டும்.

14. சுமார் 25,000 பங்குகள் வரை இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் அப்ளிக்கேஷன் விரைவாக வந்து கொண்டேயிருக்கின்றன. தேசாபிமானமுள்ள இந்தியா, இலங்கை முதலிய ஆசியா கண்டத்துத் தேச கனவான்கள் கம்பேனியில் அதிகப் பங்குகள் எடுத்துதவிபுரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

எஸ்.டி.கிருஷ்ணய்யங்கார், கௌரவ காரியதரிசி, தூத்துக்குடி, 24-09-1907.

**குத்தகைக்கு கப்பல்:**

சுதேசிக் கப்பல் நிறுவனத்திற்கு என்று சொந்தக் கப்பல் ஏதுமில்லை. வாங்கவும் இயலவில்லை. அதனால் 'ஷாலைன் ஸ்டீமர்ஸ்' என்ற கம்பெனியிடமிருந்து கப்பல்களைக் குத்தகைக்கு வாங்கி ஓட்டினார்கள். பிரிட்டிஷாருக்கு இது பிடிக்கவில்லை. பல இடையூறுகள் செய்தனர். ஷாலைன் ஸ்டீமர் கம்பெனியின் உரிமையாளர் எஸ்ஸாஜி பாஜ்பாய் என்பவரை பிரிட்டிஷ் நிறுவனம் மிரட்டிப் பணியவைத்துவிட்டது. குத்தகைக்கு கொடுக்கப்பட்ட கப்பல்களை ஷாலைன் நிறுவனம் திரும்பப் பெற்றுக் கொண்டது. சொந்தமாகக் கப்பல் அல்லாமல் வெள்ளையர்களின் கப்பல் நிறுவனத்தை எதிர்த்து வணிகம் நடத்திடமுடியாது என்பதனை வ.உ.சி உணர்ந்தார். புதிய கப்பல் வாங்கிடப் பணம் திரட்டினார்.

**சொந்தக் கப்பல் வாங்க நிதி திரட்டுதல்**

தூத்துக்குடி பகுதி வணிகர்கள் முடிந்த அளவுக்கு சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பண உதவிகளைச் செய்தார்கள். ஆனால் அது போதுமானதாக இல்லை. தமிழகம் முழுவதும் அலைந்து வ.உ.சி நிதி திரட்டினார். தேனி மாவட்டம் கோம்பையில் வாழ்ந்த உ.ம.சே. முகைதீன் பிள்ளை சாகிப், இவர் வ.உ.சி, சுப்பிரமண்ய சிவா, சர்க்கரைச் செட்டியார், மகாகவி பாரதியார் முதலான சுதந்திரப் போராட்ட வீரர்களின் நண்பர். அவர் தேனி வட்டாரத்தில் நிதி திரட்டிக் கொடுத்தார்.

பம்பாய், கல்கத்தா உள்ளிட்ட மிகப் பெரிய நகரங்களுக்குச் சென்று சிதம்பரனார் பணம் திரட்டினார்.

வ.உ.சி சுதேசிக் கம்பெனிக்குப் பணம் திரட்டச் சென்றபோது 'மீண்டும் தமிழகம் திரும்பினால் கப்பலுடன் தான் வருவேன். இல்லையென்றால் அங்கேயே கடலில் விழுந்து உயிர்விடுவேன்' என்று சபதம் செய்துவிட்டு வடநாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

வ.உ.சி பம்பாய் சென்றபோது, அவரது ஒரே மகன் உலகநாதன் நோய்வாய்ப்பட்டு இருந்தார். மனைவி மீனாட்சி கர்ப்பிணியாக இருந்தார். 'இவர்களை இறைவன் பார்த்துக் கொள்வான்' என்று வ.உ.சி கூறியபடி தன் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

**இரண்டு கப்பல்கள்:**

பல போராட்டங்களுக்குப் பின்னர் வ.உ.சி இரண்டு கப்பல்களை வாங்கினார். எஸ். எஸ் காலியா என்ற கப்பல் மே 16 அன்றும், எஸ். எஸ். லாவோ என்ற கப்பல் ஜூன் 11 அன்றும் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தன. 'லாவோ' என்ற கப்பல் வ.உ.சியின் நண்பர் வேதமூர்த்தி என்பவரின் உதவியுடன் பிரான்ஸ் நாட்டில் இருந்து வாங்கப்பட்டது. இரண்டும் நீராவி இயந்திரம் பொருத்தப்பட்டது. கப்பலின் முகப்பில் 'வந்தே மாதரம்' என்று எழுதப்பட்ட கொடியைக் கட்டிப் பறக்கவிட்டார். இரண்டு கப்பல்களும் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே பயணம் செய்தன.

இந்த இரண்டு கப்பல்களிலும் 42 முதல் வகுப்புகள், 24 இரண்டாம் வகுப்புகள், 1300 சாதாரண வகுப்புகள் என மொத்தம் 1366 இருக்கைகளும், 4000 டன் சரக்கு மூட்டைகள் ஏற்றும் வசதிகளுடன் இருந்தன.

தூத்துக்குடியில் இருந்து கொழும்புவிற்கு 4 அணா மட்டுமே வ.உ.சியின் சுதேசிக் கப்பலில் பயணக் கட்டணம். ஆங்கிலேயக் கம்பனியோ 4 ரூபாய் கட்டணம் வசூலித்தது. மேலும் சரக்கு மூட்டைகளுக்குத் தனிக் கட்டணம்!

இந்த இரண்டு கப்பல்களின் வருகையால் மகிழ்ச்சி அடைந்த பாரதியார் தாம் நடத்தி வந்த 'இந்தியா' இதழின் (26, மே 1927) முகப்பில் ஒரு கருத்துப்படம் வெளியிட்டு 'வெகு காலமாய் புத்திரப் பேறின்றி, அருந்தவம் செய்துவந்த பெண்ணொருத்தி ஏக காலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால் எத்தனை அளவற்ற ஆனந்தத்தை அடைவாளோ அத்தனை ஆனந்தத்தை நமது பொதுமாதாவாகிய பாரததேவியும் இவ்விரண்டு கப்பல்களையும் பெற்றமைக்காக அடைவாரென்பது திண்ணமே' என்று குறிப்பும் எழுதினார். வ.உ.சிக்கும் அவருக்கு உதவியவர்களுக்கும் பாராட்டுத் தெரி-வித்திருந்தார்.

தூத்துக்குடி மற்றும் கொழும்பு இடையே அமைந்த இந்தக் கப்பல் சேவை வணிகம் அல்ல; எதிர்ப்புக்குரல்: போராட்ட முனைப்பாகவே கருதப்பட்டது. இதனால் வ.உ.சியின் 'பாரிஸ்டர் பட்டம்' பறிக்கப்பட்டது. அப்போதிருந்த திருநெல்வேலி ஆட்சியர் பிரிட்டிஷாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் இந்தப் பகுதியில் குறிப்பாக வ.உ.சி கப்பல் போக்குவரத்தைத் தொடங்கிய பின்பு, மக்களிடையே சுதந்திரப் போராட்ட உணர்வு மேலோங்கியது என்று தெரிவித்துள்ளார்.

வ.உ.சியின் கப்பல் போக்குவரத்து நிறுவனம் இந்தியரால் அமைக்கப்பட்ட முதல் விரிவான கப்பல் போக்குவரத்து சேவையாக அமைந்ததும், இதற்கு மக்கள் பெரும் ஆதரவு அளித்ததும்தான், பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு அச்சத்தை ஏற்படுத்தியது!

பிரிட்டிஷ் கப்பல் நிறுவனம் பெரும் பாதிப்பு அடைந்தது. முதலில் வ.உ.சிக்கு அழுத்தமும் தொந்தரவும் கொடுத்தனர். வ.உ.சிக்கு ஒரு லட்சம் ரூபாய் தருவதாகவும், சுதேசி கப்பல் கம்பெனியை மூடிவிடும்படியும் ஆசை காட்டினர். வ.உ.சி தமது கொள்கையில் உறுதியாக இருந்தார்.

**கட்டணக் குறைப்பு**

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி பயணக் கட்டணத்தைப் பாதியாகக் குறைத்தது. வ.உ.சியும் கட்டணத்தைக் குறைத்தார். பின்னர் மீண்டும் பிரிட்டிஷார் கட்டணத்தை பாதியாகக் குறைத்தனர். கடைசியில் இலவசப் பயணம் என்று அறிவித்தனர். அத்துடன் இலவசப் பயணம்

செய்பவர்களுக்கு 'ஆளுக்கு ஒரு குடையும் இலவசம்' என்றனர். அத்துடன் சுதேசிக் கப்பல் நிறுவனத்திற்கு பல தொந்தரவுகளைக் கொடுத்தனர். சுதேசிக் கப்பல் ஊழியர்களை ஆசைவார்த்தை காட்டியும், அடக்குமுறையினாலும் கட்டுப்படுத்தினர்.

வ.உ.சி மனம் தளராமல் இதை எதிர்த்துப் போராடினார். 'சுதேசிக் கப்பலின் வெற்றி, உங்கள் வெற்றி. உங்களின் வெற்றி நம் நாட்டின் வெற்றி, வெள்ளையனிடம் ஏமாந்து விடாதீர்கள். சுதேசிக் கப்பல் இல்லாவிட்டால் மீண்டும் இஷ்டம் போல் கட்டணம் வசூலிக்கத் தயங்க மாட்டார்கள்' என்றார். தேசப் பற்று மிக்கவர்கள் சுதேசிக் கப்பலை ஆதரித்தனர்.

பிரிட்டிஷ் கப்பல் நிறுவனத்திற்கு ஆங்கிலேயே அரசு பல வழிகளிலும் உதவி செய்தது. ஆங்கிலேயர்களின் கப்பலில் மட்டுமே இந்தியர்கள் பயணம் செய்ய வேண்டும் என்று இந்திய அரசாங்க அதிகாரிகளுக்கு இரகசியக் கடிதம் அனுப்பியது. சுங்க அதிகாரிகள், மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் எனப் பலரும் பலவிதமான தொல்லைகளைத் தொடர்ந்து வ.உ.சிக்கு ஏற்படுத்தினர். சுதேசிக் கப்பல், பிரிட்டிஷ் கப்பலோடு மோத வந்தது என்று நீதிமன்றத்தில் பொய்க் குற்றம் சாட்டப்பட்டது. வ.உ.சி தன்னுடைய பேச்சாற்றலால் வாதாடி அந்த வழக்கிலும் வெற்றி பெற்றார்.

ஆங்கிலேய அரசு, சுதேசிக் கப்பல் நிறுவனத்திற்கு மாதம் ரூபாய் 40,000 நஷ்டம் ஏற்படச் செய்தனர். வ.உ.சி யின் சுதேசிக் கம்பெனியின் கூட்டாளிகளில் சிலர் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் ஆசை வார்த்தைகளுக்கு அடிமைப்பட்டு, விலை போய்விட்டனர். நாளுக்கு நாள் கடன் அதிகரிப்பு, ஊழியர்கள் செய்த ஊழல் சுதேசிக் கப்பலைத் தொடர்ந்து இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளியது!

இந்த நிலையில் கம்பெனியைக் காப்பாற்ற வேண்டுமானால் பொதுமக்களிடம் இருந்து நிதி திரட்டியாவது கம்பெனியிடம் கொடுக்கவேண்டும் என்று இந்தியா பத்திரிகையில் பாரதி இவ்வாறு எழுதுகிறார் ''கங்கை வெள்ளம் வேண்டுமென்று வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் பகீரதன் தலை மீது ஒரு சிறிய தூற்றல் உதிர்ந்தது போலச் சென்ற 10 தினங்களில் நமக்து சுதேசிக் கப்பல் தரும நிதிக்குக் கீழே குறிப்பிடப் பட்டிருக்கும் அதி சொற்ப தொகை மட்டும் சேர்ந்திருக்கிறது. ஆனால், இது பெரும்பாலும் புதுச்சேரியிலே மட்டும் சேர்ந்தது. அரையணாவும் காலணாவுமாக வசூலிக்கப்பட்டது. அடுத்த வாரத்தில் இன்னும் கொடுப்பதாக பல நண்பர்கள் வாக்களித்திருக்கிறார்கள். புதுச்சேரியைப் போல இத்தனை சொற்பத் தொகையேனும், தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் கிராமத்திலும் வருமானால், நமது நோக்கம் 10 தினங்களில் கைகூடிவிடும். ஆரம்பத்தில் தூற்றல்களாக இருந்த போதிலும், பகீரதன் கொண்டிருந்த தெய்வ பக்தியால் அவனுக்குக் கங்காப் பிரவாஹம் வந்தே தீர்ந்தது. சுதேசி கப்பல் கம்பெனியார் பாரத நாட்டுப் பொது ஜனங்களிடம் அழியாத பக்தி பூண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணமும் நிறைவேறியே தீரும்'' (இந்தியா பத்திரிக்கையில் பாரதி).

இந்த நேரத்தில் பிபின் சந்திரபாலின் விடுதலையைக் கொண்டாட ஆங்கிலேயே அரசு தடைவிதித்து இருந்தது. இதனை மீறி 09.03.1908 ஆம் நாள் தூத்துக்குடியில் சுமார் 20 ஆயிரம் மக்கள் கூடிய பொதுக்கூட்டத்தில் வ.உ.சி பேசினார். இதற்காக 12.03.1908 சிதம்பரனார் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டார். வ.உ.சியின் கைது மக்களிடையே பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

வ.உ.சி கைதுக்கு எதிராக தூத்துக்குடியில் 'கோரல் நூற்பாலை' மற்றும் 'பெஸ்ட் அண்ட் கம்பெனி' தொழிலாளர்கள் மிகப் பெரிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியானார்கள். இதுவே இந்தியாவின் முதல் அரசியல் வேலை நிறுத்தம். இந்த வழக்கில் வ.உ.சிக்கு 40-ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தீர்ப்பு நாட்டையே கொதிப்படையச் செய்தது. அதன் பின் மேல் முறையீட்டில் 10-ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.


வ.உ.சி உடல்நலிவுடன் சேர்ந்து மனமும் நலிவுற்றது. சுதேசிக் கப்பல் ஓராண்டு புள்ளிவிவரப்படி லாவோ கப்பல்; 115 பயணங்களில் 29,773 பேர் பயணித்தனர்; காலியா கப்பல் மேற்கொண்ட 22 பயணங்களில் 2,150 பேர் பயணித்ததாகவும் தெரிகிறது. இது பிரிட்டிஷாருக்கு எரிச்சலை ஏற்படுத்தியது 24.07.1908 அன்று நடுக்கடலில் வேறொரு கப்பலில் மோதிய வழக்கை பிரிட்டிஷார் கையில் எடுத்தனர். இதனால் சுதேசிக் கப்பல் நிர்வாகிகள் அச்சமடைந்தனர். பிரிட்டிஷாரின் அடக்குமுறைக்கு அடிபணிந்து விட்டனர். வ.உ.சி சிறையில் இருந்தபோது நிலைமையைச் சமாளிக்க இயலாமல் இவர்கள் இரண்டு கப்பல்களையும் விற்றுவிட்டனர். இதில் எஸ்.எஸ் காலியா கப்பலை வெள்ளையருக்கே விற்றுவிட்டனர். இதனை அறிந்து பெரிதும் வேதனைப்பட்டார் வ.உ.சி.

1912-ஆம் ஆண்டு விடுதலை அடைந்தபோது சிதம்பரனாரின் வழக்கறிஞர் உரிமம் பறிக்கப்பட்டது. இதனால் அவரால் வழக்கறிஞர் தொழிலைச் செய்ய முடியவில்லை. சுதேசிக் கப்பல், தொழிற்சங்கப் பணிகளுக்காக சொத்துகளையும், பொருள்களையும் இழந்திருந்தார். வறுமையின் பிடியில் சிக்கியிருந்தார். பின்னர் ஈ.எச். வாலேஸ் என்ற ஆங்கில அதிகாரி வழக்கறிஞர் உரிமத்தைத் திரும்பத் தந்தார். இதன் நன்றியாகத் தான் தன்னுடைய கடைசி மகனுக்கு (வாலேஸ்வரன்) என்று பெயர் வைத்தார். 1924-க்குப் பிறகு கோவில்பட்டி, தூத்துக்குடியில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1912-இல் விடுதலையான பின்பு கோவை, சென்னை உள்ளிட்ட நகரங்களில் பல்வேறு தொழிற்சங்கங்களை உருவாக்கினார். மனச்சோர்வைப் போக்க முழுவதுமாக தன்னை இலக்கியத்தில் ஈடுபடுத்திக் கொண்டார்.

●

கட்டுரையாளர், பேராசிரியர் மற்றும் இயக்குநர்,
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,
தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம், சென்னை.

கட்டுரை



# சங்க இலக்கிய திணை மயக்கம்: சமகாலப் புரிதல்

முனைவர் சி. முத்துகந்தன்

தமிழ்மொழியில் பல்வேறு இலக்கிய வகைமைகள் உள்ளன. அவற்றுள் முதலில் தோன்றிய இலக்கியம் சங்க இலக்கியம் ஆகும். இச்சங்க இலக்கியப் பாடல்களைத் திணைப் பாடல்கள் எனவும் கூறுவர். தமிழ் நிலம் சார்ந்த இத்திணைக் கோட்பாட்டை தமிழ் இலக்கியக் கோட்பாடாகவும் முதன்மைப்படுத்தலாம். திணை என்பது ஒழுக்கம் ஆகும். அந்தந்த திணைகளுக்கு உரிய ஒழுக்கம் முறையாக விளக்கப்பட்டுள்ளன. அவை அகத்திணை, புறத்திணை என இருவகையில் அமைகின்றன. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவை அகத்திணையில் முக்கியமானதாகும்.

தமிழ் மக்களுடைய திணை சார்ந்த இயற்கையான வாழ்க்கையினைக் கடினமான இலக்கண வரம்பிற்குள் ஏன் கொண்டு வந்தார்கள்? அதற்கான காரணம் என்ன? என்கிற கேள்வி இயல்பாகவே எழுகிறது. திணை என்பதைனைப் படித்த புலவரோ அல்லது அவருடன் இருக்கும் பாணரோ அல்லது அறிஞர் குழுவோ மன்றமாக (சங்கம்) உட்கார்ந்து பேசி பகுத்திருப்பார்களா? எங்கோ காட்டினுள் தேன் எடுத்து இயற்கையோடு இயைந்து வாழ்ந்த குடும்பத்திற்கு இரவென்றும் பகல் என்றும் தெரியாது. கடலில் மீன் பிடித்தவர்களுக்கு நாம் உரிப்பொருளில் தான்

இருக்கிறோம் என்று பேசி இருப்பார்களா? என்கின்ற கேள்வியை முன் வைக்கலாம்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்கள் வாழ்க்கை நிலைகளைச் செழிப்பான இலக்கண நிலைக்குக் கொண்டு வந்த பிறகு அதற்குள் இருக்கிற ஒவ்வொரு பகுதிக்கும் ஆழ்ந்த பொருத்தமான கருத்துகளைச் சேர்க்க முடியும். அப்படியான ஆழ்ந்த கருத்துகளைப் புரிந்து கொள்ள அக்கால வாழ்க்கை நிலை அந்தச் சூழலில் இருந்த கொள்கைகள், கருத்து வேறுபாடுகளை அக்கால குழுக்களின் அறிவோடே புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் ஐந்து திணைகளையும் பல்வேறு துறைகளையும் சேர்த்துப் பார்க்கலாமா? அப்படிப் பார்க்க முடியுமா? அப்படித்தான் பார்க்க வேண்டுமா? என்கிற கேள்விகளை எழுப்ப வேண்டிய தேவையும் உள்ளது. இங்கு சங்க இலக்கியத்தில் உள்ள திணை மயக்கம், உள்ளுறை என்கின்ற இரண்டு கொள்கைகளை எப்படிப் பார்ப்பது? சமகாலத்தில் எப்படிப் புரிந்துக் கொள்வது? என்பதனை விளக்க முற்படுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திணை மயக்கம் என்பது**

''ஒரு நிலத்திற்கு உரிய காலம், உரிப்பொருள், கருப்பொருள், மற்ற நிலத்திற்குரிய அப்பொருளுடன் கலந்து வரப் பாடல் அமைக்க, அகம் புறம் என்ற திணைகள் ஒன்றோடு ஒன்று மயங்கி வருதல்'' என்று பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது அகப்புறப் பாடல் தன்மைக்கு அடிப்படையாக இருப்பதைக் காண முடிகிறது.

“திணைமயக் குறுதலுங் கடிநிலை இலவே
நிலன் மயங்குதல் இல்லென மொழிப
புலனன் குணர்ந்த புலமையோரே”
(தொல்.அகத்.நூ.958)

“எந்நிலம் மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாராயினும்
வந்த நிலத்தின் பயத்தவாகும்”
(தொல்.அகத்.நூ.965)

“உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே”
(தொல்.அகத்.நூ.959)

என்று தொல்காப்பிய நூற்பாக்களின் வழியாக திணை மயக்கம் குறித்த செய்திகளை அறியலாம்.

மேலும் இளம்பூரணர், "முதற்பொருளில் காலமும் கருப்பொருள்களும் தம்முள் மயங்கி வரும். உரிப்பொருள் மயங்கி வராது" என்றும் நச்சினார்க்கினியர், "ஒரு நிலத்தின்கண் இரண்டு உரிப்பொருள் மயங்கி வரும்" என்றும் இருவேறு கருத்தினைக் கொண்டுள்ளனர். நம்பியகப் பொருள், "தன் நிலத்தில் திணையோடு கூடிய இலக்கண முறைப்படி வராமல் பிறத்திணை ஓடி மயங்கியும் வரும்" என்றும் குறிப்பிடுகின்றது. திணை மயக்கம் குறித்த மேற்காணும் கூற்றுக்களைப் போலவே சங்ககாலப் புலவர்களும் மேலோட்டமான கருத்துக்களைச் சொல்லி இருப்பார்கள் என்பது நோக்கமல்ல. அவர்கள் அப்படி சொல்லவும் இல்லை என்பதனை நோக்க வேண்டி உள்ளது. காரணம் "வைதீக தாக்கம்" அல்லது "இடைச்செருகல்கள்" என்கிற அரசியலுக்கு முன்பிருந்த பார்வையோடு அணுக வேண்டியுள்ளது.

**திணை மயக்கத்தைப் போலவே உள்ளுறை குறித்து நோக்கும் போது**

நிலத்திலும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே (குறுந்-3)

என்னும் குறுந்தொகைப் பாடலடிகளின் வழி, தலைவன் மீது கொண்ட அன்பு, நிலத்தை விட, வானைவிட, கடலை விட ஆழமானது என்கிறாள் தலைவி. இதனை ஏ.கே. ராமானுஜம் அவர்கள் குறிஞ்சிப்பூ (பன்னிரண்டு வயது பெண்) போன்ற கால்களை உடைய பெண்ணைத் தலைவன் கூடினான் என்பதைக் காட்டுகிறது என்று குறிப்பிடுகிறார். இப்படியும் பார்க்க வாய்ப்பிருப்பதனையே ஏ.கே. ராமானுஜத்தின் கூற்று தெரிவிக்கிறது. ஆக இப்படியான உள்ளுறை என்பது சங்க காலத்திலேயே இருக்கிறது. அப்படியானால் ஐந்து அல்லது ஏழு திணைகள் பெரிது கிடையாது. அல்லது கரு, உரிப் பொருளும் பெரிது கிடையாது. இவற்றையெல்லாம் கடந்து பாடல்கள் படைக்கப்படுகிறது. அப்பாடலில் உள்ளுக்குள்ளாக மற்றொரு ஆழமான பொருள் இருக்கிறது. இதுதான் சங்கப் புலவர்களின் அறிவு நுட்பமாகும். இதுதான் சங்கப் புலவர்கள் நமக்குக் கொடுத்த மாபெரும் கொடையாகும்.

இப்படியாக திணை மயக்கம் என்றால் உள்ளுறையாக இருக்குமா? திணை மயக்கத்தில் உள்ளுறையே ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனச் சொன்னப் பூங்குன்றனாரின் கூற்றேயாகும். இப்பாடல் எழுதப்பட்ட காலகட்டத்தில் தமிழகத்தில் பல்வேறு இனக் குழுக்களும் மதக் கருத்துகளும் தத்துவங்களும் வெளிநாட்டார் புழக்கங்களும் பெருகி இருக்கின்றது எனலாம். இச்சூழலில் தமிழகத்தில் (நிலம்/மக்கள்) பரவியிருந்த கருத்துகளைப் புரிந்து கொள்வதற்கு ஒரு வகுப்பு முறைத் தேவையாக இருந்தது. அப்படி வந்ததுதான் திணையும் அது சார்ந்த பிரிவுகளும். ஆனால் இன்றைய தமிழ்ப் பரப்பில் எல்லா மக்களையும் ஒன்றாகப் பார்ப்பது அல்லது சேர்ப்பது என்பது கேள்விக்குரியதாகிறது. இங்கு தொழில் சார்ந்த வாழ்வு என்பது ஜாதி (வர்ணம்) சார்ந்த வாழ்வாக மாறி ஏற்றத்தாழ்வுகள் தடுக்கிறது. இப்படி இருப்பதுதான் இன்றைய நிலையில் உள்ளுறையாக அதாவது உள்நோக்கமாக இருந்து வருகிறது. இதனைத் தான் இன்றைய நிலையில் திணை மயக்கம் என்பதாகப் புரிந்து கொள்ள முடியும். அன்று திணை மயக்கம்

கூடாது. தனித்தனியாகத்தான் இருக்க வேண்டும் என்று யாராவது சொல்லி இருப்பார்களா? என்றால் நிச்சயமாக சொல்லிருக்கலாம். பிரிவினையை நிலைநாட்ட வேண்டும் என்று நினைப்பவர்கள் சொல்லியிருப்பார்கள். இன்றைக்கு வரைக்கும் அப்படித்தானே சொல்லியும் வருகிறார்கள். இங்கு அம்பேத்கரின் "இந்தியாவில் சாதி என்பது மக்களைச் செயற்கையாகக் கூறுபடுத்திப் பிரித்து அகமணம் புரியும் வழக்கத்தால் ஒன்று மற்றொன்றோடு இணைவ-திலிருந்து தடுத்து வரையறுக்கப்பட்ட பிரிவுகளாக ஆக்கியுள்ளது என்பதே இதன் பொருள்" என்கிற கூற்றினை இணைத்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழ்ச் சொல்லில் இன்றைக்கும் மக்களது பண்பாட்டுக் கூறுகள், மரபுகள் என இவற்றையெல்லாம் பிரித்து வைத்திருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளும் முற்போக்குவாதிகள் எல்லாம் திணை மயக்கும் கூடாது என்று சொல்லும் வகுப்பைச் சேர்ந்தவர்கள்தாம். ஆனால் செம்மொழித் தமிழின் பெருமையைப் பேசுபவர்கள் எல்லாம் திணை மயக்கத்தைத் தழுவாமல் இருந்தால் சங்க இலக்கியத்தின் உள்ளுறையைப் புரிந்தும் புரியாது இருப்பதைப் போல இருக்கின்றார்கள் என்றுதானே பொருள். அப்படிப்பட்டவர்கள் தமிழ் என்றும் தமிழ் உணர்வு என்றும் ஏன் தமிழ்த் தேசியம் என்றும் பேசி வீணடிக்கிறார்கள் என்றுதானே அர்த்தம். இங்கு, பரவலாக எல்லோராலும் மேற்கோளாகக் காட்டப்படும்,

"யாயும் யாயும் யார் ஆகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிந்தும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"
(– குறுந்–40)

என்னும் குறுந்தொகைப் பாடலில் வேறு வேறு குழுக்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். இருவரும் உறவும் அல்ல. இவர்கள் சந்தித்துக் கொள்வதிலும் பழகிக் கொள்வதிலும் எந்தவிதத் தடையும் இருக்கவில்லை. இப்படியான ஜனநாயகப்பட்ட வாழ்வியல் முறையிலிருந்து சங்க காலச் சமூகம் எப்படிப் பின்னாளில் வைதீக தாக்கம் பெற்றது. சங்கப் பாடலுக்குப் பின் எழுதப்பட்ட தொல்காப்பியத்தில் இந்த வருணத்தாருக்கு இந்தயிந்தத் தொழில் என்று பிரிக்கப்பட்ட செய்தியை ஏற்பாரும் மறுப்பாரும் உண்டு. அதாவது அகத்திணையியலில் ஓதல், தூது, பகை ஆகிய பிரிவும் மரபியலில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோரின் இயல்பும் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன.

சங்ககாலம் மிக இயல்பாகத் தன்னுடைய வாழ்க்கையை வடிவமைத்துக் கொண்டது. அக்கால வாழ்க்கையின் ஆரம்பத்தில் மேலோர் கீழோர் என்கிற ஏற்றத்தாழ்வைத் தூண்டிய சக்திகள் இருந்திருக்கவில்லை. ஆரம்பத்தில் இயற்கையாக வாழ்ந்து வரும் உணவு சேகரித்தவர்கள் அதற்காக வேட்டைச் சமூகமாக மாறி பின் அந்த அமைப்பில் இருந்து ஆநிரை சமூகமாக ஆன பின்பு வேளாண் சமூகமாகப் பரிணமித்தனர். பின்னரே இப்படியான ஏற்றத் தாழ்வுகளுக்குள் தமிழ்ச் சமூகம் ஆளானது. தமிழ்ப் பரப்பில் எல்லா மக்களையும் ஒன்றாகப் பார்ப்பது அல்லது சேர்ப்பது என்பது கேள்விக்குறியதாகிறது. இங்கு தொழில் சார்ந்த வாழ்வு என்பது ஜாதி சார்ந்த வாழ்வாக மாறாமல் ஏற்றத்தாழ்வுகள் தடுக்கிறது. இப்படியிருப்பது தான் இன்றைய உள்நோக்கமாக இருந்து வருகிறது. இந்த உள்நோக்கத்தினைத் தான் திணைமயக்கம் என்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும். அன்று திணைமயக்கம் கூடாது. தனித்தனியான நிலமாக குடி குலமாகத் தான் இருக்க வேண்டுமென்று யாராவது சொல்லி-யிருப்பார்களா? நிச்சயமாக சொல்லியிருக்கலாம். பிரிவினையை நிலை நாட்ட வேண்டும் என்று நினைப்பவர்கள். வைதீகப் புலவர்கள் இடைச்செருகல் வித்தகர்கள் அதனைச் செய்திருக்கலாம். இன்றைக்கும் இப்படித்தானே சொல்லியும் பிரிவினையை நிகழ்த்தியும் வருகிறார்கள். இத்தகையச் சூழலில் தமிழ் என்றும் தமிழ் உணர்வென்றும் தமிழ்த் தேசியம் என்றும் பேசுவது வீண் என்பதாகவேபடுகிறது. இப்படியாக இடைச்செருகல் அல்லாத வைதீகத் தாக்கம் அல்லாத சங்கத் திணைமயக்கம் சார்ந்த விவாதங்களைத் தொடர்ந்து முன்வைப்பதே சிறப்புடையதாகும்.

ஆக, திணை மயக்கம் இயல்பானது. உலகம் முழுவதும் இஃது இயல்பாகவே இருக்கிறது. பேராசிரியர் பா.தயானந்தன் அவர்களின், அண்மையில் தமிழ்நாட்டில் இருக்கும் 12 ஆதிவாசி குழு மற்றும் 19 மற்ற குழுக்களின் Y-குரோமோசோமை ஆராய்ந்தார்கள். என்னுடைய H-M52 அடையாள முத்திரை 30 குழு ஆண்களிடம் இருக்கிறது. எங்க எல்லாருக்கும் மூதாதையர் சுமார் 25000 வருடத்துக்கு முன்பு பிறந்த ஒருத்தர்தான். 30 குழுவப் பட்டியல் போட இடமில்லை, கொஞ்சம் மட்டும் பாருங்கோ: புலையர், குறும்பர், தோடர், கோட்டா, பறையர், வன்னியர், பள்ளர், யாதவர், பிறமலைக்கள்ளர், நாடார், சௌராஷ்டிரா பார்ப்பனர், ஈழவர், தமிழ் ஜைனர் போதுமா!.... சுமார் 70000 ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறு குழு ஆப்பிரிக்காவ விட்டு வெளியே வந்து உலகமெங்கும் குடியேறினார்கள். வந்தவர்களுடைய தோல் எல்லாம் அப்போ கருப்புதான். வெள்ளை, சிகப்பு, மஞ்சள், மாநிறம் இதெல்லாம் ஒரு 60,000 வருசத்து கதைதான். ஆப்பிரிக்காவை விட்டு வெளிவந்த மக்கள், இந்தியா வழியாக ஆஸ்திரேலியாவுக்கு 50ஆயிரம் வருஷத்துக்கு முன்னாடியே

போய்விட்டார்கள். இந்தியக் கண்டத்திற்குள் மக்கள் வருவதும் போவதும் திரும்ப வருவதும் கலப்புமணம் செய்வதும் மிக சாதாரணமாக நடந்த நல்ல கதை. இதில் விளைந்த 50,000 வர்ணங்கள்தான் இன்றைய இந்தியா. ஆப்பிரிக்கக் கண்டத்தையடுத்து உலகிலேயே அதிக மரபணு வேற்றுமை உள்ள நாடு இந்தியாதான். அண்மையில் வெளிவந்த ஒரு முக்கிய ஆய்வின் முடிவு: இன்றைக்கு முன் சுமார் 4200 ஆண்டு முதல் 1900 ஆண்டு வரை இந்தியா முழுவதும் கலப்பு மணங்கள் நடந்து கொண்டிருந்தன. கலப்பற்ற ஜாதியென்றோ, குலமென்றோ, கோத்திரமென்றோ, தமிழ்க்குடியென்றோ ஒன்றுமே-யில்லை (செந்தலைக்குருவி, அக்-2013).

என்னும் இக்கூற்றே சங்க இலக்கியத் திணை மயக்கத்தையும் சமகாலப் புரிதலையும் ஏற்படுத்தியிருக்கும். குறிப்பாக, எந்தத் திணையிலும் எந்த மனிதரல்லாத உயிரும் குடிநீரில் எதையும் கலக்காது. புரிதலற்ற மனிதக் கூட்டமே இந்த இழிவைக் கலக்கும். புரிதல் பெற்றால் மனிதக் கூட்டமே இந்த அவலத்தையும் போக்கும்.

### துணை நின்ற நூல்கள்


1. அம்மன்கிளி முருகதாஸ், சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும், குமரன் புத்தக இல்லம், சென்னை 2006.
2. கோபாலையர், தி.வே., தமிழ் இலக்கணப் பேரகராதி, பொருள், அகம் - 3, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2013 (மு.ப.)
3. நாராயணன்.இரா, சங்க இலக்கிய அரசியல்,காவ்யா பதிப்பகம், 2007.
4. பழனிவேலு.கே, தொல்காப்பியத் திணைக் கோட்பாடு: திறனாய்வியல் நோக்கு, மாற்று வெளியீட்டகம், 2018.
5. மாதையன், பெ., அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், பாவை பப்ளிகேசன்ஸ், சென்னை.
6. ராஜ் கௌதமன், தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு, என்.சி.பி.எச். 2019.
7. ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், தமிழினி, சென்னை, 2006.
8. ராஜம்.வீ.எஸ், சங்க பாடல்களில் சாதி, தீண்டாமை இன்ன பிற... மணற்கேணி, சென்னை, 2015
9. மாணிக்கம்.வ.சுப, தமிழ்க் காதல், மெய்யப்பன் தமிழாய்வகம், 2002.
10. ஷாஜகான்.வெ.மு, திணை வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,2012
11. செந்தலைக்குருவி, தலையங்கம் - பா. தயானந்தன். அக்-2013


●


கட்டுரையாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி




04-02-2023 அன்று முசிறியில் மூன்றாமாண்டு புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. புத்தகக் கண்காட்சியினை காவல்துறை ஆய்வாளர் யாஸ்மின் திறந்து வைத்தார். ஒன்றியப் பெருந்தலைவர் மாலா ராமச்சந்திரன், நகர்மன்றத் தலைவர் கலைச்செல்வி சிவக்குமார், முசிறி இன்ஸ்பயர் லயன்ஸ் சார்பில் தலைவர் பல்லவிதுரை, சாசனதலைவர் கே.கே.பன்னீர்செல்வம், வட்டாரத்தலைவர் சீனிவாசன், *MIT* கல்வி நிறுவன *A.O. Ln.*பாலசுப்பிரமணியன், திருமதி மகாலட்சுமி குணசேகரன், திருமதி கீதா, திருமதி சித்ரா பாலச்சந்திரன், முதுகலை ஆசிரியர் சிவராஜ், நூலகர் ஆனந்த கணேசன், தனலட்சுமி, செந்தில் குமார், என்சிபிஎச் திருச்சி மண்டல மேலாளர் குமார், கிளை மேலாளர் சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.